# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 12 Issue - 08

ஆகஸ்டு 2019 - துல்கஃதா - துல்ஹஜ் 1440




## 23 வருடங்களுக்கு பிறகு 6 முஸ்லிம்கள் அப்பாவிகள் என விடுதலை

## 25 வருடங்களுக்கு பிறகு 11 முஸ்லிம்கள் அப்பாவிகள் என விடுதலை

### 12 வருடங்களுக்கு பிறகு 5 முஸ்லிம்கள் அப்பாவிகள் என விடுதலை

## தமிழகத்தில் தொடரும் NIA கைதுகள்

## கள ஆய்வு



பால பிரஜாதிபதி அடிகளாருடன் ஒரு சந்திப்பு

بسم الله الرحمن الرحيم

எவர்கள் அறிவில்லாமல் மூடத்தனமாக தம் குழந்தைகளை கொலை செய்தார்களோ, இன்னும் அல்லாஹ் தங்களுக்கு ஒன்றை அனுமதித்திருந்து, அதை அல்லாஹ்வின் மீது பொய்யைக் கூறி ஆகாதென்று தடுத்து கொண்டார்களோ, அவர்கள் வழி கெட்டு விட்டனர். நேர்வழி பெற்றவர்களாக இல்லை. (6:140)


04 NIA வுக்கு எதிரான நடவடிக்கையில் வைகோ மற்றும் திருமாவளவன் அவர்களுடன் சந்திப்பு

13 NIA ஓர் அறிமுகம்

18 அப்பாவிகளுக்கு தண்டனை 23 வருடங்கள்

21 தொடர்ந்து முஸ்லிம்கள் அப்பாவிகள் என விடுதலை

26 NIA கைதுகள் உண்மை என்ன? நேரடி கள ஆய்வு

34 இம்ரானின் அனுபவங்கள் எவருக்கும் வரவேண்டாம்

40 பால பிரஜாதிபதி அடிகளாருடன் ஓர் சந்திப்பு

46 சிலுவைப் போர் 2.0

56 ரஹ்மத் நகர் (எ) மீனாட்சிபுரம் மதமாற்றமா? மனமாற்றமா??



# வைகறை வெளிச்சம்

ஆகஸ்டு 2019 - துல்கஃதா - துல்ஹஜ் 1440

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only


http:/www.facebook.com/vaigaraivelicham


தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.240.

வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.




VAIGARAI VELICHAM

52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.

+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

# NIA வுக்கு எதிரான நடவடிக்கையில் வைகோ மற்றும் திருமாவளவன் அவர்களுடன் சந்திப்பு



தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்டின் பொருளாளரும் ஜமாஅத்துல் உலமா சபை துணைப் பொதுச் செயலாளருமான இல்யாஸ் ரியாஜி அவர்களும் ஜமாஅத்துல் உலமா சபை நிர்வாகிகளும் சேர்ந்து சமீபத்தில் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் வை.கோ. அவர்களை சந்தித்து தமிழகத்தில் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு நிறுவனம் அப்பாவி முஸ்லிம்களை தீவிரவாதிகள் என்ற பெயரில் அடையாளப்படுத்தி கைது செய்து வருவது குறித்தும் ஏற்கனவே இந்தியா முழுமையும் இப்படி கைது செய்யப்பட்ட முஸ்லிம்கள் பல்வேறு கொடுமைகளை அனுபவித்த பின்னர் 10 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் கழித்து பின்னர் நிரபராதிகள் என நீதிமன்றத்தால் விடுவிக்கப்படுவது குறித்தும் எடுத்து கூறினார்கள்.

என்.ஐ.ஏ.வின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும். அப்பாவிகள் கைது செய்யப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து அறிக்கை விட கோரிக்கையும் அப்போது அவரிடம் முன் வைக்கப்பட்டது. இது சம்பந்தமான அறிக்கை ஒன்றும் வைகோ அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதே கையேடு சகோதரர் திருமாவளவன் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனை நாடாளுமன்ற அறிக்கை அனைவருக்கு பகிர்வதாக சகோ. திருமாவளவன் அவர்கள் கூறியிருந்தார்கள்.

பின்னர் இதே கோரிக்கையை முன் வைத்து தமிழ்நாடு இஸ்லாமிய இயங்கங்கள் மற்றும் கட்சிகள் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சகோ. வை.கோ அவர்களையும் சகோ. திருமாவளவன் அவர்களையும் சந்தித்ததனர்.

இந்த முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றியாக சகோ. வை.கோ அவர்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள். அதன்விவரம்பின்வருமாறு

என்.ஐ.ஏ. தகவல் அறியும் உரிமைச் சட்டத் திருத்தங்கள்

கண்டனத்துக்கு உரியவை. நாடாளுமன்றத் தேர்வுக் குழு ஆய்வுக்கு அனுப்புக!

**வைகோ அறிக்கை**



இந்திய ஜனநாயக அமைப்புகளின் ஆணி வேர்களை அறுத்து வீசிவிட்டு மெல்ல மெல்ல பாசிச சர்வாதிகாரத்தைப் படற விடுவதற்கு மத்திய பா.ஜ.க. அரசு முனைப்பாக இருக்கின்றது. மக்களவையில் நிறைவேற்றப்பட்ட தேசிய புலனாய்வு முகமைச் சட்டத் திருத்தம், மத்திய அரசுக்கு தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துதல் என்ற பெயரில் ஏதேச்சாதிகாரத்திற்கு வழி வகுத்துள்ளது கண்டனத்துக்கு உரியது.

என்.ஐ.ஏ. சட்டத்திருத்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ள வரையறுக்கப்பட்ட குற்றங்களுக்கானப் பட்டியலில் ஆள்கடத்தல், தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் உற்பத்தி அல்லது விற்பனை செய்தல், வெடி பொருட்கள் சட்டம் 1908ன் கீழ் வரும் குற்றங்கள், கள்ள நோட்டு அச்சிடுதல் ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. இனி தேசிய புலனாய்வு முகமைதான் இந்த குற்றச் செயல்களைப் பற்றி விசாரணை செய்யவோ, நடவடிக்கை எடுக்கவோ முடியும். மேற்கண்ட குற்றங்களைத் தடுக்க மாநில அரசுகளுக்கு உள்ள சட்ட அதிகாரங்களைப் பறித்து விட்டு, மாநில காவல்துறை தலைவருக்குக் கூட தகவல் கொடுக்காமல் குற்றவாளிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் மாநில அதிகாரங்கள் பறிக்கப்பட்டு, இருப்பது மட்டுமல்ல, சட்டம் - ஒழுங்கு பராமரிப்பும்கூட இனி என்.ஐ.ஏ. கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்படும்.

சிறுபான்மையினத்தவர், ஒடுக்கப்பட்டோர் மற்றும் அரசின் கொள்கைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பும் சமூகச் செயல்பாட்டாளர்களைக் கடுமையாக ஒடுக்கவும், என்.ஐ.ஏ. சட்டத் திருத்தம் மத்திய அரசுக்கு அபரிமிதமான அதிகாரத்தை அளிக்கிறது.

என்.ஐ.ஏ. சட்டத்திருத்தத்திற்கு எதிராக நாடெங்கும் எதிர்ப்புக் குரல் வலுப்பெற்று வரும் நிலையில், ஜனநாயக உரிமைகளைநசுக்கும் வகையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் -2005இல் திருத்தம் கொண்டு வந்திருக்கிறதுபா.ஜ.க. அரசு.

தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவுகள் 13, 16 மற்றும் 27 ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டத் திருத்தங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நோக்கத்தையே அழித்து ஒழிக்கும் வகையில் இருக்கின்றன.

மத்திய முதன்மை தகவல் ஆணையர்களாகவும், தகவல் அதிகாரிகளாகவும் நியமிக்கப்படுவோரின் ஊதியம் மற்றும் பணிக் காலம் நிர்ணயம் போன்றவற்றை மத்திய அரசே தீர்மானிக்கும் என்று சட்டத் திருத்தம் கூறுகிறது. இனி மத்திய அரசின் தயவில்தான் தகவல் ஆணையர்கள் பணியாற்ற வேண்டுமே தவிர, சுயேச்சையாகச் செயல்படுவதற்கு கடிவாளம் போடப்பட்டு இருக்கிறது.

மாநில தகவல் ஆணையர்களுக்கு ஊதியம் வழங்குதல் பதவிக் காலத்தை நிர்ணயத்தல் போன்றவை மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் செல்ல வழி வகுக்கப்பட்டு இருக்கிறது. இதன் மூலம் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் மாநில அரசுக்குள்ள அதிகாரங்களை மத்திய அரசு தட்டிப் பறிக்கிறது.

இந்திய ஜனநாயக அமைப்பில் குடிமக்களுக்கு அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளை கேள்வி கேட்கவும், சீரிய முறையில் இயங்கிடச் செய்யவும் வாய்ப்பு அளித்த தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பா.ஜ.க. அரசு நீர்த்துப்போகச் செய்திருப்பதும், கேள்வி கேட்பாரின்றி சர்வாதிகார ஆட்சி நடத்த முயற்சிப்பதும் கடும் கண்டனத்துக்குஉரியதாகும்.

கூட்டாட்சிக் கோட்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கும்என்.ஐ.ஏ. சட்டத் திருத்தம், தகவல் அறியும் உரிமைச்சட்டத் திருத்தம் ஆகியவற்றை நாடாளுமன்றத் தேர்வுக்குழுவின் ஆய்வுக் அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

**வைகோ**

**பொதுச்செயலாளர்,**

**மறுமலர்ச்சி தி.மு.க.,**

**'தாயகம்'**

**சென்னை - 8**

# NIA வுக்கு எதிரான நடவடிக்கையில் திமுக தலைவர் ஸ்டாலினுடன் ஒரு சந்திப்பு



Haja Gani
26 Jul at 7:16 AM

ஓர் இனிய சந்திப்பு...

முஸ்லிம் சமுதாயத்தைக்குறிவைத்து நடத்தப்படும் சட்ட பயங்கரவாதத்தைக் கூட்டமைப்பின் சார்பாக தலைவர் பேரா.ஜவாஹிருல்லா திமுக தலைவர் மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் எடுத்துரைத்தார். வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள் சில சதி வழக்குகளின் நுணுக்கங்களை எடுத்துரைத்தார். முக்கிய அமைப்புகளின் தலைவர்கள் இச்சந்திப்பில் இடம்பெற்றனர்.

அதைத்தொடர்ந்து நிகழ்ந்த தனிப்பட்ட சந்திப்பில், 'சொற்களால் ஒரு சுதந்திரப்போர்' கவிதைத்தொகுப்பை திமுக தலைவருக்கு வழங்கினோம்.ஆர்வமாகப் பெற்றுக்கொண்டார்.

நமது புதிய பொறுப்புக்கு வாழ்த்து தெரிவித்தார்.

தமிழகத்தில் என்.ஐ.ஏ. நடத்தும் அடாவடிகளை நிறுத்திட தமிழக இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சியின் கூட்டமைப்பு முடிவு செய்தது.

அவற்றுள் ஒன்று அரசியல் கட்சி தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், செயல்பாட்டாளர்கள் இவர்களைச் சந்தித்து என்ன நடந்துக் கொண்டிருக்கின்றது என்பதை தெளிவுபடுத்துவது. என்.ஐ.ஏ. அடாவடித்தனங்களுக்கு எதிராக அணி திரட்டுவது என்பதும் ஒன்று.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக தி.மு.க.வின் தலைவரும் சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்களைச் சந்தித்தோம்.



# NIA வுக்கு எதிராக ஸ்டாலின் அறிக்கை

தேசிய புலனாய்வு முகமையை, மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு தனது கட்சி அரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்துவதற்கு, தி.மு.க. சார்பில் கடும் கண்டனம் தெரிவிப்பதோடு;

அதிமுக அரசு இது குறித்து மத்திய அரசுக்கு உரிய முறையில் தீவிர அழுத்தம் கொடுத்து - தேசியப் புலனாய்வு முகமை தமிழகத்தில் அரசியல் லாபத்தை மனதில் வைத்து, தலையிடுவதற்கும் - ஏதுமறியாத அப்பாவி இஸ்லாமிய மக்களை துன்புறுத்துவதற்கும், கடும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்

**மு.க.ஸ்டாலின் அறிக்கை**

வருமான வரித்துறை, அமலாக்கத்துறை. சி.பி.ஐ. போன்ற சதந்திரமாகச் செயல்பட வேண்டிய அமைப்புகளை "அரசியல் மயமாக்கியது" போல், அவற்றின் தொடர்ச்சியாக, "பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள" அமைக்கப் பட்டுள்ள தேசிய புலனாய்வு முகமையை, மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு தனது கட்சிஅரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்துவதற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடும் கண்டனம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு என்று தனியாக ஒரு பிரிவு டி.ஜி.பி. அலுவலகத்தில் இருக்கிறது. அதற்கு டி.ஐ.ஜி தலைமையில் ஒரு தனி அதிகாரியும் இருக்கிறார். துணை பிரிவுகளும் இருக்கின்றன. "க்யூ பிராஞ்ச்" என்று சொல்லப் படுகின்ற அந்தப் பிரிவு மாநில அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இயங்கி வருவது மட்டுமின்றி - மாண்புமிகு முதலமைச்சரின் நேரடிக் கட்டுப் பாட்டில்தான் உள்ளது.

ஆனால் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தத் துறையையும் மீறி- தேசியப் புலனாய்வு முகமையை தமிழகத்தில் பல்வேறு மாவட்டங் களுக்கும் அனுப்பி அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை குறிவைத்து- இஸ்லாமிய சமுதாய மக்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் போல் சித்தரிக்கும் அபாயகரமான போக்கை மத்திய பா.ஜ.க. அரசு உடனடியாகக் கைவிட வேண்டும். பயங்கரவாதம் எந்த மதத்தின் நெறிகளுக்கும் ஏற்புடையதல்ல. எந்த மதமும் அதை ஆதரிக்கப் போவதுமில்லை. சிறுபான்மையினர் உள்ளிட்ட அனைத்து மதத்தினரிடமும் அத்தகைய உயர்ந்த ஒருமைப்பாட்டு உணர்வும், சிறப்பான நாட்டுப் பற்றும் தழைத்தோங்கி இருக்கிறது என்பதை மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு புரிந்து கொண்டு- அனைத்து மதத்தினரும் நாட்டின் மீது கொண்டுள்ள அந்த மாறாப்பற்றுதான் இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு மாபெரும் வலிமை சேர்த்துக் கொண்டிருக்கிறது என்பதை மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு முதலில் உணர வேண்டும்.

தமிழகத்தில் பா.ஜ.க. எப்படியாவது காலூன்றி அரசியல் செய்ய விரும்பினால்- மக்களின் மேலான ஆதரவைப் பெறுவதற்கு நேர்மையான ஜனநாயக வழிகள் பல திறந்தே இருக்கின்றன. அதை தவிர்த்து, சிறுபான்மை சமுதாயத்தினரை ஒட்டுமொத்தமாக பயங்கரவாதிகளாகச் சித்திரித்து, அதன்மூலம் பா.ஜ.க.வை விதைக்கலாம் என்ற நோக்கில், தமிழகத்தில் தேசியப் புலனாய்வு முகமையை பயன்படுத்துவதும் - மாநில அரசுக்கே தெரியாமல் கைது நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் - ஒரு மத்திய அரசுக்கு எவ்விதத்திலும் அழகல்ல. தமிழகத்தில் உள்ள அதிமுக அரசும் இந்த அதிகார துஷ்பிரயோகத்தைக் கண்டு கொள்ளாமல்,எவ்வித முனுமுனுப்பும் இன்றி, அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது பொறுப்புள்ள, மாநில அரசுக்குரிய அடிப்படை இலக்கணமும் அல்ல! பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் அனைத்துக் கட்சிகளும் ஒரே அணியில் நின்று ஆதரவளித்துக் குரல் கொடுக்கும் போது, அந்த ஒற்றுமையைத் தவறாக எண்ணி, தனது அரசியல் லாபத்திற்காக பா.ஜ.க. பயன்படுத்திட எத்தனிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே அதிமுக அரசு இது குறித்து மத்திய அரசுக்கு உரிய முறையில் தீவிர அழுத்தம் கொடுத்து - தேசியப் புலனாய்வு முகமை தமிழகத்தில் அரசியல் லாபத்தை மனதில் வைத்து, தலையிடுவதற்கும் - ஏதுமறியாத அப்பாவி இஸ்லாமிய மக்களை துன்புறுத்துவதற்கும், கடும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில், தேசியப் புலனாய்வு முகமை, அரசியலுக்காக பயன்படுத்தப்படுவது தொடர்ந்தால், பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் உரிய வகையில் கடுமையான முறையில், ஜனநாயக வழிகளில், எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்று அறிவித்திட விரும்புகிறேன்.

# திமுக தலைவர் ஸ்டாலினுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழக இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு அளித்த அறிக்கை

கடந்த சில வருடங்களாக தமிழகத்தில் தீவிரவாத செயல்களில் ஈடுபட இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டுடன் பல முஸ்லிம் இளைஞர்களை என்.ஐ.ஏ என்ற தேசிய புலனாய்வு நிறுவனம் கைது செய்து வந்தது. என்.ஐ.ஏ ஆரம்பத்தில் பல குண்டு வெடிப்புகளில் சம்பந்தமுடைய சங்பரிவார் அமைப்பை சேர்ந்தவர்களை கைது செய்த்து. அவர்களின் மீது குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்த்து. தலைநகர் டெல்லியில் ஆட்சி மாற்றத்திற்கு பின் தேசத்தின் பாதுகாப்பு என்ற பெயரில் என்.ஐ.ஏ முஸ்லிம் இளைஞர்களை குறிவைக்கிறது. தற்போது என்.ஐ.ஏ. முஸ்லிம் இளைஞர்களை என்.ஐ.ஏ.வின் கற்பனையில் மட்டுமே உள்ள உண்மையில் இல்லாத இயங்களின் பெயர்களை குறிப்பிட்டு கைது செய்து வருகிறது.

தற்போதைய கைதுகளில், என்.ஐ.ஏ. குற்றம் சாட்டப்பட்ட நபர்களிடமிருந்து தீவிரவாத செயல்கள் செய்வதற்கு தேவையான ஆயுதங்களையோ, வெடிகுண்டுகளையோ கைப்பற்றவில்லை. மாறாக என்.ஐ.ஏ கைப்பற்றியுள்ளதெல்லாம் எல்லா வீடுகளிலும் பயன்பாட்டில் உள்ள செல்போன்கள், மடிக்கணினிகள், மெமரி கார்டுகள் மற்றும் ஹார்டு டிஸ்குகள் தான். இவற்றைக் கொண்டு எந்த போரையும் செய்ய இயலாது. டெல்லியில் 10 முஸ்லிம் இளைஞர்கள் விவசாயம் செய்ய பயன்படுத்திய டிராக்டர்களின் பாகங்களை ராக்கெட்டுகள் மற்றும் ஏவுகணைகளின் பாகங்களாக காட்டி கைது செய்தனர். இப்படி என்.ஐ.ஏவின் செயல்கள் தவறெனவும் கைது செய்யப்பட்ட முஸ்லிம்கள் அப்பாவிகள் எனவும் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் அவர்கள் சிறையில் தான் இருக்கிறார்கள். இப்போதெல்லாம் இவர்கள் தீவிரவாத செயல்களை செய்யக்கூடும் என்ற என்.ஐ.ஏ.வின் கற்பனை ஒன்று மட்டுமே இவர்களை கைது செய்ய போதுமானது.

இதைத்தாண்டி இவர்கள் முகநூலிலும் வாட்ஸ் அப்பிலும் சில செய்திகளை பார்த்தார்கள், பரப்பினார்கள் என்பதை ஆதாரமாக காட்டி இவர்களை கைது செய்துள்ளனர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ், பஜ்ரங்தள் இயக்கத்தை சேர்ந்த பலர் ஆயுதங்களோடும் துப்பாக்கிகளோடும் தோற்றம் கொடுத்த பின்னரும் பயங்கரமான ஆயுதங்கள், துப்பாக்கிகளோடு பயிற்சியில் ஈடுபட்ட பின்னரும் அவர்களை கைது செய்ய போதுமான ஆதாரங்கள் இருந்த பின்னரும் அவர்களை என்.ஐ.ஏ. விசாரிக்கவில்லை. அவர்கள் மீது எந்த வழக்கையும் தொடுக்கவில்லை. ஆனால் இஸ்லாமிய இளைஞர்கள் தீவிரவாதத்தில் ஈடுபடுவார்கள் என்ற கற்பனை ஒன்றே இவர்களுக்கு இஸ்லாமிய இளைஞர்கள் மீது வழக்கு தொடுக்க போதுமானதாக உள்ளது. என்.ஐ.ஏ.வின் இந்த போக்கு கண்டிக்கத் தக்கது.

இப்படி வழக்கு தொடுக்கப்படும் அப்பாவி இளைஞர்கள் தங்களது இளமையை தொலைத்த பின்னர் வழக்கிலிருந்து நிரபராதிகள் என விடுவிக்கப்படுவதும் தொடர்கதையாகி விட்டது. கிட்டத்தட்ட 10 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரை சிறையில் இருந்து விட்டு பின்னர் இவர்கள் அப்பாவிகள் என விடுவிக்கப்படுவதும் வாடிக்கையாகிவிட்டது. இதற்காக அவர்களுக்கு எந்த நட்டஈடும் அளிக்கப்படுவதுமில்லை. பொய் வழக்கு தொடுத்தவர்கள் தண்டிக்கப்படுவதுமில்லை. ஒரு மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் இது குறித்து (Writ Petition, Criminal No. 19/2012) போடப்பட்ட போது அதை தள்ளுபடி செய்து குண்டு வெடிப்புகளை தடுப்பதற்கான கடைசி வாசலையும் அடைத்து விட்டது. ஆனாலும் மனித உரிமை ஆர்வலர்கள் அகில இந்திய அளவில் நீதிபரிபாலனத்தில் தங்களுடைய போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனாலும் இந்த விஷயத்தில் என்.ஐ.ஏ கவனம் செலுத்துவதில்லை என்பதோடு தொடர்ந்து முஸ்லிம் இளைஞர்களை கற்பனையில் உருவாக்கிய இயக்கங்களோடு தொடர்புப்படுத்தி கைது செய்து வருகிறார்கள்.

இப்படி பல அப்பாவிகள் கடந்த மே மாதத்திலிருந்து கைது செய்யப்பட்டுவருகிறார்கள். இந்த அப்பாவிகளுக்கு எதிராக எந்த விதமான ஆதாரங்களோ சாட்சியங்களோ இல்லை. குற்றம் சாட்டப்பட்டவர்கள் சமூகத்தில் மிகச்சாதாரணமாக அனைவரிடம் பேசிப்பழகி வந்த நபர்கள். அனைவரும் அறிந்த நபர்கள். அனைத்து சமூகத்தினருடனும் நல்ல உறவு கொண்டவர்கள். இவர்கள் மேல் உள்ள குற்றச்சாட்டெல்லாம் இவர்கள் வாட்ஸ் அப்பிலும், முகநூலிலும்

தீவிரவாதம் சம்பந்தமான செய்திகளை பார்த்தார்கள், பகிர்ந்தார்கள் என்பதே. இது எதற்கு ஒப்பான தென்றால் ஆபாச இணையதளத்திற்கு சென்று பார்த்தவர்களை கற்பழிப்பு வழக்கில் கைது செய்வதற்கு ஒப்பானது. அந்த இணையதளத்திற்கு சென்று பார்த்தவர்கள் அனைவரும் கற்பழிப்பு குற்றத்தை நிச்சயம் செய்வார்கள் என்ற கற்பனைக்கு நிகரானது.



13.07.2019 அன்று நாகையில் கைதான ஹசன் அலி என்பவர் ஒரு பள்ளியின் தாளாளர். அந்த பகுதி மக்களால் மிகச்சிறந்த தாளாளர் என்ற பட்டம் வழங்கப்பட்டவர். சிறந்த தாளாளர் என்ற பட்டத்தை தமிழக பள்ளிக்கல்வித் துறையால் வழங்கப் பெற்றவர். இவரையெல்லாம் தீவிரவாதி, தேசத்திற்கு எதிராக போர் செய்ய விழைந்தார் என்று கூறி வழக்குத் தொடரப்பட்டுள்ளது தேசிய அவமானம்.

செயல் உள்நோக்கம் கொண்டது. இது அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்படுவதையும் அவர்கள் வாழ்க்கை வீணாக்கப்படுவதையும் உறுதி செய்கிறது. இந்த செயல்கள் மத நல்லிணக்கத்தையும் தேச ஒற்றுமையையும் குலைப்பதற்கான முயற்சி என சந்தேகம் கொள்ள எல்லா முகாந்திரமும் உள்ளது. இந்தியாவின் மற்ற பகுதிகளை ஒப்பு நோக்கும் போது தமிழ்நாடு மிகக்குறைவான மதக்கலவரங்கள் நடக்கும் பகுதி. மற்றும் இது மத வேற்றுமைகளற்ற பகுதி. இதன் காரணமாகவே தமிழகத்தில் பிஜேபி காலூன்ற முடியவில்லை. பல்வேறு மத நம்பிக்கைகள் கொண்ட சமூகத்தினர் தமிழகத்தில் அமைதியாக வாழ்கின்றனர். எனவே, இது போன்ற அப்பாவிகளை கைது செய்யும் நடவடிக்கைகள் நிறுத்தப்படும் வரை பிஜேபி ஆட்சியில் இந்தியாவில் முஸ்லிம்களாக இருப்பதே குற்றம் என்று எண்ணுகிறார்கள்.

தமிழகத்தில் கடந்த மே 2019 முதல் 18, ஜுலை,2019 வரை தீவிரவாத செயல்களில் ஈடுபடக்கூடும் என்ற கற்பனையோடு கைது செய்யப் பட்டவர்களின் பட்டியலை தேதி வாரியாக செய்தித்தாள்களில் வந்தவற்றை கீழே பட்டியலிட்டுள்ளோம்.

**ஜுலை 15 2019**

'அன்சருல்லா' என்ற பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையதாக டெல்லியில் இந்த 14 பேரும் கைது செய்யப்பட்டனர் என்றும் வெளிநாட்டில் இருந்து நிதிதிரட்டி இந்தியாவில் பயங்கரவாத தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டியதாக என்ஐஏ தெரிவித்துள்ளது. 14 தமிழர்களின் பெயர் மற்றும் ஊர் விவரம் பின்வருமாறு:



After 23 years in Prison on false charges, five Men walk out free in Samleti Blast case

Written by Sabrangindia | Published on: July 24, 2019

எனவே, என்.ஐ.ஏ.வின் இது போன்ற தகுந்த காரணமின்றி தன் விருப்பம் போல் செய்யப்படும் கைதுகள் நிறுத்தப்பட வேண்டும். கற்பனையை மட்டும் ஆதாரமாகக் கொண்டு வழக்கு தொடர்வது முஸ்லிம்களை ஒரு பெரிய முற்றுகையின் கீழ் இருப்பதாக உணர வைக்கிறது. என்.ஐ.ஏ.வின் இந்த

1. முஹம்மது ஷேக் மொஹ்தீன் - மதுரை 2. அமமது அசாருதீன் - திருவாரூர் 3. தொஹ்பீக் அஹம்மது - சென்னை 4. முஹம்மது அக்சர் - தேனி 5. மொய்தீன் சீனி ஷாகுல் ஹமிது - கீழக்கரை 6. முஹம்மது இப்ராஹிம் - நாகப்பட்டிணம் 7. மீரான் கனி - தேனி 8. குலாம் நபி ஆசாத் - பெரம்பலூர் 9 . ரஃபி அஹம்மது - ராம் நாடு 10. முன்தாப்சீர் - ராம் நாடு 11. உமர் பாஃரூக் - தஞ்சை 12. பாஃரூக் -

வழிநோக்கம். 13. பைசல் ஷெரிஃப் - ராம் நாடு 14. முஹம்மது இப்ராஹிம் - திருநெல்வேலி.

https://tamil.oneindia.com/news/chennai/conspiracy-to-commit-terrorism-14-keezhakarai-youths-arrested-by-nia-357069.html

**ஜூலை 14, 2019 17:07PM**

நாகையில் கைதான அசன் அலி, ஆரிஷ் முகமதுவை வரும் 25ம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க பூந்தமல்லி சிறப்பு நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## 13.07.2019

இன்று சென்னையில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் குழுவானது, மண்ணடி லிங்கி செட்டி தெருவில் உள்ள வஹ்தத்தே இஸ்லாமிக் ஹிண்ட் என்ற அமைப்பின் அலுவலகத்தில் சோதனை நடத்தி வருகிறது.

இது போல் புரசைவாக்கத்தில் முகமது புகாரி, நாகப்பட்டினத்திலும் அசன் அலி, ஹாரீஸ் முகமது ஆகியோர் வீட்டிலும் NIA போலீசார் சோதனை நடத்தினர்.

**ஜூலை 8**

பெங்களூரில் கைது செய்யப்பட்ட ஜமாத் உல் முஹைதீன் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதியை, கிருஷ்ணகிரி அழைத்து வந்து என்.ஐ.ஏ போலீசார் விசாரணை. 2012 - ம் ஆண்டு குண்டு வெடிப்பு சம்வம் தொடர்பாக, கிருஷ்ணகிரி ஷையது பாஷா மலையில் சோதனை முயற்சி நடத்தப்பட்டதாக தகவல்.

## Jul 03, 2019 1:06 PM

திருப்புவனம் ராமலிங்கம் கொலை வழக்கில் தென்காசியை சேர்ந்த மைதீன் அகமது ஷாலி என்பவரின் வீட்டில் தேசிய புலானய்வு முகமை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்

## Jun 27, 2019 4:22 PM

திருபுவனம் ராமலிங்கம் கொலை வழக்கில் தென்காசியைச் சேர்ந்த ஒருவரை, என்.ஐ.ஏ. அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

நெல்லை மாவட்டம் தென்காசியைச் சேர்ந்த மைதீன் அகமது ஷாலி என்பவரை விசாரணைக்காக கடந்த 25ஆம் தேதி கொச்சி அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றனர். விசாரணைக்குப் பின்னர் அவரைக் கைது செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

https://www.polimernews.com/view/67770-

News7Tamil
24 July at 17:38 ·
"நாங்கள் விடுதலையாகிவிட்டோம்; ஆனால் நாங்கள் இழந்த 23 வருடங்களை யார் தருவார்?" சம்லெட்டி குண்டுவெடிப்பு வழக்கிலிருந்து நிரபராதி என விடுவிக்கப்பட்டவர்கள் வேதனை!

## Jun 20, 2019 3:31 PM

கோவையில் மீண்டும் தேசியப் புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை மற்றும் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

கோவையைச் சேர்ந்த முகமது அசாருதீன், ஷேக் இதாயத்துல்லா, இப்ராகிம் என்ற ஷாஹின்ஷா, அக்ரம் சிந்தா, சதாம் உசேன், அபுபக்கர் ஆகியோரின் வீடுகளிலும் ஒரு அலுவலகத்திலும் தேசிய புலனாய்வு நிறுவன

அதிகாரிகள் ஏற்கனவே சோதனை நடத்தினர்.

சோதனையைத் தொடர்ந்து முகமது அசாருதீன், ஷேக் இதாயத்துல்லா ஆகியோரை கைது செய்த தேசிய புலனாய்வு அதிகாரிகள் அவர்களை கேரள மாநிலம் கொச்சிக்கு அழைத்துச் சென்றனர்.

PUTHIYATHALAIMURAI.COM
போதிய ஆதாரங்கள் இல்லை - 4 பேர் மீதான என்.ஐ.ஏ வழக்கு வாபஸ்

## Jun 16, 2019 10:27 AM

தமிழகத்தில் கோவையைத் தொடர்ந்து மதுரையிலும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

கோவையைச் சேர்ந்த சிலர், ஐஎஸ் இயக்கத்தின் தீவிரவாத ஆதரவு கருத்துகளை சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதாகவும், இயக்கத்திற்கு ஆள் சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன் அடிப்படையில் கோவையில் ஏழு இடங்களில் கடந்த புதன் கிழமை அன்று சோதனை மேற்கொண்டனர். சோதனையின் முடிவில் உக்கடத்தைச் சேர்ந்த அசாருதீன், ஷேக் இதயத்துல்லா ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் உள்பட 6 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. 7 பேர் விசாரணை வளையத்தில் உள்ளனர். இந்த நிலையில், இன்று மதுரையில் 3

இடங்களில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை நடத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

வில்லாபுரம் உள்ளிட்ட 3 இடங்களில் சோதனை நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது. கொச்சியில் இருந்து என்ஐஏ அதிகாரிகள் வந்திருப்பதாகவும், அவர்கள், வில்லாபுரத்தைச் சேர்ந்த ஒருவரைப் பிடித்து ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

https://www.polimernews.com/view/66051-

**15 Jun 2019 11 AM**

“விசாரணை என்கிற பெயரில், என்.ஐ.ஏ அதிகாரிகள் நள்ளிரவு நேரங்களில் வீடுகளுக்குள் நுழைவதால் எங்கள் குழந்தைகளும், பெண்களும் அச்சமடைகிறார்கள்" என்று என்.ஐ.ஏ விசாரணைக்கு எதிராக இஸ்லாமிய கூட்டமைப்பின் சார்பில் கோவை போலீஸ் கமிஷனரிடம் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

**ஜுன் 12**

தென்னிந்தியாவில் தாக்குதல் நடத்த ஐ.எஸ்.ஐ.எஸ். சதி... கோவை என்.ஐ.ஏ சோதனைகளின் பரபரப்பு பின்னணி!

**21st May 2019 08:43 AM**

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அருகே பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையதாகக் கருதப்படும் இளைஞரின் வீட்டில் தேசிய புலனாய்வு அமைப்பினர் (என்.ஐ.ஏ) திங்கள்கிழமை சோதனை மேற்கொண்டனர்.

காட்டுமன்னர்கோவில் அருகே லால்பேட்டை அமானி தெருவைச் சேர்ந்த சாதுல்லா மகன் முஹமது ரஷித் (22). சென்னையில் உள்ள கல்லூரியில் எம்.எஸ்சி. வேதியியல் படித்துள்ளார். இவரது தந்தை சாதுல்லா துபையில் வேலை செய்து வருகிறார்.


The Maharashtra Muslims acquitted of 'terrorism' after 25 years

Activists say Muslims are often victims of wrongful conviction as accused men reflect on case that ruined their lives

**Jun 14, 2019 7:31 AM**

தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் இலங்கையைப் போல் குண்டுவெடிப்பு தீவிரவாதத் தாக்குதல் நடத்த ஐ.எஸ். தீவிரவாதிகள் திட்டமிட்டதாக என்.ஐ.ஏ. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**Jun 13, 2019 12:48 PM**

என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலனாய்வு நிறுவன அதிகாரிகள் நேற்று சோதனை நடத்திய நிலையில், கோவையில் இன்று 3 பேரின் வீடுகளில் காவல்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சோதனையையொட்டி, சேத்தியாதோப்பு டிஎஸ்பி ஜவஹர்லால் தலைமையில் 50-க்கும் மேற்பட்ட போலீஸார் லால்பேட்டையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்

**மே 20, 2019 19:42 IST**

தமிழ்நாட்டில் ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவளித்த வழக்கில் என்.ஐ.ஏ. நடத்திய சோதனையில் லேப்டாப்புகள், ஆவணங்கள் சிக்கியுள்ளது பரபரப்பினை ஏற்படுத்தி உள்ளது.

**May 20, 2019 5:52 PM**

ஐஎஸ் பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்பு என்ற சந்தேகத்தின் அடிப்படையில் சேலம், ராமநாதபுரம், சிதம்பரம் உள்ளிட்ட 10 இடங்களில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் திடீர்

சோதனை மேற்கொண்டனர்.

தமிழ்நாட்டில் ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவளித்தனர் என கூறி 8 பேர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. அவர்கள் மீது, தங்களது தீவிரவாத குழுவுக்கு ஆயுதங்கள் கொள்முதல் செய்ய திட்டமிட்டது, ஆயுத போராட்டம் நடத்துவதற்கு தேவையான நிதியை உயர்த்துவது, சிறையில் உள்ள தீவிரவாதிகளை தப்பிக்க செய்து, அவர்களை நாட்டிற்கு எதிராக செயல்பட செய்வது ஆகிய பிரிவுகளின் கீழ் கடந்த ஜனவரி 8-ந்தேதி வழக்கு பதிவானது. இதன் அடிப்படையில் தேசிய புலனாய்வு முகமையை சேர்ந்த அதிகாரிகள் தமிழகத்தின் ராமநாதபுரம், சேலம் மற்றும் சிதம்பரம் ஆகிய பகுதிகளில், 10 பேரின் 10க்கும் மேற்பட்ட இடங்களில் இன்று திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

**2 மே 2019**

https://www.bbc.com/tamil/india-48137221

திருபுவனம் ராமலிங்கம் கொலை வழக்கில் திருச்சியில் உள்ள எஸ்டிபிஐ மற்றும் பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா அலுவலகங்களில் தேசிய புலனாய்வு முகமையின் அதிகாரிகள் வியாழக்கிழமை சோதனை நடத்தினர்.

கும்பகோணம், திருச்சி, தஞ்சாவூர், காரைக்கால் ஆகிய நகரங்களில் மொத்தம் 20 இடங்களில் இந்த சோதனை நிகழ்த்தப்பட்டது என்கிறது என்ஐ.ஏ.வின் செய்தி.

**மே 01, 2019, 04:03 PM**

தமிழகத்தில் தஞ்சை, கும்பகோணம் உள்ளிட்ட 4 இடங்களில் என்.ஐ.ஏ அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

இது போன்ற சந்தேகத்தின் அடிப்படையிலான கைதுகள் அதுவும் யு.ஏ.பி.ஏ (சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம்) என்ற கொடுமையான சட்டத்தின் கீழ் தொடரப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என தமிழக இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு கோருகிறது. இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை எந்த கேள்வியும் இன்றி 180 நாட்கள் வரை பிணையில் எடுக்கக்கூட இயலாது. எனவே, இப்படிப்பட்ட கொடுங்கோன்மையான சட்டத்தை நீக்கம் செய்ய வேண்டும் எனவும் தமிழக இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு கோருகிறது.

இறுதியாக, நல்லவர்களின் மௌனம் தீயவர்களின் தீச்செயலை விட கொடியது. எனவே, அறம் காக்கும் நல்லோர் அனைவரும் இணைந்து இந்த தீமையை எதிர்க்க வேண்டும் என்பதே தமிழக இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பாக உள்ளது. அத்தகைய நல்லோர்களுடன் தமிழக இஸ்லாமிய இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு எல்லாக்காலங்களிலும் இணைந்து பணியாற்றும் என்பதையும் இந்நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

நன்றி......

- 1. 2016ப்பின் 7000 பேர் போலிஸ் பாதுகாப்பிலிருக்கும் போது செத்திருக்கின்றார்கள். மோடி NHRC Report.
- 2. குஜராத் குண்டு வெடிப்பில் குற்றம் சாட்டப்பட்ட முஸ்லிம்கள் 14 ஆண்டுகளுக்கு பின் விடுதலை. - Wire 3rd Feb 2017
- 3. என்.ஐ.ஏ. அண்மையில் கைது செய்த 10 பேரில் 4 பேர் அப்பாவிகள் என விடுதலை.
- 4. டெல்லியில் 13 முஸ்லிம்கள் அப்பாவிகள் என விடுதலை. - வைகறை வெளிச்சம் ஜூன் 2016.
- 5. 12 ஆண்டுகளுக்கு பின் கேரள மாநில உயர் நீதிமன்றம் அப்பாவிகள் என 5 முஸ்லிம்களை விடுதலை செய்தது. இதே வழக்கில் அதற்கு முன்னால் 11 முஸ்லிம்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.
- 6. 25 ஆண்டுகளுக்கு பின் 11 முஸ்லிம்கள் விடுதலை - Wire.
- 7. ஹைதராபாத் குண்டு வெடிப்பில் 5 முஸ்லிம் இளைஞர்கள் அப்பாவிகள் என விடுதலை.
- 8. மாலேகான் குண்டு வெடிப்பில் கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் 10 ஆண்டுகளுக்குப் பின் விடுதலை.
- 9. குஜராத் கோத்ரா ரயி தீ வைப்பு வழக்கில் 62 முஸ்லிம்கள் விடுதலை. மூளையாக செயல் பட்டவரும் விடுதலை.
- 10. 12 ஆண்டுகளுக்கு பின் 10 முஸ்லிம்கள் விடுதலை.
- 11. குஜராத் டிபன் பாக்ஸ் குண்டு வெடிப்புகளில் கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் 14 ஆண்டுகளுக்கு பின் விடுதலை.
- 12. ஹைதராபாத் - இல் இன்னொரு குண்டு வெடிப்பில் கைது செய்யப்பட்ட ஐந்து முஸ்லிம்கள் அப்பாவிகள் என விடுதலை.
- 13. இந்தியாவில் 67 % கைதிகள் விசாரணை கைதிகளே! இதில் 53% பேர் முஸ்லிம்கள், தலித்துகள், ஆதிவாசிகள். - Source: Amnesty International India.




# NIA ஓர் அறிமுகம்

*மாலேகான் குண்டுவெடிப்பு 2008க்கு பின் பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்தன. அவற்றுள் ஒன்று நாட்டில் நடந்த குண்டு வெடிப்புகள் அனைத்தும் சங்கப்பரிவாரத்தின் கையிருப்புகள் தாம் என்பது!*

*இந்த உண்மைகளை மராட்டிய மாநில முன்னாள் காவல்துறை அதிகாரி* (ATS - Anti Terrorism Squad) *தீவிரவாத தடுப்புப் படையின் தலைவர் ஹேமந்த் கர்கரே தான் கண்டெடுத்தார்.*

*2008 மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கை ஆய்வு செய்த ஹேமந்த் கர்கரே அவர்கள் இந்தக் குண்டுவெடிப்புகளின் பின்னணியில் செயல்பட்ட பிரக்யா சிங் தாக்கூர் என்ற பெண் சந்நியாசி உட்பட்டவர்களிடமிருந்து லேப்டாப்-களைக் கைப்பற்றினார். அதில் 2 லேப்டாப்களில் இருந்தவற்றை கொண்டு குற்றப்பத்திரிகை ஒன்றை தாக்கல் செய்தார் ஹேமந்த் கர்கரே. அதில் பல அதிர்ச்சிகள் வெளிப்பட்டன. (மீதமுள்ள 18 லேப்டாப்கள் இன்றளவும் திறக்கப்படவில்லை)*

*01. இந்தியாவில் குண்டுகளை வெடித்து மக்களை கொலை செய்து ஆட்சியைப் பிடிப்பது சங்கப்பரிவாரத்தின் திட்டம். பழியை முஸ்லிம்கள் மீது போடுவது என்பது சதி!(இதனை மிகவும் சாமர்த்தியமாக செய்தார்கள்.)*

*02. இதற்காக இஸ்ரேல் நாட்டில் ஆரியவர்த் இந்து ராஷ்டிரா வின் தலைமையகம் ஒன்று அமைக்கப்பட்டு விட்டது. இஸ்ரேலில் உள்ள தலைமையகத்தை மையமாக கொண்டு இந்தியாவின் மீது போர் தொடுப்பது - இதன் பொருள் நாடெங்கும் குண்டு வெடிப்புகளை நடத்துவது. பழியை முஸ்லிம்கள் மேல் போட்டு சமுதாயத்தை பிளப்பது. ஆட்சியை பிடிப்பது.*

*03.* இதில் தலையிடும் முஸ்லிமல்லாத தலைவர்களையும் கொலை செய்வது. அவர்கள் இந்துக்கள் எனச் சொல்லிக் கொண்டிருந்தாலும் சரியே!

இன்னும் அதிக விளக்கங்களுக்கு படியுங்கள் "புரோகித் - இன் லேப்டாப்பில் இருந்தது என்ன?" வெளியீடு - வேர்கள் பதிப்பகம்)

இந்த பல உண்மைகளைக் கண்டுபிடித்து அதனை குற்றப்பத்திரிகையாகவும் ஆக்கியவர் நேர்மையான அதிகாரி ஹேமந்த் கர்கரே. அதனால் சங்கப்பரிவாரத்தினர் அவரைக் குறி வைத்தனர்.

அடுத்து இந்தியாவை "ஆர்யவர்த் இந்து ராஷ்டிராவாக ஆக்கிடுவதில் மத்திய உளவுத் துறையைச் சார்ந்த சில பல கறுப்பாடுகளும் உள்ளன என்பதை கண்டெடுத்தார் வீரமகன் ஹேமந்த் கர்கரே! இதை வீரமகன் ஹேமந்த் கர்கரே செய்த அடுத்த பெரிய குற்றம் எனப் பார்த்தார்கள் சங்கப் பரிவாரத்தினர்.

அத்தோடு நில்லாமல் உளவுத்துறையைச் சார்ந்த அந்தக் கறுப்பாடுகளைக் கைது செய்யவும் துணிந்தார் காவல்துறையின் அணையா விளக்கு ஹேமந்த் கர்கரே!

அந்த கறுப்பாடுகளை கைது செய்வதற்கு மூன்றே மணி நேரம் தான் இருந்தது. அதற்குள் மும்பைத் தாக்குதலை ஏற்பாடு செய்து ஹேமந்த் கர்கரேயை கொலை செய்தார்கள். (இந்த மும்பைத் தாக்குதலைத் தான் 26/11 என அடையாளப்படுத்துகின்றார்கள்.)

இதனை விரிவாக அறிந்திட "கர்கரேயை கொலை செய்தது யார்?" என்ற நூலை படித்திடவும். - வெளியீடு வேர்கள் படிப்பகம். இந்தப் பின்னணியில் தான் என்.ஐ.ஏ. என்ற தேசிய முகவாண்மை அமைக்கப்படுகின்றது. இது 2008 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் படி செயலில் வந்தது. (Act 34 of 2008)

இந்த தேசிய புலனாய்வு முகமையின் நோக்கம் உண்மையாக இந்தியாவில் தீவிரவாத தாக்குதல்களை - குண்டுகளை வெடிக்கச் செய்து அப்பாவி முஸ்லிம்களையும் - சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களையும் கொலை செய்து ஆரிய வர்த் இந்து ராஷ்டிராவை உருவாக்க நினைப்பவர்களை தடுப்பது தான்.

## என்.ஐ.ஏ. வின் தொடக்க கால கைதுகள்

இந்த வகையில் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமையின் தொடக்கக்கால பணிகள் மிகவும் நம்பிக்கை அளிப்பதாக இருந்தது.

இந்தியாவில் இனி குண்டு வெடிப்புகள் நிகழாது.




அதனால் இந்தியா ஆரிய வர்த் இந்து ராஷ்டிரமாக மாறாது என்ற நம்பிக்கையைத் தந்தது. அவற்றுள் ஒன்று;

## டெல்லி போலிஸின் கைதும் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமையின் தலையீடும்

டெல்லி காவல்துறை லியாக்கத் ஷா என்பவரை 2013 மார்ச் மாதத்தில் கைது செய்தது. இவரை ஹிஸ்புல் முஜாஹிதீன் என்ற தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர் என ஊடகங்களில் பொய்ச் செய்திகளைப் பரப்பி மொத்த இந்தியாவையும் பீதிவயப்படுத்தியது.

லியாக்கத் ஷா மொத்த டெல்லியையும் குண்டு வைத்து தகர்க்க சதி செய்தார் என தப்பட்டம் அடித்தது. பயங்கரமான வெடிபொருள்களை கைப்பற்றியதாகவும் கூப்பாடு போட்டது டெல்லி போலிஸ். அவரும் அவரது நண்பர்களும் தற்கொலை தாக்குதலையே நடத்தவிருந்தார்கள் என நாடகமாடியது. பின்னர் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமை ஆய்வில் இறங்கியது.

டெல்லி காவல்துறையின் கபட நாடகங்களை அம்பலப்படுத்தியது. எந்த ஆதாரமும் இல்லை என அத்தனை பேரையும் விடுதலை செய்தது. இத்தோடு நில்லாமல் டெல்லி காவல்துறை ஆணையர் (DGP Sanjeev yadav) சஞ்சீவ் யாதவ், ஆய்வாளர்கள் சஞ்சீவ் பட், ராகுல் குமார் இன்னும் பல டெல்லி சிறப்புக் காவல் படையினர் சிலரையும் குற்றவாளிகள் என்றது. இவர்களையும், (NIA) தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் குற்றவாளிகளாக குறிப்பிட்டது. இவர்கள் அனைவரும் "பத்தான்" என்ற காவல்துறையின் கைக் கூலியைப் பயன்படுத்தி குண்டு வெடிப்புகளை நடத்திட திட்டமிட்டிருந்தார்கள் என்றும் குறிப்பிட்டது.

இவர்களையெல்லாம் உள்ளடக்கியக் குற்றப்பத்திரிகை ஜனவரி 2015இல் NIA என்ற தேசிய முகவாண்மையால் தாக்கல் செய்யப்பட்டது.

(Source: Brahminists Bombed Muslims Hanged - The Brahminists Game of Blast and Blam Muslims by: S.M. Mushrif) ஆங்கில நூல் கிடைக்குமிடம் - வேர்கள் பதிப்பகம் - தொலைப்பேசி: 8148129887)

இப்படி இன்னும் சில வழக்குகளும் உண்டு. ஆனால் காலப்போக்கில் "NIA" என்ற தேசிய முகமை பாசிசத்தின் பிடிக்குள் சிக்கிக் கொண்டது.

ஆர்யவர்த் இந்து ராஷ்டிராவை அமைத்திட முயற்சி செய்தவர்களை, அதற்காக குண்டு வைத்தவர்களைக் காப்பாற்றிடவும், உதவி செய்திடவும் வெட்கமின்றி களமிறங்குகியது.

## என்.ஐ.ஏ. வின் நிலையில் மாற்றம்

மேலே நாம் குறிப்பிட்ட டெல்லி குண்டு வெடிப்பு வழக்கில் எப்படி குண்டுகளை வைத்திட எல்லா முயற்சிகளையும் செய்த காவல்துறை அதிகாரிகளைக் குற்றப்பத்திரிகையில் இணைத்திட முயற்சி செய்ததோ, அதற்கு நேர் எதிராக பல குண்டு வெடிப்புகளை நிகழ்த்திய பிரக்யா சிங் தாக்கூர் என்ற பெண் சந்நியாசியை காப்பாற்றிட எல்லா முயற்சிகளையும் செய்தது.

ஹேமந்த் கர்கரேயால் 2008 மாலேகான் குண்டு வெடிப்பில் குற்றம் சுமத்தப்பட்ட பிரக்யா சிங் தாக்கூர் விஷயத்தில் அரசு தரப்பு வழக்கறிஞராக இயங்கிய ரோஹினி சாலினா என்ற பெண் வழக்கறிஞராக வாதாடி வந்தார். அவர் தன் திறமையால் பிரக்யா சிங் தாக்கூர் போன்றவர்களை தண்டிக்கும் அளவிற்கு வழக்கை விரைந்து கொண்டு சென்றார்.

இந்நிலையில் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமை 2008 மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில் தலையிட்டு அந்த பெண் வழக்கறிஞரை, "நீங்கள் இதில் வேகம் காட்ட வேண்டாம். நில்லுங்கள் அல்லது வேறு வழக்கறிஞருக்கு இடம் விட்டு நீங்கள் இராஜினாமா செய்து விடுங்கள் என்றது.

இப்படி ஆரியவர்த் இந்து ராஷ்டிராவை நிலை நாட்ட இந்தியாவை பாசிச மயமாக்கிட குண்டு வெடிப்புகளை நடத்தி அப்பாவிகளைக் கொலை செய்தவர்களை - அந்தப் பழியை முஸ்லிம்கள் மீது போட்டவர்களை காப்பாற்றிட எல்லா முயற்சிகளையும் செய்தது தேசிய புலனாய்வு முகமை.

இறுதியில் பிரக்யா சிங் தாக்கூரை காப்பாற்றியே விட்டது. அவர் இப்போது நாடாளுமன்றத்தின் மக்களவை உறுப்பினர். இனி அவர் தண்டிக்கப் படுவார் என்பது கனவிலும் நடக்காது.(அல்லாஹ் நாடினால் தவிர) அவர் நடத்திய பல்வேறு குண்டு வெடிப்புகளிலும் உயிரிழந்த நூற்றுக் கணக்கானோருக்கும் மரணத்திலும் நியாயம் கிடைக்கவில்லை.

இந்தக் குண்டுவெடிப்புகளுக்குப் பழி சுமந்து வாழ்க்கையை இழந்த முஸ்லிம் இளைஞர்களுக்கும் நியாயம் கிடைக்கவே கிடைக்காது. இன்ஷா அல்லாஹ் அவர்களுக்கு மரணத்திற்குப் பின் வரும் வாழ்க்கையில் மட்டுமே நீதி கிடைக்கும். ஹேமந்த் கர்கரேயின் கொலைக்கும் நீதி கிடைக்கவில்லை.

## டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் தலையங்கம்

தொடக்க நாட்களில் நன்றாக செயல்பட்ட "NIA" என்ற தேசிய புலனாய்வு முகமை ஏன் இப்படி நிலை மாறி போனது என்பதை அண்மையில் டைம்ஸ் ஆஃப் இந்தியா (26.07.2019 தலையங்கம்) தெளிவாக சுட்டிக்காட்டியது. அந்த தலையங்கம் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமைக்கு அதிக அதிகாரம் வேண்டுமா? என்று இன்றைய சூழலில் எழுதப் பெற்றது. அந்தத் தலையங்கம் தேசிய புலனாய்வு முகமைக்கு அப்படியொரு அதிகாரம் வழங்கப் பெற்றால் அது தவறாமல் தவறாகவே பயன்படுத்தப்படும் என்றது. காரணம் தேசிய புலனாய்வு முகவமை தனித்துச் செயல் படுவதில்லை. அதை ஆளும் கட்சி பின்னாலிருந்து இயக்குகிறது எனக்கூறி கடைசி பத்தியில் இப்படிக் குறிப்பிட்டது.

> "என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமையின் தனித்தன்மை கேள்விக்குரியது மாலேகான் குண்டு வெடிப்பு குறித்து அதன் சிறப்பு அரசு வழக்குரைஞர் ரோஹினி சாலினா - Rohini Salina வெளிப்படுத்தியவை இதனை தெளிவுப்படுத்தும். இந்த மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில் ரோஹினி சாலினாவிடம் "Go Soft" குற்றவாளிகளுக்கு சாதகமாக நடந்து கொள்ளுங்கள் என என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமை கேட்டுக் கொண்டது. இதிலிருந்து என்.ஐ.ஏ. எப்படி செயல்படுகின்றது என்பதை புரிந்து கொள்ள முடியும்."

> "இதைத் தொடர்ந்து 2008 மாலேகான் குற்றவாளியை இன்றைய ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக மாற்றியிருக்கின்றது. இது தீவிரவாதத்தை எள்ளளவும் பொறுத்துக் கொள்ள மாட்டோம் என்ற முழக்கத்திற்கு நேர் எதிரானது."

> "இது அரசிலிருப்பவர்களுக்கு எதிரான சில கொள்கையைக் கொண்டவர்கள் தாம் தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டவர்கள். இந்த அரசுக்கு எதிரி அனைவரும் தீவிரவாதிகள் எனக் கூறப்படுவார்கள். இதுவே (UAPA) தடைசெய்யப்பட்ட செயல்களைத் தடுக்கும் சட்டத்தின் இப்போதைய திருத்தத்தின் நோக்கம் என்பதை தெளிவுப்படுத்தும். அதனால் இது

*போன்ற, தான் தோன்றித் தனமான சட்டங்களையும் எதேச்சதிகார சட்டங்களையும் அரசு தனக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்கின்றது என்பதற்காக ஏற்றிடக் கூடாது. காரணம் இது போன்ற சட்டங்கள் பெரும்பாலும் தவறாகவே பயன்படுத்தப்படும்."*

*- தி டைம்ஸ் ஆஃப் இந்தியா - தலையங்கம்*
*- 26.07.2019*

## சிறப்பு அரசு வழக்குரைஞர் ரோஹினி சாலினா

*இவர் 30 ஆண்டுக் காலம் சட்டத்துறையில் பணியாற்றியவர். பண முதலைகள் கொலை கும்பல்கள், இவர்களுக்கெதிராக எல்லாம் வழக்காடி அவர்களுக்குத் தண்டனைகளைப் பெற்றுத் தந்தவர்.*

*மாலேகான் (2008) குண்டு வெடிப்பில் இவரைத்தான் சிறப்பு அரசு வழக்கறிஞராக வைத்தார்கள். இவர் பிரக்யா சிங் தாக்கூர் உட்பட்டவர்களைத் தண்டித்திடுவதற்கு தீரமுடன் வாதாடினார்கள். அதாவது இந்தியாவின் உணமையான தீவிரவாதிகளைத் தண்டிக்க வாதாடினார்கள். இந்நிலையில்தான் என்.ஐ.ஏ. என்ற சிறப்பு புலனாய்வு முகமை அந்த வழக்கை கையிலெடுத்தது. வீரமங்கை ரோஹினி சாலினியை சந்தித்து மேலிடத்து உத்தரவு நீங்கள் அந்த வழக்கில் மெல்லிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என்றார்கள். இதை அவர் 2014 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் NDTV - என்.டி.டி.வி என்ற தொலைக் காட்சிக் அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.*

*அந்த பேட்டியில் அவர் குறிப்பிட்ட மிக முக்கியமான விஷயம் 2014இல் பாசிசம் பதவி ஏற்ற பின் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமை தொடர்ந்து முஸ்லிம்களைக் குறி வைத்து தாக்கும். இப்போது கிடைத்திருக்கும் ஏதேச்சதிகாரத்தைப் பயன்படுத்தி சமூக ஆர்வலர்கள் செயல்பாட்டாளர்கள், இந்துத்துவ பாசிசத்திற்கு எதிராக சிந்திப்பவர்கள் அனைவரையும் அடக்கும், ஒடுக்கும் நிர்மூலமாக்கும்.*

*இந்த திட்டங்கள் அதிலுள்ள பிரிவுகள் அனைத்தும் மனித இனத்திற்கே எதிரானது என்பதை மக்கள் மன்றத்தில் தெளிவுப்படுத்திட வேண்டும். தேசிய புலனாய்வு முகமையின் சதிகள் நிறைவேறாமல் தடுத்திட வேண்டும். இன்ஷா அல்லாஹ்.*

- எம்.ஜி.எம்.

## நாகையில் ஊடகங்கள்

நாகையில் கல்வியாளர் ஹஸன், பொறியியலாளர் ஹாரிஸ் ஆகியோரின் பெற்றோர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்து பேட்டி அளித்தனர். அப்போது 250 பேர் கூடி நின்றார்கள்.

அங்கு வந்த ஊடகத்தைச் சார்ந்தவர்கள் முதலில் பத்திரிகை சந்திப்பை நடத்திய வி.சி.க. ஜாபர், நீ.அ.ம.இ.வைச் சார்ந்த அசார் ஆகியோரையும் நீங்கள் வீடியோ எடுக்கக் கூடாது, சமூக வலைதளங்களில் காட்சிகளை சுழலவிடக்கூடாது என்றெல்லாம் நிபந்தனை விதித்தனர். இந்த நிபந்தனைகளையெல்லாம் நீங்கள் ஏற்றுக் கொண்டால் தான் நாங்கள் வெளியிடுவோம் எனக் கூறியுள்ளார்கள். இந்த நிபந்தனை விதித்தவர்கள் யாரும் அந்தப் பேட்டிகளை போடவில்லை. ஒரு நாள் காந்திருந்து விட்டு பின்னர் சமூக வலைதளங்களில் அந்த பேட்டி வந்தது. என்னே ஊடகத் தர்மம்!

– ந.நி.

## வன்மையாக கண்டிக்கின்றோம்

நாகை மாவட்டத்தில் அப்பாவி இளைஞர் மற்றும் சமூக ஆர்வலர்கள் **ஹசன் அலி** மற்றும் **ஹாீஸ் முகமது** ஆகியோர் மீதுபொய் வழக்கு பதிவு செய்து **UAPA** சட்டத்தில் சிறையில் அடைத்து **NIA** வை வன்மையாக கண்டிக்கின்றோம் தமிழகத்தில் மாநில சுய ஆட்சியை பறிக்கும் மத பதற்றத்தை உருவாக்கும் தேசிய புலனாய்வு முகாமை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவண்:

**தி.மு.க. மதிமுக. விசிக .திக. தமுமுக. ம.ம.க. மஜக. JAQH, INTJ, முகையதீன் பள்ளி முஸ்லிம் ஜமாத், காட்டுப்பள்ளி முஸ்லிம் ஜமாத், மஞ்சக்கொல்லை சுன்னத் ஜமாத். மஞ்சக்கொல்லை தவ்ஹீத் ஜமாத்**

**தமிழகத்தில் என்.ஐ.ஏ. வின் தொடர் அட்டூழியங்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஜமாஅத்துல் உலமா சபையின் சார்பாக பேராசிரியர் இலயாஸ் ரியாஜி அவர்கள் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் ஜெயக்குமார் அவர்களை சந்தித்து என்.ஐ.ஏ. கைது நடவடிக்கைகளின் சதிகள் குறித்த அறிக்கையை வழங்கினார்.**

**ந.நி.**




கூட்டமைப்பின் அறிக்கையையும் இதர இணைப்புகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் அ.ராசா அவர்களின் பார்வைக்கு பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள் கொண்டு சென்றார். தகவல் கிடைக்கப் பெற்றதும் அ.ராசா அவர்கள் பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல்கள் சற்றுத் தாமதமாகக் கிடைத்தது. இரண்டு நாட்களுக்கு முன்னர் கிடைத்திருந்தால் நாடாளுமன்ற உரையில் இணைத்திருப்பேன் என்றார். வாய்ப்பு கிடைக்கும் போது பிரச்சனையை எழுப்புகிறேன் என்றார்.

**ந.நி.**



# தமிழக சட்டமன்றத்தில் என்.ஐ.ஏ. மீது குற்றச்சாட்டு



சட்டமன்ற உறுப்பினர் மனிதநேய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜனாப் எம். தமீம் அன்சாரி, தமிழ் நாடு அரசை சாடினார். என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமை அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்து கொண்டிருக்கின்றது. இந்த அப்பாவிகளைப் பற்றிய செய்திகளை ஊடகங்களுக்கு கொடுக்கின்றது. அடுத்த நாளே அப்பாவிகள் என அவர்கள் விடுவிக்கப்படுகின்றார்கள்.

அவர்கள் தேசிய புலனாய்வு ஒரே ஒரு சமுதாயத்தைத் தான் குறி வைக்கின்றது. தீவிரவாதத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது. இரண்டாவது கருத்தில்லை ஆனால் அதற்காக ஒரே சமுதாயத்தைக் குறி வைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. நான் இந்த அரசுக்கு ஒன்றை நினைவு படுத்திட விரும்புகிறேன். அது இவர்களின் தலைவர் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் என்.ஐ.ஏ. ஐ கண்டித்து அறிக்கைகளை விடுத்துள்ளார்.

வெளிநாடுகளில் வாழும் முஸ்லிம் இளைஞர்கள் பள்ளிவாசல்களையும், மத்ரஸாக்களையும் கட்டவே பணம் திரட்டுகின்றார்கள். ஆனால் என்.ஐ.ஏ. அவர்கள் தீவிரவாதத்திற்கு நிதி திரட்டுகின்றார்கள். பொய்யைப் பரப்புகின்றார்கள். டிக் டாக் என்பதை தடை செய்திட வேண்டும் என்றும் கூறினார். இதற்கு தகவல் துறை அமைச்சர் மணிகண்டன் அது தடை செய்யப்படும் என்று பதில் சொன்னார். (நன்றி The Hindu *19.07.2019)*

நாம் சட்டமன்ற உறுப்பினர் தமீமுன் அன்சாரியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நன்றி சொன்னோம். அப்போது அவர்;

“நானும் சட்டமன்ற உறுப்பினர் கருணாஸ், தனி அரசு ஆகியோர் முதல்வர் எடப்பாடியை சந்தித்து உண்மையை விளக்கினோம். என்.ஐ.ஏ. வின் அடாவடித்தனங்களை மத்திய அரசின் பார்வைக்கு கொண்டு செல்ல வேண்டும் எனச் சொன்னோம். முதல்வரும் செய்வதாக உறுதி கூறியுள்ளார்.” எனக்கூறினார்.

**ந.நி.**


# அப்பாவிகளுக்கு தண்டனை 23 வருடங்கள்

அலி முஹம்மது பாட் தன் தாய் தந்தை அடக்கம் செய்திருந்த அடக்கஸ்தலத்தின் மேல் அப்படியே விழுந்து கிடந்தார். அவரை யாரும் எழுப்பவில்லை. எழுப்பவும் தயாராக இல்லை. அவர்களுக்கு தெரியும் அவர் எழுந்திருக்க நேரமாகும் என்று. ஆம். சிறையிலிருந்து அலி பாட் விடுதலையாகி இரண்டு தினங்கள் தான் ஆகியிருந்தது. 23 வருட கால நீண்ட சிறைவாசம் அது. செய்யாத குற்றச்சாட்டிற்கு. நீதிமன்றம் 23 வருடங்களுக்கு பிறகு அவரை நிரபராதி அப்பாவி என விடுதலை செய்துள்ளது.

தன் தாய் தந்தையின் மரணத்திற்கு கூட அவர் வெளியில் வரவில்லை. அவர்களின் அடக்கஸ்தலத்தின் மீது விழுந்து கிடந்தது தன் தாயின் மடியில் விழுந்து கிடந்ததை போன்றும் தன் தந்தையை ஆரத்தழுவியது போன்றும் அவருக்கு இருந்தது. சுற்றி இருந்தவர்கள் கண்களில் கண்ணீர். அதைத் தவிர அவர்களால் வேறு எதையும் அவருக்கு செய்ய இயலவில்லை.

அலிபாட் தொலைத்தது தன் தாயையும் தந்தையையும் மட்டுமல்ல. தன் இளமையையும் தான். இழப்பதற்கு அவருக்கு ஒன்றுமில்லை இப்போது. அவரை தேற்றுவார் யாருமில்லை.

லதீப் அஹ்மத் வாஜா (42), அலி பாட் (48), மிர்சா நிசார் (39), அப்துல் கோனி (57), ரயீஸ் பேக் (56) ஆகிய 5 பேரையும் நிரபராதிகள் என



முஹம்மது அலி பாட்

இராஜஸ்தான் உயர்நீதிமன்றம் விடுதலை செய்தது.

இதில் கொடுமை என்னவென்றால், காஷ்மீரை சேர்ந்த 3 பேரை இந்த 23 வருட சிறைகாலத்தில் பிணையிலோ பரோலிலோ கூட வெளியில் விடவில்லை.

இந்த ஐந்து பேருக்கும் ஒருவரையொருவர் தெரியாது. அறிமுகம் கிடையாது. ஆனால் இவர்கள் ஐந்து பேரும் சேர்ந்து தான் குண்டு வைத்ததாக கூறி கைது செய்யப்பட்டனர்.

**மீண்டும் இந்த உலகத்தோடு இணைய முயற்சி**

ஆம். அவர்கள் இந்த உலகத்தின் தொடர்பை விட்டு நீங்கி சென்று 23 வருட காலமாகி விட்டது. இந்த 23 வருட காலத்தில் எல்லாமே மாறி விட்டிருந்தது. அவர்களுக்கு இந்த உலகமே புதியதாக தெரிந்தது. இந்த புதிய உலகத்தோடு தங்களை இணைத்து கொள்ள அவர்கள் முயற்சி செய்கின்றனர்.

**மிர்சா நிசார்**

மிர்சா நிசார் ஸ்ரீநகரில் உள்ள தன்னுடைய வீட்டிற்கு வந்து 2 நாட்களாகி விட்டது. பலர் அவரை வந்து ஆரத்தழுவிச் செல்கின்றனர். ஆனால் மிர்சாவுக்கு தான் அவர்களை யாரென்று தெரியவில்லை. இறந்து போன புன்னகை ஒன்றை தன் இதழில் வழியவிட்ட வண்ணம் அவர்களை வரவேற்கிறார் மிர்சா. 23 வருடப் பிரிவு என்பது மிக நீண்டப் பிரிவு. எல்லாமே அவருக்கு புதிதாக உள்ளது.

இந்த 5 பேருக்கும் எதிராக 302, 307, 120-B, 121, 345 இன்னும் பிற என காவல்துறை பல்வேறு பிரிவுகளில் வழக்கு தொடர்ந்திருந்தது. இதை வேடிக்கையாக மிர்சா "இந்திய தண்டனை சட்டத்தில் உள்ள எந்த பிரிவையும் அவர்கள் எங்களுக்கு எதிராக பிரயோகப்படுத்தாமல் விட்டு வைக்கவில்லை என்று நினைக்கிறேன்" என்று கூறுகிறார்.

வழக்கம் போல் கொலை செய்வது, தேசத்திற்கு எதிராக போர் தொடுப்பது என குற்றம் சாட்டப்பட்டனர்.

லதீஃப் அஹ்மத் வாஜாவால் அவர் விடுதலை செய்யப்பட்டதை நம்பவே இயலவில்லை. அவர் வீட்டில் அவருக்கு தூக்கமே வரவில்லை. தான்




தான் வீடு திரும்பியுள்ளார். எப்படி அவருக்கு தூக்கம் வரும்?

முதலில் எங்களை உத்தரபிரதேசத்தில் உள்ள கோராக்பூர் என்ற இடத்திற்கு அழைத்து சென்றனர். பின்னர் எங்களை வண்டியின் தரையில் கிடத்தி டெல்லிக்கு கொண்டு வந்தனர். அந்த பயணம் மிகக் கொடுமையானது.

பின்னர் அவர்கள் செய்யும் சித்ரவதைகளான மர்மஸ்தானத்தில் மின்சாரம் பாய்ச்சுவது, அடிப்பது, உதைப்பது எல்லாம் வழமையாகிப்போனது. நல்லவேளை எங்களை பன்றிகளோடு அமர்த்துவது சிறுநீரை குடிக்க செய்வது போன்ற கொடுமைகளை செய்யவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் இந்த கொடுமைகள் அவர்களுக்கு பின்னால் கைது செய்யப்பட்ட முஸ்லிம்களுக்கு நிகழ்த்தப்பட்டது என்றும் சாட்சியளிக்கின்றனர்.

நாங்கள் நிரபதாதிகள் என்பதால் விடுதலையாகி விடுவோம் என்று நினைத்தோம். ஆனால் அதற்கு இவ்வளவு காலம் பிடிக்கும் என்று நினைக்கவில்லை என்கிறார் நசீர்.

பல்வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்ட அவர்கள் ஜெய்ப்பூர் சிறைச்சாலை கொடுமையானது எனக் கூறுகின்றனர். சிறைக்குள் இருந்த பாகிஸ்தானி

எப்படி விடுதலை செய்யப்பட்டோம் என்பதே அவருடைய எண்ணம்.

லதீஃப் நேபாளில் உள்ள காட்மாண்டுவில் கைவினைப் பொருட்களை விற்பனை செய்பவர். அவர் தன் வியாபாரத்திற்காக காத்மாண்டு சென்றிருந்தார். அங்கே அசர் தொழுகையை தொழுதுவிட்டு அமர்ந்திருந்த போது டெல்லி சிறப்பு காவல்படையினர் அங்கே வந்தனர். அவரை துப்பாக்கி முனையில் இழுத்து கொண்டு சென்றனர். கொண்டு சென்ற இடத்தில் அவர் நிசாரையும் அலி முஹம்மதுவையும் கண்டனர். அப்போது தான் அவர்களை கைது செய்துள்ள விஷயமே அவர்களுக்கு தெரிய வந்தது.

அதற்கு பிறகு 23 வருடங்களுக்கு பிறகு இப்போது



கைதி ஒருவர் புல்வாமா தாக்குதலைத் தொடர்ந்து கல்லால் அடித்துக் கொல்லப்பட்டார். கொலை செய்தவர்களை தண்டிப்பதற்கு பதிலாக காஷ்மீரிகளையும் முஸ்லிம்களையும் செல்களுக்கு உள்ளேயே அடைந்து கிடக்கும்படி உத்தரவிடப்பட்டது. அதற்கு எதிராக போராட்டம் நடத்தியவர்களை முஸ்லிமல்லாத கைதிகளை வைத்து தாக்கினார்கள். இதில் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் நசீரும் ஒருவர். இப்போதும் என்னால் எனது இடது காலை மடக்கி அமர இயலாது என்கிறார். உள்ளூர் ஜமாஅத்தே இஸ்லாமி நபர்களின் தலையீட்டிற்கு பின்னர் தான் இந்த நிலை மாறியது.

ஜமாஅத்தே இஸ்லாமி மக்கள் தான் நாங்கள் விடுதலையடைய காரணம் என்கின்றார்கள் ஐவரும். அவர்களுடைய சட்டக்குழுமம் தான் எங்களுக்கு உதவி செய்தது என்கிறார்கள்.

இரண்டு முக்கியமான நபர்களுக்கு நான் நன்றி சொல்லியாக வேண்டும் என்கிறார் நிசார். ஒன்று உச்சநீதிமன்ற வழக்கறிஞர் காம்னி ஜெய்ஸ்வால் மற்றொன்று புரபசர் எஸ்.ஏ.ஆர். ஜிலானி அவர்கள்.

“திருமதி காம்னி அவர்கள் தேவதையை போன்றவர்” என்கிறார் நிசார்.

“அவர் மிகப்பெரிய வழக்கறிஞராக இருந்தும் இந்த வழக்கில் பணத்தை பெறாமலேயே வழக்கை மிக அர்ப்பணிப்போடு நடத்தினார். எங்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தார்.”

“நாங்கள் சிறைச்சாலைக்குள்ளேயே மரணித்து விடுவோம் என்று நினைத்தோம். அல்ஹம்துலில்லாஹ் வெளியே வந்து விட்டோம். எனக்கு எதிர்காலம் குறித்தெல்லாம் எந்த எண்ணமும் கிடையாது. எதிர்காலம் என்று ஒன்று இருக்கிறதா என்றே தெரியவில்லை” என கண்ணீருடன் பேசுகிறார்.

வாஜாவும் தன் தந்தையின் இறுதி சடங்கில் கூட கலந்து கொள்ள முடியவில்லை.

“எனக்கு 17 வயது அப்போது. நாங்கள் அப்பாவிகள் அதனால் விடுதலை செய்யப்படுவோம் என்று நிச்சயம் நினைத்தோம். ஆனால் அதற்கு 23 ஆண்டுகளா? யார் எங்கள் இளமையை திருப்பித் தருவது. என் தம்பிக்கு 35 வயதாகிறது. ஆனால் அவன் எனக்காக காத்திருக்கிறான். இன்னும் திருமணம் புரியவில்லை.

சிறைக்குள் கடுமையான சித்ரவதைகள். ஜெய்ப்பூர் சிறை குவாண்டனாமோ சிறையை விட மோசமானது. ஆனால் இப்போது என்னுடைய தாயின் கனிவான பார்வை அந்த கஷ்டங்கள் எல்லாவற்றையும் மறக்கடிக்க செய்து விட்டது” என்கிறார் வாஜா.

ஆக மொத்தத்தில் நிரபராதிகள் அப்பாவிகள் ஐந்து பேர் தங்கள் வாழ்க்கையின் 23 வருடங்களை தொலைத்து விட்டு நிற்கிறார்கள். யார் அந்த 23 வருடங்களை அவர்களுக்கு திருப்பித் தர முடியும். ஏதாவது நிவாரணம் அவர்களுக்கு வழங்கப் பட்டதா? அப்படி ஏதேனும் நிவாரணம் தான் வழங்கப்பட இயலுமா?

இப்படி இவர்களின் மீது பொய் வழக்கை ஜோடித்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் ஒன்றுமில்லை என்பதே பதில்.

இறுதியாக இப்படி நிரபராதிகள் என விடுவிக்கப்படும் வழக்கில் அப்பாவிகள் பாதிக்கப் பட்டார்கள் என்பது மட்டுமல்ல குற்றவாளிகள் தப்பித்து விட்டார்கள் என்பதும் நீதிமன்றத்தால் கவனிக்காமல் விட்டுவிடப்படுகிறது. தவறாக வழக்கை ஜோடித்தவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே உண்மை குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதை உறுதி செய்ய முடியும்.

<https://caravandaily.com/jailed-acquitted-kashmiris-released-after-23-years-try-to-reconnect-with-the-world/

<https://www.greaterkashmir.com/news/kashmir/jaipur-high-court-acquits-three-srinagar-residents-after-23-years-family-demands-compensation/

<https://caravandaily.com/watch-acquitted-after-23-years-in-jail-kashmir-man-breaks-down-at-parents-grave/


தங்களது கருத்துகளை

+91 9092723753

என்ற கைபேசிக்கு

வாட்ஸ்ஆப்-இல் பகிரவும்



# போதிய ஆதாரங்கள் இல்லை 4 பேர் மீதான என்.ஐ.ஏ வழக்கு வாபஸ்

பயங்கரவாத செயல்களில் தொடர்புடையவர்கள் என்று கைது செய்யப்பட்ட நான்கு பேர் மீது போதிய ஆதாரங்கள் இல்லாததால் அவர்கள் மீது இருந்த வழக்கை தேசிய புலனாய்வு அமைப்பு வாபஸ் பெற்றுள்ளது. பயங்கரவாத செயல்களில் தொடர்புடையவர்கள் என்று கைது செய்யப்பட்ட நான்கு பேர் மீது போதிய ஆதாரங்கள் இல்லாததால் அவர்கள் மீது இருந்த வழக்கை தேசிய புலனாய்வு அமைப்பு வாபஸ் பெற்றுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதாக 14 பேர் டெல்லியில் கைது செய்யப் பட்டனர். இவர்கள் அனைவரும் ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்று கருதி கைது செய்யப்பட்டனர். அத்துடன் இவர்கள் டெல்லியில் பயங்கரவாத செயலை நடத்த திட்டம் தீட்டியதாக கூறி தேசிய புலனாய்வு அமைப்பு கைது செய்தது.

இந்நிலையில் என்.ஐ.ஏ கைது செய்த 14 பேரில் முகமது இர்ஷாத், ரயீஸ் அகமது, சையத் மாலிக் மற்றும் முகமது அசாம் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த நான்கு பேரும் பயங்கரவாத செயலில் ஈடுபட்டதற்கான போதிய ஆதாரம் இல்லாததால் இவர்கள் அனைவரும் ஆறு மாத சிறை வாசத்திற்குப் பிறகு தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

view-source:http://www.puthiyathalaimurai.com/news/india/68039-nia-drops-terror-charges-against-four-

நன்றி - புதிய தலைமுறை

பயங்கரவாத தாக்குதல்கள் மூலம் இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்த முயன்றதாக கூறி 4 பேர்களை என்.ஐ.ஏ என்ற தேசிய புலனாய்வு நிறுவனம் கடந்த டிசம்பர் 2018 அன்று கைது செய்யப் பட்டனர். முகமது இர்ஷாத், ரயீஸ் அகமது, சயீத் மாலிக் மற்றும் முகமது ஆஸம் ஆகிய நால்வரை என்.ஐ.ஏ. ஆறு மாத சிறைவாசத்திற்கு பிறகு அப்பாவிகள் என விடுவித்துள்ளது.

அதில் முஹம்மது இர்ஷாத் ஆட்டோ ஒட்டுனர். ரயீஸ் அஹ்மத் வெல்டிங் கடையில் வேலை செய்கிறார். ஆஸம் மருந்துகடை நடத்தி வருகிறார். டிசம்பர் மாதம் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் இர்ஷாத் வெடிகுண்டுகளை மறைத்து வைக்க பதுக்குமிடங்களை தயார் செய்து கொடுத்தார் என என்.ஐ.ஏ. தெரிவித்திருந்தது. ரயீஸ் அஹ்மதுவும் சயீதும் சேர்ந்து 25 கிலோ வெடிமருந்துகளை வாங்கி ராக்கெட்டுகளையும் ஏவுகணைகளையும் செய்யவிருந்ததாகவும் என்.ஐ.ஏ தெரிவித்திருந்தது. ஆசம் ஆயுதங்களை ஏற்பாடு செய்து தர மூளையாக இருந்ததாகவும் என்.ஐ.ஏ. தெரிவித்திருந்தது.

ஆறு மாதங்கள் அவர்களை அலைகழித்த பின்னர் அவர்களின் குடும்பத்தார்களின் நிம்மதியையும் பொருளாதாரத்தையும் செலவளித்த பின்னர் அவர்கள் அப்பாவிகள் என தற்போது என்.ஐ.ஏ. அவர்களை வழக்கிலிருந்து விடுவித்துள்ளது.

ஆதாரம் -

<https://caravandaily.com/four-muslim-youths-walk-free-in-terror-cases-after-no-evidence-found/



# குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட 6 பேர், 23 ஆண்டுகளுக்குப் பிறகு நிரபராதி என விடுதலை!

நாங்கள் விடுதலையாகிவிட்டோம் ஆனால் நாங்கள் இழந்த 23 வருடங்களை யார் தருவார்? 1996 குண்டுவெடிப்பு வழக்கில் விடுதலையான 5 பேர் குமுறல்!

கடந்த 1996ம் ஆண்டு மே மாதம் 22ம் தேதி ஆக்ராவில் இருந்து பிகனேர் நோக்கி ஜெய்ப்பூர்-ஆக்ரா நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த பேருந்து ஒன்றில், சம்லெட்டி கிராமம் அருகே குண்டு வெடித்தது. இந்த குண்டுவெடிப்பில் 14 பேர் கொல்லப்பட்டனர் 37 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த குண்டு வெடிப்பானது டெல்லி லாஜ்பத் நகர் குண்டு வெடிப்புக்கு மறுநாள் நிகழ்ந்தது. இந்த குண்டு வெடிப்பில் 13 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த குண்டுவெடிப்பு மற்றும் சவாய் மன் சிங் விளையாட்டு அரங்கில் 1996ல் நடைபெற்ற குண்டு வெடிப்பு உள்ளிட்ட சில குண்டு வெடிப்பு தாக்குதலுக்கு ஜம்மு காஷ்மீர் புரட்சி முன்னணி என்ற அமைப்பு பொறுப்பேற்றது. சம்லெட்டி குண்டுவெடிப்பு வழக்கில்12 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர்.



இந்நிலையில், இந்த வழக்கில் சதித்திட்டம் நடந்ததற்கான ஆதாரங்களை அரசுத் தரப்பு கொடுக்க தவறி விட்டது. இந்த குண்டுவெடிப்பின் முக்கிய குற்றவாளியான டாக்டர் அப்துல் ஹமீதுக்கும் இவர்களுக்கும் தொடர்பு உள்ளது என்பதை நிறுவ தவறி விட்டது என்று கூறிய ராஜஸ்தான்உயர்நீதிமன்றம் இந்த வழக்கில் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட 6 பேரை விடுதலை செய்து உத்தரவிட்டது.

நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டதையடுத்து நேற்று மாலை 5:30 மணி அளவில் லத்திப் அகமது பாஜா(42), அலி பாத்(48), மிர்சா நிசார்(39), அப்துல் கோனி(57), ரயீஸ் பெக்(56) ஆகிய ஐந்து பேரும் ஜெய்ப்பூர் மத்திய சிறையில் இருந்து வெளியேறினர். இந்த ஆறு பேரும் 1997 ஜூன் 8ம் தேதி முதல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

சிறையில் இருந்து வெளியேறிய அவர்கள் 5 பேர், குற்றப்பிரிவு புலனாய்வுத்துறை தங்கள் மீது இந்த வழக்கில் குற்றம் சாட்டும்வரை ஒருவரை ஒருவர் தங்களுக்கு யார் என்றே தெரியாது என்று தெரிவித்தனர். இந்த வழக்கிலிருந்து விடுதலையாகியுள்ள ரயீஸ்பெக் ஆக்ராவையும், கோனி ஜம்மு காஷ்மீரையும், மற்றவர்கள் ஸ்ரீநகரையும் சேர்ந்தவர்கள். இந்த குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்படுவதற்கு முன் பாத் பாய் வியாபாரம் செய்துவந்தார். கோனி பள்ளி ஒன்றை நடத்தி வந்தார். பாஜா காஷ்மீரி கைவினை பொருட்களை டெல்லி மற்றும் காத்மாண்டு ஆகிய இடங்களில் விற்பனை செய்து வந்தார். நிசார் 11ம் வகுப்பு பள்ளி மாணவன். இந்த நிலையில் தான் 6 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர்.

“நாங்கள் எந்த உலகத்திற்குள் அடியெடுத்து வைக்கிறோம் என்றே தெரியவில்லை; நாங்கள் எங்களது உறவினர்களை இழந்து விட்டோம்; எனது தந்தை மற்றும் தாய், மாமா ஆகியோர் இறந்து விட்டனர். நாங்கள் சிறையிலிருந்து குற்றமற்றவர்கள் என்று விடுதலையாகி விட்டோம். ஆனால் சிறையில் இருந்த 23 ஆண்டுகளை எங்களுக்கு யார் திரும்ப தருவார்” என்று ரயீஸ்பெக் கேள்வியெழுப்பியுள்ளார்.

“இந்த வழக்கில் என்னை கைது செய்யும் போது எனக்கு 16 வயது தான்; ஆனால் எனக்கு 19 வயது என்று கூறி என் மீது குற்றம் சுமத்தி சிறையில் அடைத்தனர். தற்போது எனக்கு 39 வயது ஆகிறது. ஆனால் சிறையில் இருந்த காலத்தில் நம்பிக்கையை ஒரு போதும் இழக்கவில்லை. இனிமேல் தான் புதிய வாழ்க்கையை தொடங்க வேண்டும்” என்று சலீம் தெரிவித்தார்.

சம்லெடி நகர் குண்டுவெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்ட 12 பேரில் 2014ல் ஒருவரும், நேற்று 6 பேர் என இதுவரை 7 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எனினும் திகார் சிறையில் உள்ள ஜவீத்கான் மீது லஜ்பத் நகர் குண்டுவெடிப்பு வழக்கின் மீதான விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதால் அவர் வெளியேற வில்லை. 1997ல் கைது செய்யப்பட்டாலும் இந்த வழக்கின் மீதான விசாரணை 2011ம் ஆண்டில்தான் தொடங்கியது. 23 ஆண்டு வாழ்க்கையை இழந்து விட்டார்கள் என்று வேதனை தெரிவிக்கின்றனர் இவர்களது உறவினர்கள்.

<https://www.ns7.tv/index.php/ta/tamil-news/india/24/7/2019/samleti-blast-case-6-accused-are-accquited-rajastan-high-court>

<https://indianexpress.com/article/india/dausa-blast-rajasthan-high-court-police-jaipur-5846454/>



விடுதலை செய்யப்பட்டவர்களில் 10 பேர்

# 25 வருடங்களுக்கு பிறகு நிரபராதிகள் அப்பாவிகள் என விடுவிக்கப்பட்ட மஹாராஷ்டிர முஸ்லிம்கள்

பாபரி மஸ்ஜித் தகர்ப்புக்கு பழி வாங்குவதற்காக இந்துக்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாக சந்தேகித்து 11 பேர்மீது 1994ஆம் ஆண்டு குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர். ஜமீல் அஹ்மது கான், முஹம்மது யூனுஸ், யூசுப் கான், வாசிம் ஆசிஃப், அய்யூப் இஸ்மாயில் கான், ஷேக்ஷஃபி, ஃபரூக் அஹ்மது கான், அப்துல் காதர் ஹபீபி, சையத் அஷ்ஃபாக்மீர், மும்தாஜ் முத்து ஸாமீர், ஹாரூன் அன்சாரி ஆகியோர் கைது செய்யப்பட்டவர்கள்.

2003ம் ஆண்டு மஹாராஷ்டிரா அரசு இவர்கள் மீதான தடா குற்றச்சாட்டை திரும்ப பெற்றுக் கொண்டது. அவர்கள் மீதான குற்றச்சாட்டை தள்ளுபடி செய்யவும பரிந்துரைத்தது. ஆனாலும் நாசிக் நீதிமன்றம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தள்ளுபடி செய்தது. வருடக் கணக்கான அவர்கள் அலைகழிக்கப்பட்டனர். 2012ம் ஆண்டு அவர்கள் உச்சநீதிமன்றத்தை அணுகினர். அப்போதும் நீதி கிடைக்கவில்லை. 2016இல் மீண்டும் அணுகினர். இப்போது உச்சநீதிமன்றம் விசாரணை நீதிமன்றத்தின் விசாரணையை ஒரு வருடத்திற்குள் முடிக்க மட்டும் உத்தரவிட்டது. விசாரணை ஜுலை 2018 தொடங்கியது. இறுதியாக தடா நீதிமன்றம் அவர்கள் குற்றமற்ற அப்பாவிகள் என தீர்ப்பளித்தது. ஆனால் அதற்குள்ளாக அவர்களுடைய 25 வருட வாழ்க்கை குற்றவாளிகளெனவே கருதப்பட்டு முடிவடைந்து விட்டது.

ஆதாரம் -

<https://www.aljazeera.com/indepth/features/maharashtra-muslims-acquitted-terrorism-25-years-190315001903417.html>

<https://thewire.in/law/muslim-men-acquitted-tada-babri-masjid>



நிரபராதி என விடுவிக்கப்பட்ட ஜமீல் அஹ்மத் கான்



ஃபரூக் கான் கல்லூரி விரிவுரையாளர் தன் மகனுடன்



குற்றம் சாட்டப்பட்டு விடுதலை
செய்யப்பட்ட மருத்துவர் முஹம்மது யூனுஸ்



# கேரள நீதிமன்றம் 12 வருடங்களுக்குபிறகு 5 அப்பாவி முஸ்லிம்களை நிரபராதிகள் என விடுதலை செய்தது

என்.ஐ.ஏ நீதிமன்றத்தால் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்ட 5 அப்பாவி முஸ்லிம்களை கேரள நீதிமன்றம் நிரபராதிகள் என தீர்ப்பளித்து விடுதலை செய்துள்ளது.

தடை செய்யப்பட்ட சிமி இயக்கம் சார்பாக இரகசிய கூட்டம் 2006ம் ஆண்டு நடத்தியதாக சந்தேகித்து கைது செய்யப் பட்டனர்.

முதல் குற்றவாளிக்கும், இரண்டாம் குற்றவாளிக்கும் 14 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் மற்ற மூன்று பேர்களுக்கு 12 ஆண்டு சிறை தண்டனையும் என்.ஐ.ஏ நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது.

யு.ஏ.பி.ஏ (சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்கும் சட்டம்) மற்றும் இந்திய குற்றவியல் சட்டத்தின் பல் வேறு பிரிவுகளின் கீழ் இந்த தண்டனைகள் வழங்கப் பட்டன. 2015ம் ஆண்டு இந்த தீர்ப்பளிக்கப்பட்டது.

தற்போது கேரள நீதிமன்ற அமர்வு இவர்களை அப்பாவிகள் என விடுதலை செய்துள்ளது. ஷாதுலி, அப்துல் ராசிக், அன்சர் நத்வி, நிசாமுத்தீன், ஷம்மி என்ற 5 பேர்கள் தான் அவர்கள்.

12 வருடங்கள் அவர்களுடைய வாழ்க்கையின் முக்கியமான பகுதியை சீரழித்து விட்ட பின்னர் இந்த தீர்ப்பு குற்றமற்றவர்கள் என்ற பெயரைத் தவிர அவர்களுக்கு பெரிதாக ஒன்றையும் பெற்றுத்தரப் போவதில்லை. உதவப் போவதில்லை.

இதே வழக்கில் ஏற்கனவே 11 பேரை நீதிமன்றம் விடுவித்திருந்தது. இந்தியாவில் முஸ்லிம்கள் மீது போடப்படுவது பொய் வழக்குகளே, குறிப்பாக என்.ஐ.ஏ முஸ்லிம்களுக்கு எதிராக பொய் வழக்குகளை புனைகிறது என்பதை மேற்கண்ட தீர்ப்புகள் நிரூபிக்கின்றன.

இவர்கள் அனைவரும் அப்ரூவராக மாறிய ஒருவரின் ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே என்.ஐ.ஏ நீதிமன்றம் இவர்களை குற்றவாளிகளென தீர்ப்பளித்துள்ளதையும் இவர்களுக்கு எதிராக எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை எனவும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

<https://thecognate.com/kerala-high-court-acquits-5-muslim-youths-in-terror-case-after-12-years/>




# NIA கைதுகள் உண்மை என்ன? நேரடி கள ஆய்வு

கடந்த ஜூலை மாதம் தமிழகத்தின் சென்னை மற்றும் நாகை மாவட்ட பகுதிகளில் என்.ஐ.ஏ. என்கிற தேசிய புலனாய்வு முகமை இந்தியாவில் பயங்கரவாத செயல்பாடுகளில் ஈடுபட திட்டமிட்டதாக கூறி சில முஸ்லிம் இளைஞர்களை கைது செய்திருந்தது. இந்த சம்பவம் தமிழக மக்களிடத்தில் ஒரு வித படபடப்பை ஏற்படுத்தியது.

**இந்த கைது நடவடிக்கைகள் குறித்த உண்மைத் தன்மையை மக்கள் மத்தியில் கொண்டு வர வைகறை வெளிச்சம் உண்மை கண்டறியும் குழு ஒன்று கள ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. அவை குறித்த தகவல்கள் பின்வருவன;**

*டிசம்பர் 2017ம் ஆண்டு மதுரையில் என்.ஐ.ஏ.வால் பல முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அப்போது மதுரையில் நாம் நடத்திய நேரடி கள ஆய்வில் அந்த மக்களின் மீது NIA வைக்கும் எந்த வித குற்றச்சாட்டுக்கும் ஆதாரமில்லை என்பதையும், அதனுள் இருந்த முரண்பாடுகளையும் வெளிக்கொணர்ந்தோம்.*

*அதே போல் ஜனவரி 2019ல் டெல்லி மற்றும் உத்திரபிரதேசத்தில் பெரும் பரபரப்புடன் கைது நடவடிக்கையை நிகழ்த்தியது NIA. அந்த கைது பற்றியுமான முழு ஆய்வறிக்கையை நமது வைகறை வெளிச்சம் இதழில் வெளியிட்டிருந்தோம். அதிலும் NIAவின் போலி முகத்தை தோலுரித்துக் காட்டப்பட்டது மக்கள் மத்தியில்! அதே போல் தற்போது நடத்தப்பட்டிருக்கும் கைதுக்கு பின்னாலிருக்கும் மர்மத்தை விடுவித்து, இதன் பின்னாலுள்ள பெரிய சதித்திட்டத்தையும் வெளிக்கொணர முழு முயற்சி எடுத்திருக்கிறோம்.*

*வழக்கம் போல இந்த சம்பவத்திலும் கைது செயப்பட்டது முஸ்லிம்கள் என்று தெரிந்தவுடன் மக்கள் மத்தியில் பரபரப்பை அதிகப்படுத்தி பொய்ச் செய்திகளை அடுக்குவதில் பொதுத்தள ஊடங்கள்*

குறை வைக்கவே இல்லை. உண்மையை அறிந்து கொள்ளவும் அவைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லவும் அவர்கள் முயலவில்லை.

## NIA வின் அறிவிப்புகள் படி கைது விவரங்கள்

தாங்கள் நடத்திய கைது நடவடிக்கைகளை, சோதனை நடவடிக்கைகளை NIA தங்களது வலைத்தளத்தில் பதிவேற்றி விடுவது நடைமுறை. அதில் குறிப்பிட்டிருப்பது போல் மொத்தம் 17 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

RC-16/2019/NIA/DLI(Tamilnadu Ansarullah Case) என்ற வழக்கின் கீழ் சென்னையை சேர்ந்த சையத் புகாரி(A-1), நாகையை சேர்ந்த ஹசன் யூனுஸ் மரக்கையார்(A-2), நாகையை சேர்ந்த ஹாரிஸ் முகம்மது(A-3) ஆகியோரின் மீது 09.07.19 அன்று குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அதை தொடர்ந்து 13ம் தேதி மூவர் வீட்டிலும், அவர்கள் தொடர்புடைய இடங்களிலும் சோதனை நடத்தப்பட்டது. அதில் லேப்டாப், சிம் கார்டுகள், செல்போன்கள், பாபரி மஸ்ஜித் குறித்தான சில மாத இதழ்கள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டன. ஹாரிஸ் முகம்மது மற்றும் ஹசன் அலி இருவரும் 13ம் தேதி நாகப்பட்டினத்தில் கைது செய்யப்பட்டு 14ம் தேதி சென்னையில் உள்ள NIA நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கின் தொடர்ச்சியாகவே 13.07.19 அன்று மற்ற 7 பேர் கைது செய்யப்பட்டனர். பிறகு 15.07.19 அன்று 7 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் (A-1) குற்றவாளி என்று கருதப்படும் சையத் புகாரி மட்டும் கைது செய்யப்படவில்லை.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது 19.07.19 அன்று 8 நாட்கள் காவலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 20.07.19 அன்று கைது செய்யப்பட்ட மீதி 14 பேர் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. இச்சோதனையில் லேப்டாப், சிம்கார்டு போன்றவை பறிமுதல் செய்யப்பட்டன.

## கள ஆய்வின் தொடக்கம்

“வைகறை வெளிச்சம்” உண்மை கண்டறியும் குழு மூலம் இந்த கள ஆய்வை மேற்கொண்டோம். தொடக்கமாக மதுரையில் உள்ள வஹ்தத் இ இஸ்லாமி அமைப்பை சார்ந்த உறுப்பினர்களை சந்தித்து, சென்னையில் உள்ள வஹ்தத் இ இஸ்லாமியின் தமிழக தலைவர் சையத் புகாரி பற்றியான தகவலை கேட்டோம். சையத் புகாரி அவர்களை மதுரையை சேர்ந்த அலாவுதீன்(வஹ்தத் இஸ்லாமியின் உறுப்பினர்) அவர்களை நேரில் சென்று சந்தித்து வந்திருந்தார். அவரிடம் சையத் புகாரி அவர்கள் கூறிய தகவலையும் அவருக்கு தெரிந்த தகவலையும் பகிர்ந்து கொண்டார்.

பத்திரிகையில் வந்ததற்கும் அங்கே கேட்ட கேள்விகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. துபாயிலிருந்து வந்தவர்களுக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு? நாகையில் கைதானவர்களுக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு? இவர்களுடன் பணப்பரிவர்த்தனையில் நீங்கள் ஈடுபட்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. அதை பற்றி சொல்லுங்கள்? என்ற கேள்விகளை தான் திரும்ப திரும்ப கேட்டிருக்கிறார்கள். தனி மனித விருப்பு, வெறுப்பில் உருவாக்கப்பட்ட கதைகள் போன்றவற்றை கேட்டிருக்கிறார்கள். அவர்களிடம் எந்த ஆதாரமும் இல்லை. எதுவுமே இல்லாத காரணத்தால் இந்த வழக்கெல்லாம் ஒன்றும் இல்லாததாக ஆகிவிடும். கைது செய்யப்பட்டவர்களில் யார் யாரை தெரியும் தெரியாது என்பதை மட்டும் கேட்கிறார்கள். அதில் சிலரை அவருக்கு தெரியும், சிலரை பார்த்தது கூட கிடையாது என்கிறார். காலையில் விசாரணைக்கு சென்று மாலை விசாரணை முடிந்ததும் திரும்புகிறார்.

துபாயில் இருந்து வந்தவர்களில் இப்ராஹிம் ஜமாலி அவர்கள் ஜமியத்துல் அன்சார் என்ற பெயரில் இயங்கியிருக்கிறார்கள். அதன் பெயரில் அன்சருல்லா என்ற பெயரில் வாட்சாப் குழுமம் ஒன்றை தொடங்கியிருக்கிறார்கள். இதில் உள்ள 14 பேர் தான் கைது செய்யப்பட்டிருக்கக் கூடும். அந்த தளம் துபாயில் நடத்தப்படும் பயான்கள், குர் ஆன் வகுப்பு போன்றவற்றிற்காக பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

ஹாரிஸ் ஏற்கனவே துபாயில் விசாரடிண என்ற பெயரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். அப்போது அவருடைய தாயார் - இந்தியாவிலிருந்து துபாய் அரசுக்கும், இந்த உள்துறை அமைச்சகத்திற்கும் புகார்களை அனுப்பினார். அதன் பின்னரே அவர் பற்றிய தகவல்களை துபாய் அரசு தெரிவித்தது. பிறகு அவர் விடுவிக்கப்பட்டு இந்தியாவிற்கு திரும்பிய அடுத்த நாள், துபாயில் இப்ராஹிம் ஜமாலி உட்பட பலர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். இப்ராஹிம் ஜமாலியிடம் துபாயில் கைது செய்யப்பட்டதும், துபாயில் இஸ்லாத்தை மேலோங்கச் செய்யும் வேலைகள், தனியாக கூட்டம் கூடுதல் (பயானுக்காக) போன்றவை செய்யக்கூடாது என்பதெல்லாம் தெரியாதா? என்று கேட்டிருக்கிறார்கள். இதுபோல் துபாயில் பயான்களில் கலந்து கொண்டோரை கூட விட்டு வைக்கவில்லை. இப்படி நூற்றுக்கணக்கான பேரை விசாரித்திருக்கிறார்கள். எந்த அமைப்பும் சாராமல் பயானுக்கு மட்டும் வரும் ஒருவரை விசாரிக்கும் போது, இங்கே பெண்கள் இருக்கிறார்கள். குடி இருக்கிறது. பொழுதுபோக்கிக் கொள்ள எல்லாமும் இருக்கும் போது நீங்கள் ஏன்

இஸ்லாத்தை பேசுகிறீர்கள் என அடித்திருக்கிறார்கள்.

அதே போல் பத்திரிகைகளில் வருவது போல் துபாயிலிருந்து நாடு கடத்தி கைதி பரிமாற்றம் நிகழ்ந்தது போல் சொல்கிறார்கள். அப்படியெல்லாம் நடக்கவில்லை, இவர்கள் எங்கள் நாட்டில் பணிபுரிய முடியாது என்று அமீரக தூதரகம் வெளியேற்றியிருக்கிறார்கள். அதன் பின் இந்தியா வந்து இறங்கியவுடன் அதிகாரிகள் கைது செய்திருக்கிறார்களே தவிர துபாயில் இவர்கள் மீது எந்த குற்றச்செயல்கள் மீதும் வழக்கில்லை.

## தேனியில் ஒரே வீட்டை சார்ந்த இருவர் கைது

தேனி, கோம்பை பகுதியில் மும்தாஜ் எனும் வயதான ஆசிரியர் ஒரு மதரசாவை நடத்தி வருகிறார். துபாயில் வேலை பார்த்து வந்த அவரது மகன்கள் இருவரும் துபாயில் ஆறு மாதத்திற்கு முன்பு கைது செய்யப்பட்டிருக்கின்றனர். துபாய் அரசு விடுவித்து இந்தியா வந்த பிறகு, இந்திய அரசு தற்போது அவர்களை கைது செய்திருக்கிறது. ஆனால், மும்தாஜ் அவர்கள் நம்மிடம் பேச தயங்கினார்கள். அந்த தயக்கத்தின் காரணமாக அவர்கள் நம்மிடம் எந்த தகவலையும் நேரடியாக தரவில்லை.

ஆனால் அவர்கள் பெரிதும் மனதளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது புரிய வந்தது. மதரசாவின் ஆசிரியர்கள் கைது செய்யப்பட்ட இருவரும் ரொம்ப நல்லவர்கள், அமைதியானவர்கள் பொய்யான வழக்கில் அநியாயமாக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். நாமும் அவர்களை அதற்கு மேல் வற்புறுத்தாமல் வெளிவந்து விட்டோம்.

## மதுரையை சேர்ந்த ஷேய்க் மைதீன் கைது

மதுரையில் உள்ள ஷேக் மைதீன் இல்லத்தை அடையும் போது அங்கே யாருமில்லை. அந்த வீட்டை பார்க்கும் போதே, அந்த குடும்பம் எவ்வளவு ஏழ்மை நிலையில் இருக்கும் என்று புரிந்து கொள்ள முடிந்தது. ஷெய்க் மைதீனின் தாயாருக்கு 70 வயதுக்கு மேல் இருக்கும். வீட்டை பற்றி விசாரிக்கும் போதே அவர் வீட்டை சுற்றியுள்ளவர்கள் கூடி விட்டார்கள். இதுபோல் கைது செய்யப்பட்டவர்களின் சுற்றத்தில் ஒரு பதற்ற நிலை உருவாக்கப் பட்டிருப்பதை உணர முடிகிறது. வீட்டில் யாரும் இல்லாத காரணத்தால் நாம் அடுத்தடுத்த இடங்களுக்கு நகர்ந்தோம்.

### பிரச்சனைக்கான காரணம் அலசல்

தொடக்கத்தில் கைது செய்யப்பட்டவர்களின் குடும்பத்தை பார்க்க எடுத்த முயற்சிகள் முழுமையாக எங்குமே வெற்றியடையவில்லை. அதுமட்டுமல்ல, தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் எவரின் குடும்பத்தாருக்கும் அதற்கான காரணம் தெரியவில்லை என்று புரிந்து கொள்ள முடிந்தது. அதனால் இந்த கைதுக்கான மூலக்காரணம் யார் என்று யோசிக்கும் போது முதலில் கைது செய்யப்பட்ட சையத் புகாரி, ஹாரிஸ், ஹசன் என்ற மூவரின் எண்ணம் தான் வந்தது. இதில் சையத் புகாரி கைது செய்யப்படவில்லை. மற்ற இருவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனால், அவர்கள் வீடுகளுக்கு சென்றால் தான் தேடுதலுக்கான விடை கிடைக்கும் என்று நாகைக்கு நகர்ந்தோம்.

அதுமட்டுமல்ல, இந்த கைதுக்கெல்லாம் காரணமாக சொல்லப்பட்டது நாகையைச் சார்ந்த ஹாரிஸ் முஹம்மது துபாயில் கைது செய்யப்பட்ட நடவடிக்கை தான். அதனால் அங்கே சென்றால் தான் விடை கிடைக்கும் என்ற சிந்தனையில் சென்ற நமக்கு இவ்வழக்கின் பின்னால் பெரும் சதி பிண்ணைப்பட்டிருப்பது தெரிய வந்தது. வாய்பேச்சில் சுற்றிக்கொண்டிருந்த புரளிகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடிந்தது.

## நாகையில் நமது ரிப்போர்ட்

## ஹாரிஸ் முகம்மது வீட்டில் சோதனை

நாகையில் ஜும்மா தொழுகை முடிந்ததும் கைது செய்யப்பட்ட ஹாரிஸ் முகம்மது வீட்டிற்கு சென்றோம். அங்கே ஹாரிஸ் அவர்களின் சகோதரி மட்டும் தான் இருந்தார்கள். அவர் பேசினார், "ஹாரிஸ் முஹம்மது துபாயில் கைது செய்யப்பட்டு, பிறகு மூன்று மாதத்தில் விடுதலையாகி டிசம்பர் 3ம் தேதி வீட்டுக்கு வந்தார். துபாயில் ஹாரிஸைக் கைது செய்து ஹசனை பற்றி மட்டும் தான் விசாரித்திருக்கிறார்கள்."

என்று கூறினார். நாம் அவரிடம் வேறு எதை பற்றியும் கேட்கவில்லை.

அதன் பிறகு உள்ளூரைச் சார்ந்த, ஹாரிஸ் மற்றும் ஹஸனுடைய நண்பரான ஃபைசல் என்பவரை சந்தித்து அவரிடம் பேசினோம்;

"துபாயில் கைது செய்யப்பட்டு ஹாரிஸ் முஹம்மதுடன் விடுவிக்கப்பட்டவர்கள் மொத்தம் 14 பேர். அவர்கள் எல்லோருமே துபாயில் நல்ல வேலையில் உள்ளவர்கள். அவர்களுக்கு இது பேரிழப்பு. அத்தனை நபர்களிடமும் துபாய் அதிகாரிகள், ஹசன் யார்? ஹசன் நடத்தும் அல் அக்ஸா பள்ளிக்கூடம் எப்படி? இதை மட்டும் தான் திரும்ப திரும்ப கேட்டிருக்கிறார்கள். துபாய் அரசுக்கு இங்கிருக்கும் ஹசனை பற்றி கேட்பதற்கான தேவை எங்கிருந்து வந்தது? என்ற கேள்விக்கெல்லாம் பதில் தெரியவுமில்லை,

புரியவுமில்லை என்றார்."

### ஹசன் உறவினர்கள்

## துபாயில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களின் பார்வை

துபாயில் ஹாரிஸுடன் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட உமர் ஷெரிஃப் அவர்களை சந்தித்தோம்.

"துபாயில் வேலை பார்த்து கொண்டிருக்கும் போது திடீரென அதிகாரிகள் அலுவலகத்திற்கு வந்தார்கள். பெயரை கேட்டு விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை கண்ணை கட்டி அவர்கள் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கே மூன்று மாதம் எங்களை சிறையில் வைத்திருந்தார்கள். ஆனால் மூன்று மாதமும் எங்களிடம் ஒரே கேள்வி தான் கேட்கப்பட்டது. ஹசன் யார்? ஹசன் நடத்தும் பள்ளிக்கூடத்தில் என்ன நடக்கிறது? என்பது பற்றியான கேள்விகள் மட்டுமே கேட்கப்பட்டது. துபாயில் முதலில் ஹசன் - இன் மாமா ஒருவர் கைது செய்யப்பட்டார். பிறகு நான் கைது செய்யப்பட்டேன். பிறகு ஹாரிஸ் என தொடர்ச்சியாக அனைவரும் கைது செய்யப் பட்டார்கள். அவர்கள் குறி முழுவதும் ஹசனும், ஹாரிஸும் மட்டும் தான்" என்றார்.

"பொருளாதார குற்றச்சாட்டு காரணமாக இருக்கலாம் என்று ஒரு புரளி இருக்கிறதே" என கேட்டதற்கு;

"அதெல்லாம் சுத்த பொய். ஊர்காரர்கள் பரப்பும் பொய் பிரச்சாரம். நான் கைதான எவரிடமும் இது சம்பந்தமா கேள்வியே கேக்கவில்லை. அவனுக கேட்டதெல்லாம் ஹசன் யாரு? ஹசன் நடத்துற ஸ்கூல் எப்படி? இது மட்டும் தான். துபாயில் 12 வருடமாக இருந்திருக்கிறேன். என்னுடைய 50 லட்சத்துக்கும் அதிகமான பணம் நான் பணிபுரிந்த துபாய் கம்பெனியில் தர வேண்டியிருக்கிறது. எல்லாமும் போய்விட்டது. இத்தனை ஆண்டு கால உழைப்பு வீணாகிவிட்டது." என்று பெரும் வருத்தத்தில் உள்ளார்.

### இந்திய உளவுத்துறையின் சதி

தொடர்ச்சியாக ஹசனின் மாமாவை சந்திக்க நேர்ந்த போது கைதுக்கான காரணமும், அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற சதித்திட்டத்தையும் புரிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. முதலில் துபாயில் கைது செய்யப்பட்டவர் இவர் தான். கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களில் மிகவும் வெளிப்படையாக பயப்படாமல் மன தைரியத்துடன் துபாய் அதிகாரிகளை எதிர்கொண்டு கேட்கும் கேள்விகளுக்கு எதிர் கேள்விகளையும் முன் வைத்துள்ளார். இவருக்கு 50 வயதுக்கு மேல் இருக்கும். நம்மை அறிமுகப்படுத்திக்கொண்ட பிறகு நடந்ததை பகிர்ந்து கொண்டார்.

"அலுவலகத்தில் இருக்கும் போது கைது செய்தார்கள். ஹசனை பற்றி விசாரிக்கும் போது அவன் மாமாதான் நான் அதற்கென்ன? நல்ல முறையில் ஒரு பள்ளிக்கூடத்தையே நடத்தி வருகிறான் அதற்கென்ன? என்று கேட்டதற்கு, அதெல்லாம் கிடையாது எங்களுக்கு தகவல் கொடுத்து விசாரிக்க சொன்னதே இந்தியாவின் RAW (இந்தியாவின் உளவு அமைப்பு) தான் என்றார்கள். ஐ.எஸ்.ஐ.எஸ். பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, என்ன சொல்லனும்? அவனை உருவாக்கியதே அமெரிக்கக்காரன் தானே? எல்லாமே யூதர்களோட பெரிய சதி. இதுவரை ஒரு தடவையாவது இஸ்ரேல் மீது ஏதும் தாக்குதல் நடத்தியிருக்கிறதா அந்த அமைப்பு? இல்லையே! முஸ்லிம்களை அழிக்க, அமெரிக்கா போன்ற நாடுகளால் உருவாக்கப் பட்டதே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு என்றேன். இந்த பிரச்சனைக்கெல்லாம் மூல காரணம் என்ன தெரியுமா? ஹசன் நடத்திய பள்ளி தான். இங்கே ஹசன் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கும் முன் ஒரே ஒரு பள்ளிக்கூடம் தான் இருந்தது. அது RSS சித்தாந்தம் உள்ள ஒருவரால் நடத்தப்படுகிறது. ஹசன் பள்ளிக்கூடம் தொடங்கி திறம்பட நடத்தியதால் பள்ளி பல பாராட்டுகளைப் பெற்றது. அவரையும் மாநில கல்வியமைச்சர் பாராட்டி விருதும் வழங்கினார். இதானால் அந்த பள்ளிக்கூடத்தில் படித்த பாதி பிள்ளைகள் ஹசன் பள்ளிக்கு வந்துவிட்டார்கள். அதனால் பொறுக்க முடியவில்லை. ஹசன் பள்ளியின் மீது பல மொட்டக் கடிதாசிகள் மூலம் புகார் சென்றுள்ளது. அதற்கான விசாரணையும் நடைபெற்றிருக்கிறது. அதற்கு பிறகு முதல்வர் அலுவலகத்திற்கு புகார் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைச் சுற்றி இந்த சதிவலை பின்னப்பட்டது. வழக்கின் பின்னனியில் ஒன்றும் இல்லை. அதனால் தான் ஏதாவது கிடைத்துவிடுமா என இன்னும் முயற்சிக்கிறார்கள். இதுவரை அவர்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. இருந்தால் தானே கிடைப்பதற்கு" என்கிறார்.

இறுதியாக ஹஸன் தம்பியை சந்தித்தோம். இவரும் துபாய் அரசால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர். ஆனால் மற்றவர்களை விட அதிகம் சித்ரவதைகளை அனுபவித்தவர். துபாய் விமான நிலையத்தில் பணிபுரிந்து கொண்டிருதவர். அவர் நம்மிடம் பகிர்ந்து கொண்டவை;

"எல்லோரையும் விசாரித்தது போல் தான், என்னிடமும் ஹசன் யார்? ஹசன் நடத்தும் பள்ளிக்கூடம் எப்படி என்பது பற்றி தான் கேட்டுக்கொண்டிருந்தார்கள். 8 நாட்கள் உட்காரவும், தூங்கவும் விடாமல் அதிகம் குளூரட்டப்பட்ட அறையில் நிற்க

## நாகையில் என்.ஏ.வின். சோதனையின் போது

13.07.2019 – என்.ஐ.ஏ. வின் சோதனையின் போது விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த ஜாஃபர் சாதிக் அவர்கள் திறம் பட செயல்பட்டு ஊரில் பதற்றத்தைத் தணித்தார்.

பின்னர் 14.07.2019 அன்று நீ.அ.ம.க. வின் அசாருடன் இணைந்து பத்திரிகையாளர்கள் சந்திப்பிற்கும் ஏற்பாடு செய்தார். அவருக்கும் அசாருக்கும் முஸ்லிம் சமுதாயத்தின் சார்பில் நன்றிகள் பல. இதற்காக அவரை பின்னர் காவல் துறையைச் சார்ந்தவர்கள் அழைத்துச் சென்று கஷ்டப்படுத்தினார்கள்.

- ந.நி.

வைத்திருந்தார்கள். மின்சாரம் செலுத்தும் முயற்சியிலும் இறங்கினார்கள். ஆனால் செய்யடவில்லை. மூன்று மாதத்திற்கு பிறகு விடுதலையானோம். இதற்கு பின்னால் என்ன சதி இருக்கிறது என தெரியவில்லை. ஹசன் பள்ளிக் கூடத்தை தௌஃபிக் என்பவருடன் இணைந்து வெற்றிக்கரமாக நடத்தி வருகிறார். அதைத்தவிர வேறு எதுவும் ஹசன் செய்யவில்லை. இன்னொன்று இந்த சம்பவங்களுக்கும் இங்கிருந்த ஒருவருக்கும் நெருக்கம் இருப்பது போல தோன்றுகிறது. தேவிப்பட்டிணத்தை சார்ந்த ஒருவன் இதுபோல் காவல்துறைக்கு உளவு வேலை பார்த்து தருபவனாக இருந்தான். இவனுக்கு ஹேக்கிங் போன்ற தொழில் நுட்பங்கள் தெரியும். ஒரு தனியார் துப்பறியும் நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தான். அவன் தான் இந்த கைது நடவடிக்கைகளுக்கெல்லாம் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம். ஏனென்றால், அவன் இருக்கும் இடங்களிலெல்லாம் பிரச்சனை ஏற்படுகிறது. அவன் சாதாரண மனிதன் இல்லை. அவன் முகநூலில் அபூவின் பக்கம் என்ற பெயரில் செயல்பட்டு வந்தான். அவனது பெயரையும், புகைப்படத்தையும் போட்டு இலங்கை குண்டு வெடிப்புக்கு மூளையாக இருந்த சஹ்ரான் ஹாஷிம் தனது வலைத்தளத்தில் கருத்து வெளியிட்டிருக்கிறான். இப்படி அவன் பின்னனியில் பெரிய மர்மங்கள் இருக்கிறன. அவன் தான் இந்திய உளவுத்துறைக்கு இதுமாதிரியான பொய்யான தகவல்களை கொடுத்து, அவர்கள் துபாய் அரசை தொடர்பு கொண்டு இவ்வளவு பெரிய சதியை நிகழ்த்தியிருக்கக் கூடும்” என்றார்.

### சகோதரத்துவத்தை மேம்படுத்தும் பள்ளி

“ஹசனும் தௌஃபிக் என்பவரும் இணைந்து அல் அக்ஸா என்ற பள்ளியை நடத்தி வருகிறார்கள். 1 முதல் 5ம் வகுப்பு வரை இந்த பள்ளியில் வகுப்புகள் நடக்கிறது. முஸ்லிம்கள் நடத்தும் பள்ளி என்றாலும் இங்கு சகோதர சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகளும் படிக்கிறார்கள். இதர மத ஆசிரியர்களும் பணி புரிகிறார்கள். தௌஃபீக் அவர்கள் சொல்லும் போது, எங்களுக்கும் இந்த பள்ளிக்கூடத்தை தான் குறிவைக்கிறார்கள் என்பது தெரிகிறது. பள்ளிக்கூடத்தின் எல்லா ஆவணங்களும் மிகச்சரியாக பராமரிக்கப்படுகிறது. அரசின் அனைத்து சட்டங்களுக்கும் கட்டுப்பட்டு தான் இந்த பள்ளி நடைபெறுகிறது. அதனால் பள்ளிக்கு எந்த ஆபத்தும் வரவிட மாட்டோம் என்று தீர்க்கமாக கூறுகிறார் தௌஃபிக்.

எங்கள் பள்ளியில் இருந்து ஒரு வருடத்திற்கு முன் வேலையை விட்டு நின்ற ஒரு பெண் ஆசிரியரிடம் சென்று NIA தனது விசாரணையை நடத்தியிருக்கிறது. ஹசனுக்கு எதிரான ஆதாரங்களை ஏதாவது திரட்டிட முடியாதா என்று பெரும் முயற்சி மேற்கொள்கிறார்கள். இந்த பிரச்சனைக்கு பிறகு பள்ளியில் சில சலசலப்புகள் இருந்தாலும் எங்கள் குழந்தைகளின் பெற்றொர்களுக்கும், எங்கள் பள்ளியின் ஆசிரியர்களுக்கும் எங்கள் மீது நம்பிக்கை அதிக அளவில் இருப்பதால் யாரும் வெளியேறவில்லை.”

இந்த கைது நடவடிக்கைகளுக்கு முதல் காரணமாக அமைந்தது ஹசன் நடத்தி வந்த பள்ளிக்கூடம் என்பது கள ஆய்வில் தெரிந்து கொள்ள நேர்ந்தது. இந்த பள்ளிக்கூடம் சாதாரண மதரசாக்களை போல் அரபிப் பாடம் சொல்லித்தருவதல்ல. முழுக்க முழுக்க உயர் நவீன பள்ளிக் கூடங்களை போல வலைத்தளத்தில் மாணவர் சேர்க்கை, வலைத்தளத்திலேயே மாணவர் வருகைப்பதிவு என முற்றிலும் மாணாக்கர்களை முன்னேற்ற புதிய முயற்சிகளை மேற்கொண்டு மாணவர்களின் பெற்றோர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. அதுமட்டுமல்ல இந்த பள்ளிக்கு போட்டி பள்ளியாக இருந்த மற்றொரு பள்ளி இதனால் பின்னடைவை சந்தித்திருக்கிறது. இந்த பள்ளியில் சமூக சிந்தனை சார்பாக நடத்தப்படும் நிகழ்ச்சிகளும் கூட அவ்வப்போது நடத்தப்படும்.

உதாரணத்திற்கு 26/11 நாடாளுமன்ற தாக்குதலை நடத்தியது யார்? போன்ற இந்திய அரசும் அபிநவ் பாரத் எனும் பயங்கரவாத இயக்கமும் இணைந்து நிகழ்த்திய சதித்திட்டத்தை வெளிப்படுத்திய புத்தகத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவது, அதே போல் சிரியாவில் நடப்பது என்ன? என்பது போன்ற சர்வதேச செய்திகளை தொகுத்து அங்கே நடைபெறும் கொடுமைகளை வெளிப்படுத்துவது

போன்ற நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்துவார்கள். அதனால் அரசின் கவனம் பள்ளியின் மீது இருந்து வந்தது. பள்ளியை முடக்குவதற்கான வேலைகளை பார்த்தனர். ஆனால் எல்லாவிதமான சட்ட ஆவணங்களையும் மிகச்சரியாக வைத்திருந்ததால் பள்ளியை எதுவும் செய்ய முடிய வில்லை. இறுதியில் முஸ்லிம்கள் பாதிக்கப்படும் போது அதற்கு எதிராக குரல் கொடுத்து வந்த ஹசனை வைத்து பள்ளியை மூடும் திட்டத்தினை வகுத்தனர்.

“சகோதர சமயத்தவர்களிடம் நல்லெண்ணத்தையும், நெருக்கத்தையும் ஏற்படுத்திய பள்ளியை தீவிரவாத முத்திரை பதித்து, சர்வதேச அளவில் தீவிரவாதத்துடன் இணைத்து அந்த பள்ளியை மஞ்சக்கொல்லை ஊர் மக்களே வெறுத்து விடும் அளவுக்கான பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும்” என்ற எண்ணத்துடன் தான் இத்தகைய பெரும் சதித்திட்டம் தீட்டப்பட்டது. இதற்கான மேலும் ஆதாரங்களை நாம் இந்த கட்டுரையில் கொடுத்திருக்கிறோம்.

முஸ்லிம்களின் வளர்ச்சியை சிதைக்க எப்போதும் பயன்படுத்தப்படும் ஆயுதம் “தீவிரவாதி” பட்டம். அதையே இப்போதும் பயன்படுத்தி இருக்கிறது NIA. ஹசனை வைத்து சர்வதேச அளவில் பெரிய சதித்திட்டத்தினை உருவாக்கினார்கள். அதுமட்டுமல்ல இந்த திட்டத்தை வைத்து முஸ்லிம்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைந்திருந்த நாகையில் உள்ள மஞ்சக்கொல்லை முஸ்லிம்கள் வாழும் பகுதியை ஒன்றுமில்லாமல் ஆக்க விரும்பினர். ஹசனை காரணம் காட்டி துபாய் அரசுக்கு மஞ்சக்கொல்லை பகுதியை சார்ந்த, துபாயில் வேலை பார்க்கும் நல்ல சம்பளத்தில் இருக்கக்கூடிய மக்களை பற்றியான விவரங்களை துபாய் அரசிடம் கொடுத்து விசாரிக்க செய்தனர். அவர்களை மூன்று மாதம் வைத்து விசாரித்த துபாய் அரசு அவர்களை விடுவித்து எந்த வழக்கும் பதிவு செய்யாமல் இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது.

இதில் துபாயில் முன்னர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களில் ஒருவர் அன்சருல்லா என்ற வாட்சாப் குழுமத்தில் இருந்திருக்கிறார். இதை துபாய் அரசு விசாரிக்க அந்த குழுமத்தின் சார்பாக பயான்கள் நடத்தி வந்தது தெரிய வந்து அதிலுள்ளவர்களை துபாய் அரசு கைது செய்திருக்கின்றனர். அவர்கள் தான் தற்போது துபாயில் இருந்து இந்தியா வந்து இறங்கியதும் கைது செய்யப்பட்ட 14 பேர்.

இந்த கள ஆய்வில் மற்றொன்றும் தெளிவாக தெரிய வந்தது. துபாய் அரசே கேள்வி கேட்காத, சொல்லாத விடயமான பொருளாதார குற்றச்சாட்டுகள்! அது முழுக்க, முழுக்க ஊர் வாயால் கிளப்பப்பட்ட புரளி! அதுவும் முஸ்லிம்களில் இருந்தே உருவாக்கப்பட்டிருக்கிறது! வாய்க்கு அவல் கிடைத்தால் எப்படியும் பேசுவார்கள் என்பதற்கு ஏற்ப இத்தகைய புரளிகள் கிளப்பப்பட்டன! இதனையும் உபயோகித்து முஸ்லிம்களுக்குள் பிளவை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன! ஆனால் அது முறியடிக்கப்பட்டு விட்டது.

## ஹாரிஸ் மற்றும் ஹஸன் ISIS சிந்தனையில் உள்ளவர்களா?

NIA தனது அறிவிப்புகளில் இவர்கள் ISIS அமைப்பின் சிந்தனையில் உந்தப்பட்டு தனித்தனியாக நபர்களை ஆளெடுக்கும் வேலையை செய்து வந்தார்கள். அதன் தொடர்ச்சியாக அன்சருல்லா என்ற அமைப்பை உருவாக்கி தீவிரவாத செயல்களை நடத்த திட்டமிட்டிருந்தனர் என்பதாக கூறப்பட்டிருக்கிறது. அதே போல் இவர்களை ஆஜர்படுத்தப்படும் போது நீதிபதி கூட இப்படி சொன்னார், "NIA அதிகாரிகள் கூற்றுப்படி ஹசன் ISIS அமைப்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்பதும், தீவிரவாத செயலை நிகழ்த்த ஆளெடுத்தார் என்றும் சொல்லப்படுகிறது” எனக்கூறி 8 நாட்கள் அனைவரையும் காவலில் வைக்க உத்தரவிட்டார். (India Today 19.07.19)

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட ஹசன் மற்றும் ஹாரிஸ் அப்படியானவர்களா? அதற்கான பதிலை அவர்களே சொல்கிறார்கள். ஹஸன் மற்றும் ஹாரிஸ் சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை பற்றி பேசியது இன்றும் வலைதளத்தில் கிடைக்கிறது. அவர்கள் பொது நிகழ்ச்சியில் பேசியதை இங்கே தருகிறோம்.

## சிரியாவில் நடப்பது என்ன என்ற நிகழ்ச்சியில் ஹசனின் உரை

(உரையின் பாதியிலிருந்து) சிரியாவின் புரட்சியென்பது சிரியாவில் ஆரம்பிக்கப்பட்டதல்ல. இது அரபு வசந்தம் என்று சொல்லக்கூடிய அரபு நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டது. துனிசியா எனும் நாட்டில் 2010ம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதனுடைய தொடர்ச்சியாக துனிசியாவிலிருந்து எகிப்து, லிபியா, யெமென், சிரியா, பஹ்ரைன் என எல்லா அரபு நாடுகளிலும் தொடர்ந்தது. அதில் ஒருசில நாடுகளில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. எகிப்து அதிபராக இருந்த ஹோஸ்னி முபாரக் புரட்சிக்கு பிறகு பதவி விலகினார். லிபியா கடாஃபிக்கு எதிராக புரட்சி ஏற்பட பதவி விலகினார். பின் சில காலங்களிலேயே கொல்லப்பட்டார். எமன், அப்துல் ஹசாரேக்கு எதிராக புரட்சி ஏற்பட்டதும் பதவி விலகி பிறகு அவரும் கொல்லப்பட்டார். இப்படி புரட்சி

ஏற்படுத்தப்பட்டு அவர்கள் எந்த நோக்கத்திற்காக ஆரம்பித்தார்களோ அதை அடையவில்லை யென்றாலும் குறைந்தது அவர்கள் இலக்கில் 40 சதவீதமாவது வெற்றி பெற்றார்கள். ஆனால் சிரியாவில் மட்டும் அல் பஷாருக்கு எதிராக அது நிகழவில்லை.

சிரியாவை பொறுத்தவரை பஷர் அல் அசாத்க்கு எதிராக என்னென்ன குழுக்கள் போராடுகிறது என்பதனை நாம் பார்க்க வேண்டும். முதலில் களமிறங்கியது FSA என்ற Free Syrian Army.

பஷர் அல் அசாத் பொறுத்தவரையில் அவர் ஒரு அலவி ஷியா. ஷியாக்களில் உள்ள ஒரு பிரிவினர். இவர்கள் தான் அரசினுடைய அனைத்து பொறுப்பிலும் இருப்பார்கள். இவர்களை மீறி எதையும் செய்திட முடியாது. அப்போது முதலாவதாக எதிர்த்து களமிறங்கிய FSA அசாத்தை பதவியிறக்கம் செய்வதையே நோக்கமாக கொண்டிருந்தது. இவர்களுக்கு அடுத்த படியாக களமிறங்கிய கூட்டம் "ISIS அதாவது இஸ்லாமிக் ஸேடேட் ஆப் ஈராக் அண்ட் சிரியா என்று சொல்வார்கள். ஆனால், அதனுடைய உண்மையான பெயர் தான் அப்படியிருக்கிறது என்று சொன்னால் அதனுடைய செயல்பாடுகளை பார்த்தால் "இஸ்ரேல் சீக்ரெட் இண்டலிஜன்ஸ் சர்விஸ்" என்பது போல் தான் இருக்கிறது. இஸ்ரேலுக்கு எந்தெந்த வகையில் எல்லாம் உதவி செய்ய முடியுமோ, அந்தந்த வகையில் எல்லாம் தெளிவாக உதவி செய்கிறார்கள். இது ஆரம்பத்தில் ISIS என்று இல்லை ISI (இஸ்லாமிக் ஸ்டேட் ஆஃப் ஈராக்) என்றும் இருந்தது. இது அபூ மூசா என்பவரால் தொடங்கப்பட்டது. அவர்கள் இஸ்லாமிய ஆட்சியை கொண்டு வர வேண்டுமென்ற உண்மையான நோக்கத்திற்காக தொடங்கினார்கள். ஆனால் அவர் கொல்லப்படுகிறார். பிற்பாடு அபூ உமர் பக்தாதி என்பவர் பதவியேற்கிறார். பிறகு அவரும் கொலை செய்யப்பட்ட பிறகு அபூபக்கர் அல் பக்தாதி பொறுப்பேற்கிறார். இவர் தான் தற்போதைய தலைவராக இருக்கிறார். இவர்கள் சொல்வது என்ன? எல்லாவற்றிற்கும் இஸ்லாமிய சட்டம் தான் தீர்வு என்று சொல்லி விட்டு முஸ்லிம்கள் மீதே காஃபிர்கள் என்று பத்வா குத்தி அவர்களை கொலை செய்து விடுவார்கள். இது யாருடைய பண்பு எண்றால், கவாரிஜ்களுடைய பண்பு. இஸ்லாமிய வரலாறுகளில் கவாரிஜ்கள் என்ற தீய கூட்டம் இருந்தது. இந்த கவாரிஜ்களின் பண்புகள் என 19 பண்புகளை அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்த 19 பண்புகளும் ஐ.எஸ்.ஐ.எஸ். என்று சொல்லப் படுவர்களுக்கு பொருத்தமாக இருப்பதாக எல்லா இமாம்களும் குறிப்பிடுகிறார்கள். பொய் சொல்லிட்டான் அதனால் கொலை செய்து விடுங்கள். திருடி விட்டால் கொலை என்று எல்லாவற்றிற்கும் கொலை செய்வார்கள். இதன் படியே இதற்கு முன்னால் போராடிக்கொண்டிருந்த போராளிகளையும் இப்படியே கொன்றார்கள்."

ஐ.எஸ்.ஐ.எஸ். இஸ்ரேலிய இண்டெலிஜன்ஸ் சர்விஸ் என சொல்வதற்கு ஓர் உதாரணம், அசாத்தின் ராணுவத்திடமிருந்து ஏற்கனவே போராடி தன் வசப்படுத்தி சில பகுதிகளை வைத்திருந்த அஹ்லே சுன்னாவை சார்ந்த இஸ்லாமிய குழுக்களையும் வீழ்த்தி அந்த இடத்தை ISIS பிடிக்கிறது. பிறகு நான்கே மாதங்களில் இலகுவாக அது சிரியாவின் ராணுவத்தின் கைக்கு மாற்றப்படுகிறது. (இன்னும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு எந்தளவுக்கு துரோகங்களையும், முஸ்லிம்களுக்கு எதிரான வேலைகளையும் நிகழ்த்தினார்கள் என்பதை படங்களுடன் ஹசன் தெளிவுபடுத்தினார். மிக நுண்ணிய தகவலை கொடுத்து ஆதாரங்களுடன் ஐ.எஸ்.ஐ.எஸ் என்பது முஸ்லிம்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட அமைப்பு என்பதை தெளிவு படுத்துகிறார்.)

## ISIS க்கு எதிராக பிரச்சாரம் செய்தவர்களை ISIS என்று கைது செய்தது ஏன்?

நாகையை சேர்ந்த ஹசன் மற்றும் ஹாரிஸ் இருவருமே சிரியாவில் நடப்பது என்ன என்று ஒரு நிகழ்ச்சியை நடத்தி அதில் ஐ.எஸ்.ஐ.எஸ். என்பது இஸ்ரேலிய அமைப்பு அது முஸ்லிம்களுக்கு எதிராகவே செயல்படுகிறது என்று பொது மேடையில் உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். ஆனால் இவர்களை தான் NIA ஐ.எஸ்.ஐ.எஸ். சிந்தனையில் மூழ்கி தனிப்பட்ட முறையில் ஆள் சேர்த்தனர் என்று வழக்கு பதிவு செய்திருக்கிறது. இது எவ்வளவு அபத்தமானது!

முஸ்லிம்கள் ஒரு பொது நிறுவனத்தை அதுவும் முஸ்லிம் அடையாளத்துடன் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் அநீதிகளையும் பேசும் பொது நிறுவனத்தை, கல்வி நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தி கொண்டிருப்பதை முறியடிக்க இவ்வளவு பெரும் முயற்சி என்பது எவ்வளவு பெரிய அநியாயம்! பிறகு எதற்காக இந்நாட்டை மதச்சார்பற்ற நாடு என்று நாம் கூற வேண்டும்?

## பத்திரிகைகள் நடந்து கொண்ட விதம்

இந்த கைது நடவடிக்கைகளில் நிதானித்து செயல்பட வில்லையென்றாலும் கூட பரவாயில்லை. எந்தவொரு பொது பத்திரிக்கையும் உண்மையை வெளியிட விரும்பவில்லை. NIA அதிகாரிகள் சோதனையை நடத்தி கொண்டிருக்கும் போதே வெடிகுண்டிற்கு பயன்படுத்தப்படும் வெடிமருந்துகள் எடுக்கப்பட்டன என்று பிரேக்கிங்

செய்திகளை காட்சி ஊடகங்கள் வெளியிட்டன.

உண்மையை அறிந்து கொள்வதற்கு நேரம் இருந்த அச்சு ஊடகங்களும் இஷ்டத்திற்கு எழுதினார்கள். முஸ்லிம்கள் என்று வந்துவிட்டால் அவர்கள் பேனாக்களுக்கு கட்டுப்பாடே இல்லை. தங்கள் எண்ணத்தில் தோன்றும் எல்லா கதைகளையும் எழுதி விடுவது போல் பன்மடங்கு அதிகப்படுத்தியும், நடக்காததை நடந்தது போல் அதிகப்படுத்தியும் எழுதினார்கள்.

இவர்கள் இலங்கை குண்டுவெடிப்புடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று NIA அதிகாரிகள் கூறினார்கள்.

இவர்கள் இலங்கை குண்டு வெடிப்பை நிகழ்த்திய ஷஹ்ரான் ஹாசிமுடன் தொடர்பு இருந்து வந்திருக்கிறது என NIA சொல்லாத தகவலையெல்லாம் முதல் பக்கத்தில் போட்டு முஸ்லிம்கள் மீதான வெறுப்பை வெளிப் படுத்தினார்கள்.

நாகையில் கைது செய்யப்பட்டு அடுத்தடுத்த நாட்களில் அல் அக்ஸா பள்ளிக் கூடத்தை நடத்தி வரும் தௌஃபிக்கை விசாரிக்க NIA வருகிறார்கள். அங்கே சிறிய கூட்டம் கூடவும் SP அலுவலகத்திற்கு அழைக்கிறார்கள்.

அவர் SP அலுவலகத்தை அடைவதற்குள்ளேயே நாகையை சேர்ந்த தௌஃபிக் அன்சருல்லா தீவிரவாத வழக்கில் கைது என்று செய்தி வெளியிடுகிறார்கள். ஆனால் அவர் விசாரணைக்கு மட்டுமே அழைக்கப்பட்டார்.

இப்படியான சம்பவங்கள் இதில் அதிகம் நடந்திருக்கிறது.

## கைது நடவடிக்கைகளில் உண்மை இருக்கிறதா?

இல்லையா? என்று தெரிந்து கொள்வதற்கு முயற்சிகள் எடுக்கவில்லை. ஆனால் உண்மை போய்ச்சேர வேண்டும் என்ற எண்ணத்தில் பாதிக்கப் பட்ட பெற்றோர்கள் சார்பாக பத்திரிகையாளர்கள் சந்திப்பை நடத்தியும் கூட எந்த பொது ஊடகங்களும் அதை வெளியிடவில்லை. மறைத்து விட்டன.

## இந்த கைது நடவடிக்கைகளில் எழும் சந்தேகங்கள்

*01.* ஹசன், ஹாரிஸ், புகாரி மூன்று பேரும் கைது செய்யப்பட்ட பிறகு, மற்ற நபர்களும் ஒரே நேரத்தில் தான் டெல்லிக்கு வந்ததாக தான் கூறப்பட்டது. ஆனால் அதில் 13ம் தேதி முதல் ஒன்பது நபர்களையும், 15ம் தேதி 7 நபர்களையும் கைது செய்ததாக NIA தரப்பில் வெளியிடப் பட்டிருக்கிறது. இதில் 13ம் தேதியே டெல்லிக்கு அனைவரும் வந்து விட்டார்கள் என்றால் அந்த இரண்டு நாட்கள் மற்ற 7 நபர்களையும் சட்டவிரோதமாக காவலில் வைத்திருந்தார்களா?

*02.* ஹசன் கிட்டத்தட்ட ஒரு வருட காலமாகவே கண்காணிப்பில் இருப்பதாக சொல்கிறார்கள். அப்படியிருக்கையில் ஹசனின் நடவடிக்கைகள் தெரியாமல் இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. ஹசன் ISISக்கு எதிராக நிகழ்ச்சியில் பேசியது எல்லாம் தெரிந்திருக்கும் பட்சத்திலும் ISIS சிந்தனைக்கு உட்பட்டு அதற்காக செயல்பட்டவர் என்று சொல்வது பொய் என்று தெரிந்தே அதை சொல்கிறார்களா?

*03.* நாகை பகுதிகளில் குறிப்பாக மிகச்சிலர், ISIS மோகத்தில் ஈர்க்கப்பட்டு இருந்தவர்களை ஹசன், "இது அமெரிக்காவால் இஸ்லாத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட அமைப்பு இது முஸ்லிம்களை தூண்டிவிட்டு கைது செய்வதற்காக பாசிச எண்ணம் கொண்ட உளவுத்துறை அதிகாரிகள் நம்மை சிறையில் அடைப்பதற்கு எடுக்கப்பட்ட சூழ்ச்சி" என்று தனித்தனியாகவும், பிரச்சாரம் செய்து இளைஞர்களை வழி தவறாமல் காப்பாற்றியிருக்கிறார். இந்த சூழ்ச்சியை தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டதற்காக ஹசன் கைது செய்யப்பட்டிருக்கிறாரா?

*04.* நாகையில் உளவுத்துறை ஆளாக சந்தேகிக்கப்படும் அபூதாஹிர் என்ற நபரின் போட்டோவையும், பெயரையும் பயன்படுத்தி இலங்கை குண்டுவெடிப்புக்கு மூளையாக செயல்பட்ட ஷஹ்ரான் ஹாசிம் முகநூலில் ஒரு பதிவு போட்டிருக்கிறார். அபூதாஹிர் இலங்கைக்கு சென்று வந்ததாகவும் சொல்லப்படுகிறது. சென்ற மாதம் ஷஹ்ரான் ஹாசிமுடன் முகநூலில் நட்பாக இருந்ததற்கு முகம்மது அசாருதீன் கோவையில் கைது செய்யப்பட்டார். இவர் இன்னும் சுதந்திரமாகவே செயல்பட்டு கொண்டிருக்கின்றார்.

இன்னும் எக்கச்சக்கமான கேள்விகள் இருக்கிறது. பல முரண்பாடுகளுடன் கூடிய இந்த கைது நடவடிக்கையை முஸ்லிம் சமூகம் ஒன்றிணைந்து எதிர்க்க முன்வரவேண்டும். NIA என்றவுடனே பயந்து ஒதுங்கிக் கொள்ளும் ஒரு சூழலை தற்போது தமிழகம் முழுவதும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனை முழு வீரியத்துடன் எதிர்கொள்வதற்கான நடவடிக்கையையும் உண்மையை, இணக்கத்தை விரும்பும் தலைவர்கள் இணைந்து முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தற்போது என்.ஐ.ஏ. வின் இந்த வழக்கை வழக்கறிஞர்கள் கம்ருதீன், சர்ஃபுதீன், புகழேந்தி ஆகியவர்கள் நடத்தி வருகின்றனர்.

\- **கள ஆய்வு**

**அபூ சித்திக், ரஃபின், மற்றும் ஜாகிர் உசைன்.**



# இம்ரானின் அனுபவங்கள் எவருக்கும் வரவேண்டாம்

இன்று முழுவதும் டெல்லியில் UAPA சட்டத்திற்கு எதிரான ழிசிபிஸிளி மாநாடு. மாலைக் கருத்தரங்கில் சுமார் 5000 பேர் கலந்துகொண்டனர். ஏகப்பட்ட தலைவர்கள் இந்தக் கொடூர சட்டத்திற்கு எதிராகக் கண்டன உரையாற்றினர்.

காலையில் இச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுடன் ஒரு உரையாடல் நடைபெற்றது. நானும் மகாராஷ்டிராவைச் சேர்ந்த வழக்குரைஞர் ஒய்.கே. ஷபானாவும் ஒரு பேனலில் இருந்தோம். மூன்று மணி நேரத்தில் இந்தச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட நால்வரின் சோக அனுபவங்களுக்குக் காது கொடுக்க முடிந்தது.

ஒவ்வொன்றும் இங்கே உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய நெஞ்சை உருக்கும் அனுபவங்கள்தான். நேரமில்லை. ஒன்றை மட்டும் இங்கே பதிகிறேன்.

என் பேனலின் முன் தம் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வந்தவர்களில் சென்ற வாரம் ஹைதராபாத்தில் சந்தித்த அந்த அழகிய இளைஞனை மீண்டும் பார்த்தபோது ஒரு கணம் துணுக்குற்றேன், ஆவலுற்றேன். ஓடிச்சென்று அவன் கைகளைப் பற்றிக் கொண்டேன்.

ஹைதராபாத்தில் . இதே UAPA சட்டத்திற்கெதிரான அரங்கக் கூட்டம் ஒன்றிற்கு வந்திருந்தவர்களில் அவனும் ஒருவன். அவன், இவன் எனக் குறிப்பிடுவதை மரியாதைக் குறைவால் அல்ல. அன்பின் மிகுதியும் அப்படி விளிப்பதில் முடியும்தானே.

யாரோ சொன்னார்கள். ஹைதராபாத் மக்கா மசூதி வழக்கில் பொய்யாய்க் குற்றம் சாட்டப்பட்டுக் கடுஞ் சித்திரவதைகளையும், பல மாதச்சிறையையும் அனுபவித்து, இறுதியில் குற்றமற்றவன் என விடுதலை செய்யப்பட்டவன், பெயர் இம்ரான் என்றார்கள். அப்போதும் அவன் கைகளைப் பற்றிக்கொண்டு மவுனமாக இருக்கத்தான் முடிந்தது.

கொஞ்சம் பேச வேண்டும் என்றேன். அவனுக்கு ஏதோ அவசரம். நான் தங்கியுள்ள அறைக்கு மாலை வருகிறேன் எனச் சொன்னான்.அவன் சரியாகத்தான் வந்தான், நான்தான் அப்போது அறையில் இல்லை. அன்று ஹைதராபாத்தில் விரிவாகப் பேசமுடியவில்லையே என ஏமாற்றமடைந்திருந்த எனக்கு இன்று டெல்லியில் அவனைப் பார்த்தபோது இரட்டிப்பு மகிழ்ச்சி.

எனது பேனலின் முன் முதலாவதாக வந்து தன் அனுபவங்களைப் பகிர்ந்து

கொண்டவர் ராஜஸ்தான் மாநிலத்தவர். ஐந்து பிள்ளைகள். ஒரு பள்ளி நடத்துகிறார். ஆயுதங்களுடனும் ஆபாசமான முழக்கங்களுடனும் பஜ்ரங்தள் ஊர்வலம் ஒன்று நடந்தபோது அப்படி ஊர்வலம் போவதை எதிர்த்துள்ளார். கைது, சித்திரவதை, ஹிகிறிகி சட்டம் என நீண்ட நாள் சிறைவாசத்திற்குப் பின் குற்றமற்றவர் என விடுதலையானவர். பெயர் முகம்மது ஹனீஃப்.

அவர் சென்றவுடன் நான் இம்ரானை அழைத்தேன்.

பெயர்: சையத் இம்ரான் கான். வயது 30 (இப்போது).

கல்வி: பி.டெக் (கம்ப்யூட்டர் சயின்ஸ்).

வேலை : ICICCI வங்கி (அப்போது).

அப்பா ஒரு மத்திய அரசு ஊழியர் (அப்போது). ஒரு தம்பி, ஒரு தங்கை. ஊர் : செகந்தராபாத்தில் போன்பள்ளி.

சுவாமி அசீமானந்தாவின் இப்போதைய வாக்குமூலம், 2007 மக்கா மசூதி குண்டு வெடிப்பு இந்துத்துவ வாதிகளின் சதி என்பதை இன்று உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால் அன்று முஸ்லிம் தீவிரவாதிகள், லக்ஷர் ஏ தொய்பா, பாகிஸ்தானில் பயிற்சி, இந்திய முஜாஹிதீன் என்கிற அளவில் பேசப்பட்டது. ஊடகங்கள் அப்படியே செய்திகள் பரப்பின. முஸ்லிம் இளைஞர்கள் பலர் சுற்றி வளைக்கப்பட்டார்கள், கைது செய்யப்பட்டார்கள், சித்திரவதை செய்யப்பட்டார்கள், சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவந்தான் இம்ரான்.

மக்கா மசூதி குண்டு வெடிப்பிற்கு (25, மே, 2007) எட்டு நாளைக்குப் பின் சுமார் 200 பேர் கொண்ட ஒரு போலீஸ் படை இம்ரானின் வீட்டைச் சுற்றிக் கொண்டது. நாலைந்து போலீஸ் வான்கள், கொஞ்சம் ஊடகக்காரர்கள் சகிதம் அந்தப் படையெடுப்பு நடந்துள்ளது..

என்ன காரணம் என அவனிடமோ இல்லை பெற்றோர்களிடமோ சொல்லாமல், சும்மா ஒரு விசாரணை, போலீஸ் ஸ்டேஷன் வரை வந்துவிட்டுப் போ என அவன் அழைக்கப்பட்டுள்ளான். வேனில் ஏறுமுன் கறுப்புத் துணியால் ஆக்கப்பட்ட ஒரு பையால் தன் முகம் மூடப்பட்டபோதுதான் இம்ரானால் அதிர்ச்சியைத் தாங்கமுடியவில்லை.

பிள்ளையை அத்தனை காமரா வெளிச்சங்களுக்கும் மத்தியில் இப்படி முகத்தைக் கறுப்புத் துணியால் மூடி போலீஸ் வானில் ஏற்றியதைப் பார்த்திருந்த அவனது பெற்றோருக்கும் உடன்பிறந்தார்களுக்கும் எப்படி இருந்திருக்கும் என ஒரு கணம் நினைத்துப் பார்த்தேன்.

கருப்புத் துணி விரித்த இருளின் ஊடாக எங்கோ இழுத்துச் சென்று ஒரு பண்ணை வீட்டில் அடுத்த பத்து நாட்கள் சட்ட விரோதக் காவல்.

**தினசரி அடி. மின்சார ஷாக்குகள்..**

தினம் இரண்டு மணி நேரம் மட்டுமே தூங்க அநுமதி. அசந்து தூக்கம் கண்களைச் சுழற்றினால் இமைகளில் க்ளிப் போட்டுக் கண்களை மூட விடாது செய்து தூக்கத்தை விரட்டுதல்ஞ்



இம்ரானிடம் அவனுக்கு விளங்காத பல கேள்விகள், அவனுக்குத் தெரிந்திராத பெயர்களைச் சொல்லி விவரங்கள் கேட்டுந்தான் இத்தனைச் சித்திரவதைகளும்.

“லக்ஷர் ஏ தொய்பாவுடன் உனக்கு எத்தனை நாளாகத் தொடர்பு?”

“பயிற்சிக்காகப் பாகிஸ்தானுக்கு நீ என்னென்ன தேதிகளில் சென்றிருந்தாய்ஞ்”

“தெரியாதா? அடேய் என்ன சொல்கிறாய்..? நீ இப்படிக் கேட்டால் சொல்வாயா?”

“சொல்லமாட்டாயா? சொல்லமாட்டாயா? இப்ப சொல்லுடா, சொல்லுடா, சொல்லுடா,,,”

இரண்டுமுறை இம்ரானுக்கு நார்கோ அனாலிசிஸ் செய்துள்ளனர். இன்று அந்த “உண்மை அறியும் சோதனை”, நிரந்தர மூளை ஊனத்தை ஏற்படுத்திவிடக்கூடும் எனத் தடை செய்யப்பட்டுள்ளது. இது குறித்து நான் விரிவாக அன்று இதழ்களில் எழுதியுள்ளேன் எனது ‘நெருக்கடிநிலை உலகம்’ தொகுப்பிலும் உள்ளது. இது தொடர்பான பெரும் போராட்டங்களுக்கும் நீதிமன்றக் கண்டனங்களுக்கும் பின்தான் இன்று அந்ததச் சோதனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவனுக்கு நார்கோ சோதனை செய்த டாக்டர் மாலினி கிறிஸ்தவ கன்னியாஸ்திரி அபயா கொலையில் (1992) குற்றவாளிகளைக் காப்பாற்ற பொய்யான டெஸ்ட் ரிசல்ட் எழுதியதால் சி.பி.ஐ அதிகாரிகளால் குற்றம் சாட்டப்பட்டவர். புகழ் பெற்ற ஆருஷி வழக்கிலும்போலீசிடம் லஞ்சம் பெற்றுப் பொய் சர்டிஃபிகேட்டுகள் கொடுத்தவர் என்கிற குற்றச்சாட்டும் அவர் மீது உண்டு. 2009ல் அவர் தன் பிறந்த நாளை மாற்றி பொய் சர்டிஃபிக்ட் கொடுத்து ஏமாற்றிய குர்றத்திற்காகப் பணி நீக்கம் செய்யப்பட்ட புகழுக்கும் உரியவர் அவர் .. “லேடி போரிங் ஹாஸ்பிடலுக்கு நார்கோ சோதனைக்காக அழைச்சிட்டுப் போய் உட்கார

வச்சிருந்தாங்க. அப்போ ஜி9 டி.வியில என் படத்தைக் காட்டி என்னமோ சொல்லிட்டு இருந்தாங்க. நான் பதட்டமாயி அங்கே இருந்த நர்ஸ்கிட்ட என்ன சொல்றாங்கன்னு கேட்டேன்.

'அது, நீ ஒரு பயங்கரவாதி, நார்கோ டெஸ்ட்ல எல்லாத்தையும் நீ ஒத்துக்கிட்டன்னு சொல்றாங்க'ஞ் அப்டீன்னு அந்த நர்ஸ் சொன்னாங்க"

எனக்கு வியப்பு.

"என்ன இம்ரான், டெஸ்ட் பண்றத்துக்கு முன்னாடியே அப்படி நியூஸ் வெளியிட்டாங்களா என்ன..?"

''ஆமா சார்ஞ்"

மொத்தம் 17 மாதங்கள், 24 நாட்கள் சிறை வாசம். இதில் 10 நாட்கள் சட்டவிரோதப் போலீஸ் காவல்; 15 நாட்கள் சட்டபூர்வக் காவல்.

"சட்டவிரோதமாக் காவலில் வச்சிருந்ததை நீங்க நீதிமன்றத்தில் சொல்லல்லி இம்ரான்?"

"இல்லை. கோர்ட்டுக்குக் கொண்டுபோன அன்னைக்குத்தான் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தபோது கைது செஞ்சதா நீதிபதியிடம் ஒத்துக்கொண்டால் உடனே விட்டர்றதா சொன்னாங்க. விட்டுடுவாங்கன்னு சொன்னதால நானும் அப்படியே சொன்னேன்."

நீதிமன்றக் காவலில் இருந்தபோதும் கூட, முதல் ஆறு மாதம் தனி செல்லில்தான் வைத்திருந்திருக்கின்றனர், ஆறு மாதத்திற்குப் பின் வழக்கு விசாரணை கர்நாடகப் போலீசிடமிருந்து சி.பி.அய்க்கு மாற்றப்பட்ட பிறகு சிறைக்குள் தனிக் கொட்டடி என்கிற நிலை தளர்த்தப் பட்டுள்ளது.

ஹைதராபாத்தில் ஒரு அற்புதமான மனித நேய வழக்குரைஞர். பெயர் முஸாபருல்லாஹ் கான். இப்படியான பொய் வழக்குகளில் குற்றஞ்சாட்டப் பட்டவர்களுக்கு மிக்க தைரியமாகவும், இலவசமாகவும் வழக்காடும் மனிதருள் மாணிக்கம். அவர்தான் இம்ரானுக்காகவும், அவன் மீது தொடுக்கப்பட்ட ஹிகிறிகி மற்றும் இ.த.ச 120 ஏ, 144, 143, வெடிமருந்துச் சட்டம், பண மாற்றீடுக் குற்றச்சாட்டு முதலான எல்லா வழக்குகளிலும் சட்ட உதவி செய்துள்ளார்,

வழக்குரைஞர் முஸாபருல்லாவைப் பற்றிச் சொல்லும்போது இம்ரானின் குரல் கம்மியது.

சி.பி.ஐ இறுதியாக இம்ரானை அனைத்து வழக்குகளிலிருந்தும் விடுதலை செய்து சிறீமீணீஸீ நீலீவீமீ' கொடுத்தது, ஆந்திர போலீஸ் அவன் மீது வீண்வழக்குப் போட்டதாக அறிக்கை அளித்தது.

பதினேழு மாதங்கள் 24 நாட்களுக்குப் பின் அவன் வீட்டுக்கு வந்தான்; அவனது வாழ்க்கையில் 17 மாதங்களும் 24 நாட்களும் மட்டுமல்ல, அவனது மிசிமிசிசிமி வங்கி வேலைஞ். இன்னும் என்னென்னவற்றையோ அவன் இழந்தான்.

அவன் தந்தை வி.ஆர்.எஸ் கொடுத்து அரசு வேலையிலிருந்து விலகினார். அவனது தங்கைக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. பயங்கரவாதியின் குடும்பம்ஞ்.. "எனக்கும் கூடத்தான் ஒரு நல்ல வாழ்க்கைத்துணை கிடைக்க மாட்டேன் என்கிறது.."

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதுபோல. சி.பி.ஐ. க்ளீன் சிட் கொடுத்தபின்னும் கூட மோடியின் குஜராத் போலீஸ் ஏதோ விசாரணை என இம்ரானை அழைத்துச்செல்ல முயன்றுள்ளது. பதறிப்போன இம்ரான் ஹைதராபாத் போலீஸ் கமிஷனரிடம் ஓடியுள்ளான். கவலைப்படாதே உன்னை குஜராத் போலீஸ் கைது செய்யவோ, அழைத்துச்செல்லவோ அனுமதிக்க மாட்டோம் எனச் சொல்லி அனுப்பியுள்ளார்.

இப்போது நிலைமை எப்படி இம்ரான் எனக் கேட்டேன்.

"இப்போதும் கூட அப்பப்ப போலீஸ், உளவுத் துறை வந்து ஏதாவது விசாரிச்சிட்டுத்தான் இருக்கிறாங்க.."

"இப்ப என்ன வேலைல இருக்கீங்க?"


சிரித்தான் இம்ரான்.

"ஒரு இன்டிபென்டன்ட் ரிசர்ச்சரா ஒரு கார்பொரேட் நிறுவனத்தில வேல செஞ்சிட்டிருந்தேன், சில நாட்கள் முன்னாடி என்னோட படத்தோட கூகிள்ல யாரோ இதை எல்லாம் போட்டிருந்தாங்க. இப்ப அந்த நிறுவனம் என்ன வேலய விட்டு நிறுத்திட்டு.."

எங்கள் பேனலுக்கு முன் வருபவர்களுக்கு ஆங்கிலத்தில் பேச வருமானால் நான் கேள்விகளைக் கேட்பது எனவும், உருது அல்லது இந்தியில் மட்டுமே பேசக்கூடியவர்களானால் வழக்குரைஞர் ஷபானா கேட்பது எனவும் எங்களுக்குள் ஒப்பந்தம்.. இம்ரான் மிக அழகான ஆங்கிலத்தில் என்னிடம் பேசிக் கொண்டிருந்தான், அவன் விடை பெற்றபோது அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்த ஷபானாவின் கண்கள் கலங்கி இருந்தன. குரல் கம்மியிருந்தது.

<http://www.amarx.in/author/admin/>

Posted on September 23, 2017 - by A Marx



# தமிழ் தி இந்து ஆசிரியருக்கு ஒரு கடிதம்

அன்புள்ள ஆசிரியருக்கு;

வந்தனம்

25.04.2019 ஆம் தேதியிட்ட "தி இந்து" நாளிதழில் வெளியான நடுப்பக்க இரு கட்டுரைகளான

1. கள்ள மௌனத்திலிருந்தே உருவாகின்ற குண்டு வெடிப்புகள்

2. முஸ்லிம்களை நாம் சுயபரீசீலிப்போம்.

ஆகியவற்றிற்குரிய முஸ்லிம் சமுதாயத்தின் கருத்துக்களை பிரதிபலிக்கும் பின் வரும் கட்டுரைகளை நகல் எடுத்து இத்துடன் தங்கள் ஆசிரியர் இலக்கா, நடுப்பக்க ஆசிரியர்களின் மேலான பார்வைக்கு அனுப்பியுள்ளேன். (ஆதாரம்: வைகறை வெளிச்சம் மாத இதழ் மே 2019 – ஆசிரியர் மு.குலாம் முஹம்மது)

1.இலங்கை குண்டு வெடிப்பு யாரால்? யாரால்??

2.முஸ்லிம்கள் நாம் சுயபரிசிலிப்போம் என்ற கட்டுரைக்கு முஸ்லிம் பெண் வாசகர்கள் எழுதிய கருத்துக் கடிதங்களின் பகுதிகள்.

மேற்கொண்ட பதில் கட்டுரைகளை நிதானமாக வாசித்தால் விருப்பு வெறுப்பின்றி சிந்தித்தால் உண்மைகளின் வெளிச்சம் புலப்படும். அதில் சந்தேகமேயில்லை. நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? மேற்கண்ட நடுப்பக்க கட்டுரைகளுக்கு கீழே இஸ்லாமியத் தமிழ் கவிஞர் ரியாஸ் கருத்தின் படி செயல்பட்டால் உண்மைகளின் பிரத்தியட்சக் கூறுகளான பொதுவெளியில் எல்லா சமுதாய மக்களும் தெரிந்து கொள்வார்கள். புரிந்து கொள்வார்கள். அதாவது கருத்தை மீளவும் இங்கு எடுத்தாளுகின்றேன்.

இலங்கையில் நடந்த குண்டுவெடிப்புகளுடன் ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியிருப்பதாக தகவல்கள் வெளிவந்து இருக்கின்றன. அந்த குண்டு வெடிப்பை இலங்கையில் நடத்தியதாக கூறப்படும் தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பு இலங்கையிலுள்ள அனைத்து முஸ்லிம்களையும் பிரதி நிதித்துவப்படுத்தும் அமைப்பல்ல. அதுமட்டுமல்ல இலங்கையிலுள்ள முஸ்லிம்களே இந்த அமைப்பைத் தடை செய்யக் கோரியும் தொடர்ந்து பாரிய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். அரசு நிறுவனங்கள் மதச்சார்பானவர்கள் மற்றும் மதசார்ப்பற்றவர்கள் என்ற அனைத்து தரப்பினருக்கும் தலையாய கடமை ஒன்று இருக்கிறது. அது பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கும், குறித்த சமூகத்திற்கும் இடையிலான வேறுபாட்டை புரிய வைப்பதாகும். அவற்றை நாட்டு மக்கள் மத்தியில் கொண்டு போய் சேர்ப்பதாகும்.

அதாவது இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். தூண்டி விடும் கலவரங்களுக்கு எவ்விதம் ஒட்டுமொத்த இந்து மக்களும் பொறுப்பாக்க முடியாதோ அதேப்போல் குண்டு வைக்கும் முஸ்லிம் கயவர்களுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் பொறுப்பாகாது. இதனை நன்கு உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

எங்கு குண்டு வெடிப்பு நடந்தாலும் அங்கு இஸ்ரேலின் மூளை தவறாமல் பங்கு கொள்ளும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். யூத – கிருஸ்தவ கூட்டு உலக முழுவதும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் இஸ்லாத்திற்கு எதிராகவும் பயங்கராதத்தில் ஈடுபட்டு விலை கொடுத்து வாங்கப்பட்ட முஸ்லிம் கபடதாரிகள் மூலம் நாச வேலைகளை நடத்தி விட்டு முஸ்லிம் சமுதாயத்தின் மேல் பழி சுமத்தி பிரச்சாரம் செய்வது அதிகரித்து வருகின்றது. அதற்கேற்றார் போல் இந்த ஊடகங்கள் ஒத்து ஊதி வருகின்றன. (ஒரு சில விதிவிலக்குகள் இருக்கலாம்) இலங்கை கிருஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் எவ்வித பிரச்சனையும் இல்லை என்பதை மறந்து விடாதீர்கள்.

இந்த குண்டு வெடிப்பின் பின்னணியில் இலங்கை உளவுத்துறையின் சதியும் அடங்கி இருப்பதற்கு ஆதாரமாக இந்தியா எச்சரித்தும் உடனடி முன் நடவடிக்கைகள் அரசு எடுக்காததும் முக்கிய காரணமாகும். குண்டு வெடிப்பிற்குப் பிறகு அதிகளவு பாதிக்கப்பட்ட கிருஸ்தவ சகோதரர்களுக்கு இரத்தம் வழங்கியவர்கள் முஸ்லிம்களே! இந்த செய்திய இலங்கை மற்றும் இந்திய ஊடகங்கள் இரட்டடிப்பு செய்து விட்டன. ஆகவே தி இந்து ஆசிரியர்கள் எந்த ஒரு பிரச்சனையையும் விருப்பு வெறுப்பின்றி, காய்தல், உவத்தலின்றி எல்லா கோணங்களிலும் சிந்திக்க வேண்டும். ஆராய வேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன்.

*இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள*

**ப. சையத் அஹ்மத்**

ப. சையத் அஹமத்
உம்முவ் மன்ஜில்
11, பரகத் தெரு,
துளசேந்திரபுரம்,
ஆனைக்காரன் சத்திரம்(அஞ்சல்) சீர்காழி வட்டம் – 609102

# பெண் சிசு கொலை!

தலையங்கம்

இந்தியா அறியாமை இருள் மண்டிக் கிடந்த காலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. இன்றைய மத்திய ஆட்சியாளர்களின் கொட்டம் முடியும்போது, இந்தியா 300 ஆண்டுகளுக்குப் பின்னால் போய் விடும். இப்போது நடக்கும் பல சமுதாய நிகழ்வுகள், "சமுதாயம் அழுகிப் போய் கிடக்கின்றது" என்பதையே நமக்கு சொல்லுகின்றன. அண்மையில் ஒரு செய்தி;

"உத்தரகாண்ட் மாநிலத்தில், 132 கிராமங்களில், மூன்று மாதங்களில், 216 குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இந்தக் குழந்தைகளில் ஒன்று கூட பெண் குழந்தை அல்ல. அத்தனையும் ஆண் குழந்தைகள் தான்." (நன்றி: விடுதலை 23.7.2019)

இந்தச் செய்தியால் அதிர்ச்சி அடைந்த சமூக ஆர்வலர்கள், உண்மையை கண்டறியும் ஆய்வு நடத்தினார்கள். அந்த ஆய்வில் குழந்தை கருவிலிருக்கும் போதே, அது ஆணா? அல்லது பெண்ணா? என அறிந்து விடுகின்றார்கள். கருவில் இருக்கும் குழந்தை பெண் என அறிந்து விட்டால், அது பிறக்காமலே சிதைத்து விடுகின்றார்கள்.

குழந்தை கருவில் இருக்கும் போது, அதை ஆணா? அல்லது பெண்ணா? என கண்டறியும் சோதனையை செய்யக்கூடாது. அப்படித் தெரிந்தாலும் அதை பெற்றோர்களிடம் சொல்லிடக்கூடாது. அப்படி சொன்னால், அவர்கள் பெண் சிசுவைக் கலைக்க முற்பட்டால், அதை கலைக்க உதவி செய்யவும் கூடாது. அப்படி செய்வது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும். என்றெல்லாம் நம் நாட்டில் சட்டம் இருக்கின்றது. ஆனால் அனைத்தையும் கடந்து மக்கள் அதை செய்யவே செய்கின்றார்கள்.

அதாவது விஞ்ஞான கண்டுபிடிப்புகளை, அறிவியல் கண்டுபிடிப்புகளை மனிதன் தன் விருப்பங்களையும், வெறுப்புகளையும் செயல்படுத்தவே பயன்படுத்துகின்றான். சுருங்கச் சொன்னால் மனிதன் இன்னும் அந்த அறியாமை இருள் மண்டிக் கிடந்த காலத்திலேயே இருக்கின்றான். அவன் இன்னும் விடுபட்டு அறிவின் எல்லைகளை மிதிக்கவே இல்லை.

1450 ஆண்டுகளுக்கு முன்னால் அரேபியா பெரும் நிலம் இப்படித்தான் இருளுக்குள் மூழ்கிக் கிடந்தது. பெண் குழந்தைகளை பெற்றவுடன் புதைத்தார்கள். அவர்களால் கருவிலேயே பெண் கருவை கொலை செய்திட இயலவில்லை. காரணம் அறிவியல் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கவில்லை. அவர்களுக்கு குழந்தை பிறந்த பின் தான் தெரிந்தது. அது ஆணா! அல்லது பெண்ணா என்று! இந்தப் பழக்கத்தை இறைவன் உண்மையாக கண்டித்தான். பெண் குழந்தைகளை உயிரோடு புகைப்பவர்களுக்கு, மரணத்திற்குப் பின்னால் வரும் நிரந்தர வாழ்க்கையில் கொடுமையான தண்டனையைக் கொண்டு எச்சரித்தான்.

அல்லாஹ் அந்த அய்யாமுல் ஜாஹிலிய்யா என்ற அறியாமை இருள் மண்டிக் கிடந்த காலத்தில், குழந்தைகள் ஏன் கொலை செய்யப்பட்டார்கள் என்பதை இப்படி அறிவிக்கின்றான்.

"இவ்வாறே இணை வைப்போரில் பெரும்பாலோருக்கு அவர்களுடைய குழந்தைகளை கொலை செய்வதை அவர்களுடைய தெய்வங்கள் அழகாக்கி வைத்துள்ளன. அவர்களை நாசப்படுத்தி அவர்களுடைய மார்க்கத்தையும் குழப்பத்தில் ஆக்கிவிட்டன. அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் அப்படி செய்திருக்க மாட்டார்கள். எனவே நபியே நீர் அவர்களையும், அவர்களுடைய பொய்யான கூற்றுகளையும் விட்டு விடுவீராக."(அல்குர்ஆன்: 6 : 137)

அன்றைய நாட்களில் இணைவைப்பவர்கள் பலநூறு தெய்வங்களை வழிபட்டு வந்தனர். அவர்களின் தெய்வங்கள் குழந்தைகளை கொலை செய்வதை கடவுளுக்கு காணிக்கை என்ற பெயரில் நியாயப்படுத்தின. இன்றைய நாள் நரபலிகள் போல, தங்கள் சொந்த குழந்தைகளையே கொலை செய்வதை அவர்கள் கடவுளுக்கு அழகிய காணிக்கை என்றே எடுத்துக் கொண்டிருந்தார்கள். இதுபோன்ற செயல்களை தடுத்தது இஸ்லாம். இன்னும் இறைவன் கூறுகின்றான்;

எவர்கள் அறிவில்லாமல் மூடத்தனமாக தம் குழந்தைகளை கொலை செய்தார்களோ, இன்னும் அல்லாஹ் தங்களுக்கு ஒன்றை அனுமதித்திருந்து, அதை அல்லாஹ்வின் மீது பொய்யைக் கூறி ஆகாதென்று தடுத்து கொண்டார்களோ, அவர்கள் வழி கெட்டு விட்டனர். நேர்வழி பெற்றவர்களாக இல்லை. (6:140)

பெருமானார்(ஸல்) அவர்கள் அழைக்கின்றார்கள்;

“வாருங்கள்! உங்கள் இறைவன் உங்கள் மீது விலக்கி இருப்பவற்றையும், ஏவி இருப்பவற்றையும் நான் ஓதி காண்பிக்கின்றேன். எப்பொருளையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள். பெற்றோர்களுக்கு நன்மை செய்யுங்கள். வறுமைக்கு பயந்து உங்கள் குழந்தைகளை கொல்லாதீர்கள். ஏனெனில் உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். வெளிப்படையான, மானக்கேடான காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள். அல்லாஹ் தடுத்துள்ள எந்த ஒரு ஆத்மாவையும், நியாயமாக அல்லாமல் கொலை செய்யாதீர்கள். இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக அல்லாஹ் உங்களுக்கு இவ்வாறு போதிக்கின்றான்.” (அல்குர்ஆன் - 6:151)

அன்றைய நாட்களில் பெண்கள், இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம் உறுதிமொழி செய்திட வந்தால், அவர்கள் அந்தப் பெண்களிடம் விதித்த நிபந்தனைகளுள் ஒன்று, “அவர்கள் தங்கள் குழந்தைகளை கொலை செய்து விடக்கூடாது” (பார்க்க திருமறை வசனம் 60:12)

அன்று வறுமைக்கு பயந்து குழந்தைகளை கொலை செய்யும் பழக்கம் இருந்தது. அதே போல் பெண் குழந்தை பிறந்தால் அதை அவமானம் எனக் கருதினார்கள். அதனால் உடனேயே கொண்டு புதைத்துவிடுவார்கள். இந்த குழந்தை கொலைகள் அனைத்திற்கும், மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் அவர்கள் நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள். அந்த நாளை இறைவன் இப்படி அறிவித்தான்;

1. சூரியன் ஒளி இல்லாததாக சுருட்டப்படும் போது,

2. நட்சத்திரங்கள் ஒளி இழந்து உதிர்ந்து விழும்போது,

3. மலைகள் பெயர்க்கப்படும் போது,

4. சூல் நிறைந்த ஒட்டகங்கள் கவனிப்பாரற்று விடப்படும் போது,

5. காட்டு மிருகங்கள் மனிதர்களுடன்,

6. இதர பிராணிகளுடன் ஒன்று சேர்க்கப்படும் போது,

7. கடல்கள் தீ மூட்டப்படும் போது,

8. உயிர்கள் ஒன்றிணைக்கப்படும் போது,

9. உயிருடன் புதைக்கப்பட்ட பெண் குழந்தை வினவப்படும் போது,

10. எந்தக் குற்றத்திற்காக அது கொல்லப்பட்டது என்று வினவப்படும்.

11. வானம் அகற்றப்படும் போது,

12. நரகம் கொழுந்து விட்டு எரியுமாறு செய்யப்படும்போது.(81:1-12)

இதற்கு பின் அந்த மக்கள் பெண் குழந்தைகளை பேணி வளர்ப்பதை பெரும் மகிழ்ச்சியோடு செய்தார்கள். ஒரு முறை பெருமானார்(ஸல்) அவர்கள் சொன்னார்கள். யாருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருந்து அதை நன்றாக வளர்த்து நல்ல முறையில் திருமணமும் செய்து கொடுக்கின்றாரோ அவருக்கு மறுமையில் நற்கூலிகள் பல வழங்கப்படும் என்றார்கள். இதனை செவிமடுத்த நபித்தோழர் ஒருவர் கேட்டார், "இறைவனின் தூதர் அவர்களே எனக்கு மூன்று பெண் குழந்தைகள் இருந்தால்? எனக் கேட்டார். இந்த அளவுக்குப் பெண் குழந்தைகளைப் பெறுவதும், வளர்ப்பதும் நற்கூலிகள் கிடைக்கும் செயல் என்றானது அந்த முதல் தலைமுறையினரிடம். இந்த போதனைகளைப் பட்டித் தொட்டிகளிலெல்லாம் பரப்புவோம். பெண் குழந்தைகளை பாதுகாப்போம்.



# தனி சமய அந்தஸ்து கோரும் அய்யா பால பிரஜாதிபதி அடிகளாருடன் ஓர் சந்திப்பு

அன்புவனத்தில் அன்பை பரப்பிடும் பணியில் தன்னை ஈடுபடுத்தி கொண்டிருக்கும் அய்யா பால பிரஜாதிபதி அடிகளார் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. நடைபெற்ற 2019 நாடாளுமன்ற தேர்தலில் யாருக்கு தன்னுடைய ஆதரவு என்பதை விளக்கும் விதமாக அண்மையில் அய்யா அவர்கள் ஒரு வீடியோ பதிவை வெளியிட்டிருந்தார்கள். அதில் காங்கிரஸ் கட்சிக்கு தனது ஆதரவை தெரிவித்திருந்தார். ஆளும் பா.ஜ.க-விற்கு தனது ஆதரவை தெரிவிக்கவில்லை. மக்களிடம் காணப்படும் வேறுபாடுகளை அதாவது மதம் சார்ந்த ஜாதி சார்ந்த வேறுபாடுகளை முன்னிலைப்படுத்தி அவர்களிடையே பிரிவினையை உண்டாக்கி ஆட்சியை பிடித்து விடலாம் என்று கங்கணம் கட்டி பிரச்சாரத்தில் ஈடுபட்டு கொண்டிருக்கும் பா.ஜ.க-விற்கு அவர் ஏன் ஆதரவளிக்கவில்லை என்பதை இப்படி எளிதாக புரிந்திடலாம். அன்புவனத்தை மையமாக கொண்டு இயங்கும் அய்யா வழி அன்பை விதைக்கின்றது. இதற்கு

நேர்மாறாக பா.ஜ.க வெறுப்பை விதைக்கின்றது.

எழில்மிகு கன்னியாகுமரி கடற்கரையில் இருந்து சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் சாமிதோப்பில் அன்புவனம் செயல்பட்டு கொண்டிருக்கிறது. அங்கே நேரடியாக சென்று பால பிரஜாதிபதி அடிகளார் அவர்களை மே 3, 2019 அன்று நேரில் சந்தித்தது (நாகர்கோவில்) வைகறை வெளிச்சம் வாசகர் குழு.

ஆளும் பா.ஜனதா கட்சியின் ஆபத்து குறித்து அனைத்து சமுதாய மக்களும் கடந்த ஐந்து ஆண்டுகளில் உணர்ந்து இருக்கும் வேளையில் அய்யா பால பிரஜாதிபதி அடிகளார் அவர்களின் இந்த தேர்தல் நிலைபாடு குறித்து கலந்துரையாடவே அங்கே சென்றோம். வைகறை வெளிச்சம் பத்திரிகை அறிமுகத்துடன் சில கேள்விகளை முன்வைத்தோம். அவரின் பதில்கள் இதோ

**அய்யா வழி, அய்யாவை பற்றிய அறிமுகம்?**

அய்யா வைகுண்ட சாமி அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சமய இயக்கத்தின் தலைவராக செயல்பட்டு கொண்டிருக்கிறேன். ஆறு தலைமுறைக்கு முன்னால் உருவானது இவ்வியக்கம். ஆன்மிகம் என்றாலே போலித்தனம் நிறைந்திருந்த காலம். சாதி ஆதிக்கம் மேலோங்கி இருந்த காலம். வன்கொடுமை மேலோங்கி இருந்த காலம். அக்காலத்தில் தோன்றிய அய்யா வைகுண்ட சாமி அநீதிக்கு எதிராக போராடினார். ஆண்கள் முழு வேட்டி கட்டக் கூடாது. பெண்கள் மேலாடை அணியக் கூடாது என்ற நிலை இருந்தது.

அரசின் துணை கொண்டு செயல்பட்ட இந்த ஆதிக்கத்தை எதிர்த்தார், புரட்சியை ஏற்படுத்தினார் அய்யா வைகுண்டர். அதனால் சிறை சென்றார். பின்பு விடுதலை பெற்றார். சுய மரியாதையோடு வாழ கற்றுக் கொடுத்தார். மது அருந்த தடை செய்தார். அய்யா வழி தனி வழி, சமரசம் செய்யாத கொள்கை கூட்டம். இங்கே ஜாதி, மத பேதமில்லை. அனைத்து ஜாதி இன மக்களும் வந்து வழிபடக்கூடிய தலமாக விளங்குகின்றது அய்யா வழி.

ஆரிய இந்துக்கள் தங்களது ஆதிக்கத்தை மறைமுகமாக அய்யா வழியின் மீது திணிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் அம்மன் கோவில்கள் எல்லாம் ஆரிய கோவில்களாக மாற்றப்பட்டுள்ளன. ஆயிரம் ஆண்டுகளாக அம்மன் கோவிலில் யாகத்தை நடத்தாத மக்கள் இப்போது யாகத்தை நடத்துகிறார்கள். அறியாமையால் இவர்கள் பின்னால் செல்பவர்கள் விரைவில் உணர்வு பெற்று திரும்ப வருவார்கள்.

தனித்தன்மையை காட்டுவதற்காக அய்யா வழிக்கு தனி சமய அந்தஸ்து வேண்டும் என்ற எங்களின் முயற்சியால் ஆரியத்துக்கு பாதிப்பு வந்து விடுமோ என அஞ்சுகிறார்கள்.

அய்யா அவர்கள் தோள் சீலை போராட்டத்திற்கு அடித்தளம் அமைத்து கொடுத்தவர். நாராயண குருவின் இயக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர். வள்ளலாருக்கு முன்பே ஒருமைப்பாட்டை போதித்தவர். தேர் போகிற வீதியிலே நாய் போகலாம், நரி போகலாம் ஆனால் மனிதனான நாடார் போக முடியாது. தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதுபட்டவர்கள் போக முடியாது. அந்த நிலையிலிருந்த நாடார்களை அய்யா வழியால் மீட்டெடுத்தவர். மரணம் வரை எத்தனை இன்னல்கள் வந்தாலும் சகித்து கொண்டு போராடுவோம்.

**கே**: திருவிதாங்கூர் மன்னர் ஆட்சி காலத்தில் மேலாடை கீழாடை உரிமை மறுக்கப்பட்டதே, அது மட்டும் தான் பாதிப்பா அல்லது வேறு ஏதேனும் பாதிப்பை மக்கள் அனுபவித்தார்களா?

**ப**: உரிமையே இல்லையே. நாய் போகலாம், நரி போகலாம் தெருக்களில். ஆனால் மற்ற சாதிக்காரரர்கள் போகக்கூடாது என்றால் என்ன உரிமை இருக்கிறது? என்ன மரியாதை இருக்கிறது. மதத்திற்குள் ஒரு சீர்திருத்தத்தை கொண்டு வந்தவர் அய்யா வைகுண்டர். நாராயண குரு, அய்யன்காளி, சட்டம்பி சுவாமி போன்றோர்கள் அய்யா வைகுண்டரை தொடர்ந்து வந்து சீர்திருத்தம் ஏற்படுத்தியவர்கள்.

**கே**: இந்து அறநிலையத்துறையில் அய்யா வைகுண்டர் கோவிலை இணைத்துக் கொள்ளும் முயற்சி எடுக்கப்படுகின்றதே?

**ப**: சட்டப்படி எடுக்கலாம். அதற்கு எதிராக போராடி கொண்டிருக்கிறோம். வீரசைவ லிங்காயத்துக்கு தனி சமய அந்தஸ்து

கொடுத்ததைப் போன்று நாங்களும் கேட்கின்றோம். உண்ணாவிரத போராட்டம் நடத்தினோம். அரசு எங்கள் கோரிக்கைகளை செவி சாய்ப்பதாக கூறியது. ஆனால் காலம் கடத்துகின்றது. குறிப்பாக பொன்.ராதாகிருஷ்ணன் அறநிலையத் துறையை இந்த பகுதிக்கு வரவிட மாட்டேன் என்றார். உத்திரவாதம் தந்தார். கடைசி நேரத்தில் தனி சமய அந்தஸ்தை தர தமிழ்நாடு அரசு முன் வந்தாலும் இவர் தடுத்து வருகிறார். பொன்.ராதாகிருஷ்ணனுக்கு எங்கள் மீது பாசம் இருக்கிறது. அவர் ஆதரவாக செயல்பட முன்வந்தாலும், அவரின் பின்னால் இருக்கும் ஆதிக்க சக்திகள் அவரை இயக்குகின்றன. காங்கிரஸ் எங்கள் கோரிக்கைகளை செயல்படுத்திட முயற்சி எடுக்கின்றது. பொன். ராதாகிருஷ்ணன் மட்டுமல்ல, இந்தியாவே ஆதிக்க சக்தியின் பிடியின் கீழ்தான் செயல்பட்டு கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தனிமனிதனும் ஒரு மதத்தை நிறுவ முடியும், பரப்ப முடியும். அதற்கு அரசியல் சட்டத்தில் இடம் இருக்கின்றது. நாங்கள் எத்தனை பேர் இருந்தால் என்ன? இப்போது இருப்பவர்களுக்கு தனிசமய அந்தஸ்து கொடுங்கள் என்றே கேட்கின்றோம். அய்யா வழி தனி சமயமாக உருவாகும் காலம் கனிந்துவிட்டது. இது நடந்தே தீறும்.

**கே**: காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு நிலைபாடு குறித்து?

**ப**: எங்களுக்கு தனி சமய அந்தஸ்து பிரச்னையில் எல்லோரும் உதவினாலும் அரசே இதற்கான ஆணை பிறப்பிக்க முடியும். அம்மா (முன்னாள் முதல்வர் ஜெயலலிதா) அவர்கள் இதற்கான ஆணையை பிறப்பிப்பேன் என்றார்கள். அவர் சொன்னதை செய்வேன் என்று கூறி இப்போது ஆட்சியில் இருப்பவர்கள் காலம் கடத்துகிறார்கள். எங்களுக்கு எதிராக செயல்படுபவர்களுக்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்கவில்லை. நாங்கள் நசுக்கப் படுகிறோம். எனவே அதற்கு எதிராக குரல் கொடுக்கிறோம்.

**கே**: பால ஜனாதிபதி அய்யா அவர்கள் ஆதிக்க சக்திகள் மீண்டும் தலைதூக்குகின்றது என்று பேட்டி கொடுத்திருக்கிறாரே?

**ப**: ஆமாம். ஆதிக்கத்தை விரும்பாத காரணத்தினாலே தானே நாங்கள் அய்யா வழிக்கு வந்தோம். அய்யா வழியின் அவசியம் என்ன? மனுதர்ம கோட்பாட்டுக்கு எதிரானது அய்யா வழி. மனுதர்மத்தை முழுமையாக படிக்கிற எவரும் மறுபடியும் அந்த வழியில் போக மாட்டார்கள்.

**கே**: பொன். ராதாகிருஷ்ணன் உங்களை போன்றோரை ஆதரிக்காமல் ஏன் ஆரிய சக்திகளுக்கு துணைபோக வேண்டும். ?



**ப**: பாவம், பரிதாபத்திற்குரிய செயல் அது. சங்கராச்சாரியாரை பார்க்க போகும் பொழுது தரையில் அமர்ந்திருக்கிறார் பொன்.ரா. முன்னாள் மத்திய அமைச்சர் சுப்ரமணிய சுவாமி நாற்காலியில் அமருகிறார். ரவி சங்கர்ஜி போகிறார். நாற்காலியில் அமருகிறார். பி. ராஜா போகிறார். நாற்காலியில் அமருகிறார். அங்கே வஞ்சிக்கப்பட்டது பொன்.ரா மட்டுமல்ல. பால பிரஜாதிபதியின் முன்னோர்களும் பின்னோர்களும். இன மானம்

மரியாதை இழந்து கிடக்கிறது அங்கே. என்னால் தாங்க முடியவில்லை. இன்று நினைத்தாலும் உதிரம் சூடேறுகிறது, கொதிக்கிறது. இதெல்லாம் அடிமைத்தனம். நான் செத்தாலும் இந்த சங்கடம் தீராது. 21-ஆம் நூற்றாண்டில் இப்படி நடப்பது எவ்வளவு பெரிய அநியாயம்.

லிங்காயத் சமுதாயத்தில் 110 வயதான ஒரு சுவாமியை சந்திக்க சென்றேன். அவர் என்னை



அருகிலே நாற்காலியில் அமர வைத்து மாலை அணிவித்தார். என் கையை பற்றிக் கொண்டே என்னிடம் பேசினார். இது மரியாதை. என் சமுதாயத்தில் எல்லோரும் இதை நினைத்துப் பார்ப்பார்கள்.

அப்பொழுதெல்லாம் கூரை வீடு கட்டக்கூடாது. திண்ணை வீடு கட்டக்கூடாது. ஏன் தெரியுமா? காலை கீழே போட்டு நான்கு பேர் சேர்ந்து பேசலாம். குடிசை வீடுன்னா குத்த வைத்துத் தானே அமரமுடியும், அதனால்தான்.

**கே:** நாடார்களை ஒருங்கிணைக்கும் முயற்சி ஏதும் நீங்கள் செய்கின்றீர்களா?

**ப:** கன்னியாகுமரி மாவட்டத்தில் மத கலவரம் நடந்தது. நாடார்களின் மீது நிறைய வழக்குகள் போடப்பட்டது. இதையெல்லாம் யார் தீர்த்து வைத்தார்?. மற்ற சமுதாய மக்களிடம் சமாதானம் பேசி வழக்கை தீர்த்து வைத்தது பால பிரஜாதிபதி தானே. தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியின் பங்குகளை வட நாட்டவருக்கு விற்று விட்டார்கள். அதற்கு எதிராக போராடிய போராட்ட குழுவின் தலைவராக இருந்து அந்த பங்கினை மீட்டோம். சாத்தான்குளம் டைட்டானியம் ஆலை எதிர்ப்பு குழுவான தென்னக தேரிமன் பாதுகாப்பு போராட்ட பொதுக்குழுவின் பொதுத்தலைவராக செயல்பட்டுள்ளேன். ஜாதிய அடக்கு முறையால் உயிரிழந்த வெங்கல ராஜாவின் வரலாறுகளை நினைவுகூறும் விதமாக ஓராண்டிற்கு ஒருமுறை மக்களை ஒன்றிணைக்கின்றோம். ஜாதியத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆதிக்க சக்திகளுக்கு ஒருபோதும் நாடார்கள் அடிபணிந்து விடமாட்டார்கள். சிலர் தற்போது அவர்களின் பின்னே செல்லலாம். அவர்கள் விரைவில் திரும்பி வருவார்கள்.

**கே:** இணையம் துறைமுகம் வருவதை குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?

**ப:** என்ன ஏற்றுமதி செய்ய போகிறார்கள் இவர்கள்? துறைமுகத்திற்கான அவசியம் என்ன? இது இப்பகுதியை அழிக்கிற செயல். அப்படி துறைமுகம் வந்தால் சாமிதோப்பும் அழிந்துவிடும். விழிஞ்சம், தூத்துக்குடி துறைமுகத்தை டெவலப் செய்யுங்கள். தொட்டி பாலம் வழியாக தண்ணீர் கொண்டு வருகிற திட்டம் ஏதும் இருக்கிறதா? பழையாறு தண்ணியை தேக்கி வைப்பதற்கான திட்டம் ஏதும் இருக்கிறதா? எனக்கு மத நல்லிணக்கத்திற்கான கோட்டை அமீர் விருதை தந்தார்கள். அதை தரும்பொழுது, இந்த வட்டாரத்திற்காக ஏதும் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறீர்களா என்று கேட்டனர். சுசீந்திரத்தில் அணைக்கட்டி காமராஜர் கட்டிய ராதாபுரம் சானல் வழியாக தண்ணீர் கொண்டு செல்ல வேண்டும். எம் மக்கள் பயன்பெறுவார்கள். காமராஜர் பெயரால் அத்திட்டத்தை கொண்டு வாருங்கள் என்றேன்.

**கே**: கடந்த ஐந்து ஆண்டுகளில் சாதி அடிப்படையில் நடத்தப்படும் கொடுமைகள் அதிகரித்துள்ளதே?

**ப**: சாதி என்ற ஒன்றை வைத்தால் தான் வளமாக வாழமுடியும் என்பதற்காக ஆரியர்கள் அந்நியர்கள், இந்தியாவிற்குள் புகுந்தவர்கள் வந்தேறிகள், இந்த நாட்டு மக்களை அடிமையாக்குவதற்காக ஏற்படுத்தியது. இதிலிருந்து வெளியேற சிலர் மதம் மாறினர். மதம் மாறாதவர்கள் சாதிக் கொடுமைகளை அனுபவித்தனர். இவர்களை காப்பாற்ற அய்யா வைகுண்டர் வழியை காண்பித்தார். இந்த கொள்கைக்காக எதை இழப்பதற்கும் தயார். மனிதனில் உயர்ந்த சாதி எதுவும் இல்லை. எங்களை விட தாழ்ந்த ஜாதி எதுவும் இல்லை. எங்களை கொல்லத்தான் முடியுமே தவிர வெல்ல முடியாது. அய்யா வழி தழைக்கும்.

நேரம் ஒதுக்கி நாம் கேட்ட கேள்விகளுக்கு பொறுமையாக தெளிவான பதில்களை தந்த அய்யா பால பிரஜாதிபதி அடிகளார் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விட்டு அங்கிருந்து நகர்ந்தோம்.

அய்யாவை சந்திப்பதற்கு முன் உணவருந்த அங்கிருந்த ஒரு கடைக்கு சென்றோம். ரூபாய் 1000, 500 தாள்கள் பண மதிப்பிழப்பு நடவடிக்கையால் ஏற்பட்ட வலிகளை பாதிப்புகளை நம்மோடு பகிர்ந்தார்கள். GST நடைமுறை படுத்திய விதத்தையும் விமர்சனம் செய்தனர். “களை” பறித்து விட்டு பணத்திற்கு ATM கார்டையா நாங்கள் பயன்படுத்த முடியும் என்று கேள்வி கேட்டனர். இந்தியாவில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளை புரிந்து கொள்ளாமல் வலுகட்டாயமாக உடனே எல்லோரையும் டிஜிட்டல் பண பரிவர்த்தனைக்கு மாற்ற முயற்சி செய்வது எவ்வளவு பெரிய அறிவாளித் தனம்? மற்ற சமுதாய மக்களின் தனித் தன்மைகளை அழிக்கும் முயற்சியில் ஈடுபடும் ஆதிக்க வர்க்கத்தை எதிர்த்து ஓரணியில் திரள்வது காலத்தின் கட்டாயம்.

**அப்துல் பாசித், சமீம்,**

**ஜின்னா, அபூஹாசின்**

**வைகறை வெளிச்சம் நிருபர் குழு**

**நாகர்கோவில்**

**முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர்**
**சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)**

**இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?**

**இஸ்லாம் அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி**

**லின்ச்சின் கோப்புகள்**

**போன்ற தொடர்கள் அடுத்த மாத இதழ்களில் இடம் பெறும்.**



# சைனாவை / சீனாவை 22 நாடுகள் கண்டித்தன

சீனாவில் கசக் மற்றும் உகியூர் முஸ்லிம்கள் 10 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கடுமையான சித்திரவதைகளுக்குத் தொடர்ந்து ஆளாக்கப்பட்டு வருகின்றார்கள்.

இந்த முஸ்லிம்களை சித்திரவதைச் செய்து அவர்களை ஈமான் இழக்கச் செய்திடவும், பல சித்திரவதை முகாம்களை சீனா ஏற்பாடு செய்திருக்கின்றது. அவற்றின் பெயர் Vocational Education and Employment Training Centers – தொழிற்கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பயிற்சி மையங்கள். இத்துனை மென்மையான பெயரால் அமைக்கப்படும் கூடங்கள் கொடுமையும் சித்திரவதைகளும், கொலைகளும் செய்யப்படும் கூடங்கள். விரிவான தகவல்களுக்கு பார்க்க வைகறை வெளிச்சம் ஜூன் 2019.

வைகறை வெளிச்சம் உட்பட உலக நாடுகல் அனைத்தும் உலகிலுள்ள எழுத்தாளர்களும் சீனாவை கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் சீனா இதனை வன்மையாக எதிர்த்தது. ஆப்கானிஸ்தா முஜாஹித்கள் சீனாவின் சித்திரவதைக் கூடங்களிலிருந்து முஸ்லிம்களை மீட்க முயற்சிகளை மேற்கொண்டார்கள். உடனேயே அலறி அடித்துக் கொண்டு அந்த முஜாஹித்களை அழைத்து சமாதனப்படுத்தினர்.

இதனிடையே OIC - Organizations of Islamic Council என்ற முஸ்லிம்கள் நாடுகளின் கூட்டமைப்பு என்ற அமைப்பைக் கொண்டு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதில் சீனா தன்னிடத்தில் வாழும் முஸ்லிம்களை நன்றாகவே நடத்துகின்றது எனக் கூறியது.

முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்புச் செய்த மிகப்பெரிய துரோகம் இது.

ஆனால் சீனாவின் விளக்கங்களையோ முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பு விடுத்த அறிக்கையையோ ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. அத்துடன் 22 நாடுகளும் சீனா கஸக் மற்றும் உகியூர் முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்துவதை கடுமையான சொற்களால் கண்டித்துள்ளன. இப்போது மெல்ல, மெல்ல சீனா தனது கொடுமைகளை குறைத்துக் கொண்டுள்ளது.

**எம்.ஜி.எம்.**

# சிலுவைப் போர் 2.0

## CRUSADE 2.0 BY JOHN FEFFER







**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

**இன்றைய நாள்களில் மேலை நாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?**

முதல் சிலுவைப் போர் 1095இல் தொடங்கி 1274இல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது. சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991இல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.

இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

# சிலுவைப் போர்கள் பற்றிய பொய்களை விளம்புதல்


அன்பார்ந்த வாசகர்களே!

இந்தத் தொடரைத் தொடங்கும் போது இருந்த வரவேற்பை விட இப்போது அதிகமான வரவேற்பை பெற்று வருகின்றது. காரணம் நமது சமகால நிகழ்வுகளின் பின்னணியை இது படம் பிடித்துக் காட்டுகின்றது. அதாவது முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பின்னர், பகை, பின்னர் கோபம், தொடர்ந்து முஸ்லிம்களைக் கொலை செய்வது. இஃது இந்தியாவில் மட்டுமல்ல உலகின் இதரப்பகுதிகளிலும் நடந்து வருகின்றது. இப்போது நம் நாட்டில் நடக்கும் பசு, மாட்டிறைச்சி கொலைகள், ஜெய் சீறீராம் எனச் சொல்லச் சொல்லி நடக்கும் கொலைகள் எல்லாமே இதையே உணர்த்துகின்றன. ஒரு குரூரமான வெறுப்பு வெகு நாட்களாகவே சுமார் 200 ஆண்டுகளாக வளர்க்கப்பட்டு வருகின்றது. இதனை நாம் முன்னர் நிறுவி நடத்தி வந்த விடியல் வெள்ளி என்ற பத்திரிகையின் வழியாகவும் இப்போது வைகறை வெளிச்சம் வழியாகவும் தெளிவுப் படுத்தி வருகின்றோம்.

இந்தப் பின்னணியை மனதில் வைத்துக் கொண்டு சிலுவைப் போர் 2.0 இஸ்லாத்திற் கெதிரான மேலை நாடுகளின் தொடர் யுத்தம் என்ற தொடருக்கு வருவோம்.

*ஜான் பெஃப்பர் அவர்களின் சொற்களில்;*

*"மக்கள் மனதில் நாங்கள் ஏற்படுத்தி இருக்கும் இஸ்லாமிய பீதி மிகவும் ஆழமாக வேர் விட்டது. எட்டுக்கால் பூச்சியின் மீது ஒரு குழந்தைக் கொள்ளும் பயம், அதன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கும். அதேப்போல் தான் நாம் ஏற்படுத்தி இருக்கும் இஸ்லாமிய பீதி. அது குழந்தைகளின் அடிமனதிலிருந்து வருவது. ஆயுட்காலம் வரை நீடிப்பது. இதற்காக நாங்கள் முதல் சிலுவைப் போர்களின் தொடக்கத்தில் நடந்த நிகழ்வுகளை*




*பயன்படுத்திக் கொள்கிறோம். நிச்சயமாக நாம் இஸ்லாத்தின் மீது கொள்ளும் அச்சம், பீதி, அறிவுக்கு அப்பாற்பட்டது.*

*முதல் சிலுவைப் போர்கள் பற்றி நாங்கள் கட்டியக் கட்டுக் கதைகள் தாம் நமது இன்றைய இஸ்லாமாமோபோபியா என்ற இஸ்லாமியப் பீதியின் அடித்தளம். அந்தக் கதைகள் நமது* மேலை நாட்டு நாகரிகத்தின் தொடக்க *நாட்களில் நாங்கள் கட்டிவிட்ட கட்டுக்* கதைகள் இவை;

"முஸ்லிம்கள் பாரம்பரியமாகவே வன்முறையாளர்கள். முஸ்லிம்கள் இந்த உலகை ஆக்கிரமிக்கவும், கையகப்படுத்திக் கொள்ளவும் விரும்புகின்றார்கள். முஸ்லிம்களை நம்பிட முடியாது." *(பார்க்க அடிக்குறிப்பு - 01)*

மேலை நாட்டு நாகரிகத்தின் வரலாற்றில் பாரம்பரியம் மிக்கவர்களும், பெயரும் புகழும் பெற்றவர்களும் இந்தப் பொய்களை பல்வேறு வடிவங்களில் பரப்பி வருகின்றார்கள்.

அவர்களுள் ஒருவர் தான் மார்க்கபோலோ. பதின் மூன்றாம் நூற்றாண்டில் மிக நீண்ட பயணம் ஒன்றை மேற்கொண்டவர். இவர் தனது பயணத்தில் பார்த்தவற்றையெல்லாம் புகழ்ந்தவர். ஆனால் இஸ்லாம் என்று வருகின்ற

போது மிகவும் பாரதூரமான சொற்களைப் பிரயோகித்தவர். நாசமாய்ப் போன அரபுக் குடிகள் ஒரு குற்றச் செயல் விடாமல் அனைத்துக் குற்றச் செயல்களையும் செய்துக் கொண்டே இருந்தார்கள். மத நம்பிக்கையில் தங்களிடமிருந்து மாறுபட்டவர்களைக் கொலை செய்து கொண்டிருந்தார்கள்.

(Source: Marco Polo - Peter Haris Colin Thuborn William Marsdin and Thomas Wright - Book Name : The Travels of Marco Polo - The venetia Newyork 2008) *(பார்க்க: அடிக்குறிக்கு 02)*

*"மறுமலர்ச்சி" இயக்கத்தின் மிகப்பெரிய ஆசான் எனக்கருதப்பட்ட (Voltaire) வால்டையர் ஐந்து பகுதிகளை கொண்ட நாடகம் ஒன்றை நடத்தினார்.(1763)*

*அதற்கு அவர் வைத்த பெயர் @தீவிரவாதம் அல்லது முஹம்மத் ஓர் இறைத்தூதர்.@* Fanaticism or Mohamed the Prophet -*பார்க்க அடிக்குறிப்பு: 3)*

*மிகவும் தன்னடக்கத்தோடு எழுதுபவர் எனப் பெயர் பெற்ற ஜெர்மானிய எழுத்தாளர் மற்றும் சமூகவியலாளர் மாக்ஸ் வெப்பர்* - Max Webber *இஸ்லாம் ஒரு போராளி மதம் என்றே எழுதினார்.*

(Source: Economy and Society: An Outline of Interpretive Sociology - Vol - 2 - Berkelery University of California Press : 2002 - Page: 67-68)

*இவையெல்லாம் ஆழமாக வேர்விடப்பட்ட வெறுப்புகள்.*

இப்படி இஸ்லாத்தை இடித்துரைப்பது ஒரு சமூகவியலாளரின் மனசாட்சியைத் தொடவில்லை. தன்னவர்கள் இகழும் ஒரு மார்க்கத்தை இடித்துரைப்பது தவறில்லை என்றே அவர் கருதினார்.

உண்மையச் சொன்னால் முதல் சிலுவைப் போரின் போது கிறிஸ்தவர்கள் செய்த கொடுமைகள் வரலாறாக வாழ்ந்து கொண்டிருப்பவை. அதேபோல் கிறிஸ்தவம் உலகமெல்லாம் பரவி ஒவ்வொரு மூலை முடுக்கிலும் கோலோச்ச வேண்டும் என்ற பேராசையை போப்புகள் என்றைக்கும் மறைத்து வைத்ததுமில்லை.

(முதல்) சிலுவைப் போரில் கலந்து கொண்ட சிலுவைப் போர் தளபதிகள் தாங்கள் முஸ்லிம்களிடம் கொடுத்த வாக்குறுதிகளை அடிக்கடி மீறியதும் ஏமாற்றியதும் முஸ்லிம்களிடம் பெரும், வெறுப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்தி இருந்தது. இந்த வாக்குறுதிகளை மீறுவதும் ஏமாற்றுவதும் இன்றைக்கும் அப்படியே பொருந்தும். *(பார்க்க அடிக்குறிப்பு: 04)*

நமது இன்றைய நாள் சிலுவைப் போர் வீரர்கள் இந்த வாக்குறுதி மீறலை இன்றைக்கு இரட்டிப்பு வேகத்தில் செய்து கொண்டிருக் கின்றார்கள். இதனால் முஸ்லிம்கள் மேலை நாட்டவர்கள் மீது பயங்கர அதிருப்தியோடு இருக்கின்றார்கள்.

நமது (மேலை நாட்டு) நவீன சிலுவைப் போர் வீரர்கள் ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய போர்களில் காட்டிய வன்முறைகளுக்கும் மனித உரியை மீறல்களுக்கும் எல்லையே இல்லை.

அன்றைய சிலுவைப் போர் வீரர்கள் காட்டிய கோரத்தையும் குரூரத்தையும் இன்றைக்கும் நாம் அதிக வேகத்துடன் காட்டிக் கொண்டிருக் கின்றோம்.

ஜனநாயகம், தாராளமயம், கிருஸ்தவம் என்ற பெயர்களில் உலகமெங்கும் ஒரு பயங்கர ஆயுதந்தாங்கிய போரை இஸ்லாத்திற் கெதிராகவும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் கட்டவிழ்த்து விட்டு கொண்டிருக்கின்றோம். இதற்காக உலக மக்களிடம் பொய்ச் சொன்னோம். எடுத்துக் காட்டாக சதாம் ஹூஸைனின் அனு ஆயுதங்கள் பற்றி தகவல்கள் அவருக்கும் அல்காயிதாவுக்குமிடையே உள்ள தொடர்புகள். எல்லாமே பொய்தான். (இன்ஷா அல்லாஹ் தொடரும்)

### *அடிக்குறிப்புகள்*

#### *அடிக்குறிப்பு 01*

முஸ்லிம்களை நம்பிட இயலாது என்றொரு அவ நம்பிக்கையை உலக மக்களிடம் விதைப் பதற்காகத்தான் உலகின் பல்வேறு நாடு களிலும் குண்டு வெடிப்புகளை நடத்தி வருகின்றார்கள் அமெரிக்காவின் உளவுத் துறையைச் சார்ந்தவர்கள். இதில் அந்தந்த நாட்டின் உளவுத்துறைகளும் சேர்ந்து கொள்கின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை முஸ்லிம்

களும் பிற சமயத்தவர்களும் இணைந்து வாழுமிடங்களில் ஆர்.எஸ்.எஸ்., அபிநவ் பாரத், வந்தே மாதரம், சனாதன் சான்ஸ்தா என்ற அமைப்புகள் குண்டுகளை வைக்கின்றன. பழியை முஸ்லிம்கள் மேலே போடுகின்றன. எந்த நிலையிலும் நாம் மேலே சொன்ன அமைப்பைச் சார்ந்தவர்கள் சிக்கிக் கொள்ளாமலிருப்பதை உளவுத்துறை உறுதி செய்கின்றது. காப்பாற்றுகின்றது.

அதனால் இந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் தைரியமாக குண்டுகளை வைத்துக் கொண்டே இருக்கின்றனர்.

இது இந்தியாவிக்கு மட்டுமல்ல. உலகெங்கும் நடத்தப்படும் எல்லா குண்டு வெடிப்புகளுக்கும் பொருந்தும்.

இந்தியாவில் இன்றைக்கு NIA - என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு அமைப்பு நடத்தி வரும் நாடகம் இந்த வகையைச் சார்ந்ததே. அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்து வெளிநாடுகளில் பணம் திரட்டி இந்தியாவுக்கு எதிராகப் போர் தொடுத்திருக்கின்றார்கள். அதற்காகப் பல அமைப்புகளை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். என்ற பரப்புரை, சகோதர சமுதாயத்தவர் களிடம் முஸ்லிம்களின் மேல் நம்பிக்கை இன்மையையே ஏற்படுத்தும். இதை மேலை நாட்டவர்கள் கி.பி.637 முதலே செய்து வருகின்றார்கள் என்பது நமக்கு புதிய செய்தி. ஆனால் நாம் இதனை முன்னர் விடியல் வெள்ளி வழியாகவும் இப்போது வைகறை வெளிச்சம் வழியாகவும் நீண்ட நாட்களாகவே வாசகர்களுக்கு தெளிவுபடுத்தி வருகின்றோம்.

### அடிக்குறிப்பு - 02

மார்க்கோ போலோ என்பவர் 1254 முதல் 1324 வரை வாழ்ந்த வியாபரி. இவர் இத்தாலி நாட்டின் வெனிஸ் நகரைச் சார்ந்தவர். இவர் 24 ஆண்டுகள் உலகை சுற்றி வந்தவர். வியாபாரமே நோக்கம்.

தன் வாழ்வின் பெரும் பகுதியை (சைனா) சீனாவில் செலவழித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் வியாபாரியே என்றாலும் இவர் எழுதிய சுற்றுப் பயணக் குறிப்புகள் உலகெங்கும் பிரசித்திப் பெற்றவை. அவர் கூட இஸ்லாத்தை இடித்துரைத்திருப்பது மேலை நாட்டவர்கள் எத்துணை ஆழமான குரூரத்தை தங்கள் மனங்களில் சுமக்கின்றார்கள் என்பதை எடுத்துரைக்கின்றது.

இஸ்லாத்திற்கு எதிரான இலக்கியங்களை ஆய்வு செய்யும் அறிஞர்கள் கூட இஸ்லாத்திற்கு எதிராக ஒரு வியாபாரி எழுதுவார் என எதிர்பார்க்க மாட்டார்கள். ஆனால் உலக அரங்கில் மிகவும் பிரபல்யமான சுற்றுப் பயண குறிப்பு ஒன்று இஸ்லாத்திற்கு எதிராகப் பேசிக் கொண்டிருக்கின்றது என்பது வேதனை மிகுந்த ஒன்று. இதுபோன்ற வெறுப்பின் வேர்களை கெல்லி எறிந்திட நாம் ஓய்வின்றி உழைத்திட வேண்டும்.

### அடிக்குறிப்பு - 3

வால்டையர் போன்றவர்களுக்கு மார்க்க அறிஞர்கள் ஏராளமாகப் பதில் சொல்லி இருக்கின்றார்கள். இப்போது கரன் ஆம்ஸ்டிராங் போன்றவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களும் பதில் சொல்லிடத் தொடங்கி விட்டார்கள். யுவான்னி ரிட்லி ஒரு பெரும் எழுத்துப் போரையே தொடங்கிக் கொண்டிருக்கின்றார். தொடர்ந்து கொண்டிருக்கின்றார்.

### அடிக்குறிப்பு - 4

இதனை பாலஸ்தீனில் இவர்கள் தாரளமாக செய்கின்றார்கள். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் உதவியோடு இஸ்ரேல் 43,000 ஒப்பந்தங்களை மீறி இருக்கின்றது. அதற்கு அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் துணை போயிருக்கின்றன. (ஆதாரம்: The Palestinian Documents - Phoros Media)

**வைகறை வெளிச்சம் வாசகர்கள் தங்களது சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.**



# தியாகி டாக்டர் செய்புத்தீன் கிச்சிலுவும் ஜாலியன் வாலாபாக்கும்

இவர் தன் பொருளையும் தன் இன்னுயிரை நாட்டிற்காக தியாகம் செய்ய துணிந்த ஓர் உண்மையான தியாகி. இவ்வாறு வாழ்ந்து மறைந்தவர்களை தியாகிகளென்று சொல்ல வேண்டும். அந்த வகையில் இறுதியில் வறுமையோடும் நோயோடும் போராடி நம் நாட்டில் மறைந்தவர் டாக்டர் கிச்சிலு.

ஜாலியன் வாலாபாக் போராட்ட தள நாயகன் டாக்டர் கிச்சிலு *13.04.1919*ல் ஆங்கிலேயே அரசுறவு லட் சட்டம் போட்டது. இதை எதிர்த்து மக்களுக்கு இச்சட்டம் பற்றி விளக்கி சொல்லவும் இச்சட்டத்தை எதிர்க்கவும் அமிர்த சரஸில் ஜாலியன் வாலாபாக் என்னும் இடத்தில் டாக்டர். செய்புத்தீன் கிச்சிலு தலைமையில் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

மக்கள் பெருமளவு கூடினர். கூட்டத்தைக் கலைக்க ஜெனரல் டயர் துப்பாக்கி சூடுநடத்தினார். இதில் மக்கள் அங்குமிங்கும் ஓடினர் அருகே இருந்த கிணற்றில் விழுந்தனர். ஜெனரல் டயர் கிணற்றை சுற்றி சுட உத்தரவிட்டு *124* பேர் கிணற்றிற்குள்ளாவும் சுற்றியுள்ள பகுதியில் ஆயிரக்கணக்கானோர் மாண்டனர். அக்கிணறு இன்றும் உள்ளது. அதன் அருகே மாண்ட இந்து, முஸ்லீம், சீக்கிய, கிறிஸ்தவர் எண்ணிக்கைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. நான் வியாபாரம் காரணமாக பஞ்சாப் சென்ற போது, அமிர்த சரஸிற்கு சென்ற போது, இப்பகுதியை பார்த்தேன்.

*14.4.2019* தினகரன் மற்றும் செய்தி தாள்களில் காங்கிரஸ் தலைவர் இராகுல்காந்தி, பஞ்சாப்-இன் இப்போதைய முதல்வர் அமிர்ந்தர் சிங்கும் சென்று



**ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்**
**குளச்சல்**



ஜாலியன் வாலாபாக்கில் மரணமடைந்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினரென்ற செய்தி வந்துள்ளது.

*13.04.1919* ஜாலியன் வாலாபாக் படுகொலையைப்பற்றி சொல்லும் போது டாக்டர் கிச்சிலுவும் இஸ்லாமியர் பங்கும் மறைக்கப் படுகிறது. டாக்டர் கிச்சிலு நாடு பிரிவினையை எதிர்த்த தலைவர்களில் ஒருவர். இருந்தும் அவர் மறைக்கப்படுகிறார்.

*1947-*ல் காங்கிரஸ் செயற்குழுவில் நம் நாடு பிரியக்கூடாதென எதிர்த்தவர்கள் மௌலானா அபுல்கலாம் ஆசாத், டாக்டர் செய்புத்தீன்கிச்லு, ஹஸ்றத்மோஹாணி, டாக்டர் ஜாஹிர் ஹுசைன், றபீஅஃமத்கித்வாய் போன்றோர்.

*1942-*ல் நாடு பிரிவினை எதிர்ப்பு மாநாடு நம் தமிழகத்தில் திண்டுக்கல் அருகே சின்னாளப்பட்டியில், கும்பகோணம் எஸ்.ஏ.றஹீம் தலைமையில் மௌலானா உனபதுல்லா சிந்தி, எம்.ஓய்.ஷரீபு, ஹாஜி முகம்மது, திருச்சி முர்த்தஜாஹஸ்றத், கோவை அப்துல் றஹீம், வலங்கைமான் அப்துல்சத்தார், வேலூர் உபைதுல்லா (திரு. காமராஜரின் உற்ற தோழர்) மௌலான அப்துல் ஹக்கீம் சகோதரர்கள் மற்றும் எண்ணற்ற முஸ்லீம்கள் கூடி நாடு பிரவினையை மாநாட்டின் மூலமும் எதிர்த்துள்ளனர். இம்மாநாடு பற்றி *25.4.1942* இந்து பத்திரிகை "நாடு பிரிவினைக்கு தமிழகத்திலிருந்து எதிர்ப்பு குரலென" குறிப்பிட்டுள்ளது.

நாடு பிரிந்தால் தமிழகம், கேரளம், ஆந்திரம், கர்னாடகம் போன்ற பகுதியில் முஸ்லீம்கள் பலவகையிலும் பாதிப்படைவோம் என்பதை நம் முன்னோர் அறிந்தே அன்றைக்கே எதிர்த்துள்ளனர்.

ஜாலியன் வாலாபாக் பற்றிய பத்திரிகை செய்தியைப் பார்த்தபோது, டாக்டர் செய்புத்தீன் கிச்சிலு தன் வெளிநாட்டில் வசிக்கும் மகளுக்கு, "தான் அரசுமருத்துவமனையில் சுகவீனமாக இருப்பதாகவும், நாட்டிற்காக மகளே! நாம் மேலும் உழைக்க வேண்டியதுள்ளது" என எழுதினாரென்றால் தான் அரசு மருத்துவமனையில் உடல் சுகவீனமுற்று மருத்துவம் பார்ப்பதையும், தன் வறுமை வாழ்விலும் நாடு முன்னேற உழைக்க வேண்டுமென மகளை கடிதம் மூலம் தெரிவித்த மனநிலையும் உண்மைத் தியாகிக்கோர் எடுத்துக்காட்டு.

டாக்டர் கிச்சிலு கேம்பிரிட்ஜ் கலைக்கழகத்தில் படித்தவர். தான் உண்டு தன் வாழ்வுண்டு என்றில்லாமல் நாடு அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற போராட்டங்களில் ஈடுபட்டு தன் இறுதி வாழ்வில் வறுமையோடு அரசு ஆஸ்பத்திரியில் மருத்துவம் பார்த்தே இவ்வுலகை துறந்துள்ளார் என அறிகிறோம்.

இவர் ஓர் உண்மைத் தியாகி. இவரை இவர் போன்ற தியாகிகளை நாட்டிலுள்ளோர் நினைப்பதுண்டோ?

## பெரும்தலைவர் காமராஜரும், பசுவதையும்

பசுவதைத் தடுப்பு எனும் பேரால் எழும் குரல்களை சமகால இந்தியா எச்சரிக்கையோடு பார்த்துக் கொண்டிருக்கிறது. பசுவைக் கடத்தினார், கொன்றார் என்ற புரளியிலேயே இதுவரை நாற்பது பேர் கொல்லப் பட்டிருக்கிறார்கள். இன்று மட்டு மல்ல. சரியாக *50* ஆண்டுகளுக்கு முன்பும் நாடு இதே காரணத்துக்காக, இதே கொந்தளிப்பான நிலையில்தான் இருந்தது! அந்த நாள் *1966* நவம்பர் *7*.

இந்தியாவின் பிரதமராக இந்திராகாந்தியை அடையாளம் காட்டி, தான் ஒரு கிங் மேக்கர் எனப் பெருந்தலைவர் காமராஜர் நிரூபித்த நேரம்.

*1966* நவம்பர் *1*ஆம் தேதி கள்ளக்குறிச்சியில் காமராஜர் ஆற்றிய காட்டமான உரை சமதர்மத்திற்கும், சமூகநீதிக்கும் எதிராக காங்கிரசுக்குள்ளேயே இருந்தவர்களைக் கடுமையாகச் சாடியது. மறுநாள் டில்லியில் நடந்த காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்தில் பசுவதை தொடர்பான தீர்மானம் எதுவும் வருவதையே காமராஜர் விரும்பவில்லை. பசுவதை என்ற பெயரில் திட்டமிடப்படும் மதவாதக் கிளர்ச்சிகளைக் கடுமையாகக் கண்டித்தார். இந்தப் பின்னணியில் தான் டெல்லியில் நவம்பர் *7*ஆம் தேதி பசுவதைக்குத் தடைகோரி ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது.

நாடாளுமன்ற வளாகத்துக்கு எதிரில் ஆர்பாட்ட மேடை அமைக்கப்பட்டிருந்தது.



பூரி சங்கராச்சாரி, நிரஞ்சன் தேவ், தீர்த்த சுவாமிகள், ஆர்.எஸ்.எஸ் தலைவர் கோல்வாக்கர், பிரபு தத்பிரம்மச்சாரி, கர்பாத்ரி மஹராஜ் உள்ளிட்ட பல்வேறு இந்துத்துவத் தலைவர்களும் உரையாற்றிக் கொண்டிருந்தனர். அன்றைய ஜன சங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் அடல் பிகாரி வாஜ்பேயியும் இருந்தார்.

நாடாளுமன்றத்தில் குளிர்காலக் கூட்டத் தொடர் நடந்துகொண்டிருந்தது. ஜனசங்கத்தின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுவாமி ராமேஸ்வரானந்தர் தொடர்ந்து அவையை நடத்த விடாமலும், சபாநாயகருக்குக் கட்டுப்படாமலும் இருந்தார். 10 நாள்கள் அவையிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டார். இதையடுத்து, ஆர்பாட்டத்தில் திரண்டிருந்த கூட்டத்தின் ஒரு பகுதி, "கோமாதாக்கி ஜே!" என்ற முழக்கத்தோடு, நாடாளுமன்றக் கட்டிடத்தை நோக்கிச் சென்றது. சுதந்திர இந்திய வரலாற்றில் நிர்வாண சாதுக்கள், கையில் சூலாயுதத்துடன் களத்தில் இறங்கியது அதுவே முதல்முறை. ஆர்ப்பாட்டக் கூட்டத்தின் இன்னொரு பகுதி டில்லி நகரத் தெருக்களில் புகுந்து மருத்துவமனை, வானொலி நிலையம் (ஆகாஷ்வாணி) எனப் பலவற்றையும் தாக்கியது.

கலவரத்தைக் கட்டுப்படுத்த, போலீசின் துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது. அன்றைய கலவரத்தில் 8 பேர் பலியாகினர். டில்லி சாலைகளைக் களேபரமாக்கி விரைந்த ஆர்ப்பாட்டக் கும்பலின் முக்கிய இலக்கு காமராஜர்தான். கும்பல் அப்படியே நகர்ந்து காமராஜர் வசித்த டெல்லி இல்லமான ஜன்தர் வீட்டை அடைந்தது. காமராஜர் வீட்டை நோக்கி கற்கள் வீசப்பட்டன. நம்மை சுடச்சொன்னவன் இவன் தான் என்ற குரலோடு வீட்டின் முன்புறம் தீப்பந்தங்கள் வீசப்பட்டன.

முன்புற அறை, குளிர்ப்பதனப் பெட்டி, எல்லாம் தீயில் எரியத்தொடங்க விட்டில் இருந்த காமராஜர் எழுந்து வந்து வீட்டின் முன் நடக்கும் பிரச்சினைகளைக் கவனித்து அவர்களை சமாதானப்படுத்த நினைத்தார். நிலைமை படுமோசமாக இருந்ததால் உடனிருந்தவர்கள் கட்டாயப்படுத்தி அவரை வீட்டின் பின்வாயில் வழியாக வெளியேற்றியதால் காமராஜரின் உயிர் காக்கப்பட்டது. அவரது உதவியாளர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர், வீடும் கடும் சேதத்திக்குள்ளாயிருந்தது.

இந்த படுகொலை முயற்சிக்கு நாடு முழுக்க கடும் கண்டனம் எழுந்தது. ரட்சகர் காமராஜரைக் கொல்ல நடந்த சதி என்று குமுறினார் பெரியார். இந்த கலவரத்தையொட்டி மத்திய உள்துறை அமைச்சராக இருந்த (முன்னாள் இடைக்காலப் பிரதமர்) குலர்சரிலால் நந்தாவிடமிருந்து ராஜினாமா கடிதம் பெறப்பட்டு, பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

அவர்தான் சாதுக்களுக்கான அகில பாரதிய சாது சமாஜத்தைத் தொடங்கக் காரணமானவர். பதவி விலகிய பின்பும் பசு பாதுகாப்புக்காக பிரச்சாரமும் செய்தவர் நேருவுக்குப் பிறகு, காமராஜர் இருக்கிறார், அவருக்குப் பிறகு அந்த இடம் சூன்யமாகும் என்று கார்ட்டூன் போட்டுக் காட்டியது ஆர்கனைசர்.

அன்றும் சரி, இன்றும் சரி, மதவாத வன்முறைகள் நாட்டை ஓரடி கூட முன்னுக்குத் தள்ளியதில்லை என்பதை வரலாறு நிரூபித்துக் கொண்டேயிருக்கிறது. வரலாறு என்பது பின்னே திருப்பிப் பார்ப்பதற்கு மட்டுமல்ல கற்றுக் கொள்வதற்கும் தான்.

**நக்கீரன் - நவம்பர் 14 - 2015**



# அந்தப் பெண்களாக நாம்!

**மகளிர் மன்றம்**

பெருமானார்(ஸல்) அவர்கள் காலத்தில் வாழ்ந்த தலைமுறையை புனரமைக்கப்பட்ட இஸ்லாமிய வரலாற்றின் முதல் தலைமுறையினர் என்று அழைப்பது வழக்கம். அது ஓர் ஒப்பற்ற தலைமுறையும் கூட. நபித்தோழர்களுக்குத்தான் இது பொருந்தும் என்றில்லை. நபிகளாரின் காலத்தில் வாழ்ந்த பெண்களுக்கும் இஃது பெருமளவில் பொருந்தும்.

இறைவனை அஞ்சி நடப்பதில் அந்த ஆண்களுக்கு நாங்கள் சற்றும் சளைத்தவர்களல்ல என்பதை அவர்கள் எல்லா விதத்திலேயும் நிலை நாட்டிக் காட்டினார்கள்.

அல்லாஹ்வின் கட்டளைகள் அந்த மக்களை வந்தடைந்தவுடன் அந்த மக்கள் எப்படித் தங்கள் வாழ்க்கையில் அதனைச் செயல்படுத்தினார்கள் என்பதை அறிஞர் செய்யித் குதுப் ஷஹீத்(ரஹ்) அவர்கள் அழகியதொரு உவமையைக் கொண்டு விளக்குவார்கள்.

**அந்த விளக்கம்**;

போர்க்களம். அதில் முன்னே நிற்கும் வீரர்கள் இவர்களுக்கு எதிரிகள் எங்கே எப்படி பதுங்கிக் கிடக்கிறார்கள் என்று தெரியாது. ஆனால் உயரத்தில் அம்பாரி கட்டி அமர்ந்திருக்கும் தளபதி தொலைநோக்குக் கண்ணாடி வழி எதிரிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்துக் கொண்டே

இருப்பார். அந்தத் தளபதி தக்க தருணம் வந்தவுடன் சுடு என ஆணை பிறப்பிப்பார். ஆணை காதில் பட்டவுடன் சிப்பாய்களின் கைகளிலிருக்கும் துப்பாக்கிகள் வெடிக்கும்.

தளபதியின் ஆணை வந்தபின் அந்தச் சிப்பாய்கள் ஒரு நிமிடம் பிந்தவோ, ஒரு நிமிடம் முந்தவோ மாட்டார்கள். உடனேயே செயல்படுத்தி விடுவார்கள். அதில் தயக்கங்களையோ, கலக்கங்களையோ காட்டமாட்டார்கள்.

அந்த ஆணைகளை எவ்வளவு வேகமாகவும் துல்லியமாகவும் செயல்படுத்திட இயலுமோ அவ்வளவு வேகமாகவும், துல்லியமாகவும் செயல்படுத்துவார்கள். அந்த அளவுக்கு வெற்றிகளும் வந்து குவியும்.

பட்டாளத்துச் சிப்பாய்களைப் போல் தான் இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் காலத்தில் வாழ்ந்த நபித்தோழர்கள் வாழ்ந்தார்கள்.

அல்லாஹ்வின் வழிகாட்டுதல்கள் வந்தவுடன் அவர்கள் அதனைச் செயல்படுத்தி விடுவார்கள். அதனால் தங்களுக்கு வரும் துன்பங்களையும், துயரங்களையும் எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

காலாகாலமாகத் தாங்கள் பின்பற்றி வந்த பழக்க வழக்கங்கள், தங்கள் மூதாதையர்களின் வம்சா வழி பழக்கங்கள் இவையெல்லாம் இறைவனின் கட்டளைகளுக்குக் குறுக்கே நிற்கும் என்றால் இவற்றையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு இறைவனின் கட்டளைகளைச் செயல்படுத்துவார்கள்.

இதில் மணித்துளியும் தாமதிக்க மாட்டார்கள்.

நபித்தோழேர்கள் தாம் இப்படி இருந்தார்கள் என்றில்லை. நபிகளாரின் காலத்தில் வாழ்ந்த பெண்களும் இப்படித்தான் இருந்தார்கள். பெண்களுக்கான இறை ஆணைகளைச் செயல்படுத்துவதில் அவர்கள் துளி நிமிடமும் பிந்தவே இல்லை. அந்தக் கட்டளைகள் அவர்களின் விருப்பங்களுக்கு முந்தைய பழக்கவழக்கங்களுக்கு எதிராக இருந்தாலும் சரியே.

இப்படித்தான் பெண்கள் தங்களது உடலை மறைப்பதற்குரிய இறை ஆணைகள் வந்தபோது உடனே செயலில் குதித்தார்கள். அந்த இறை ஆணை:

“(நபியே!) விசுவாசமுள்ள பெண்களுக்கு நீர் கூறும்! அவர்களும் தங்கள் பார்வைகளைக் கீழ் நோக்கியே வைத்து, தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். (அன்றி, தங்கள் தேகத்தில் பெரும்பாலும்) வெளியில் தெரியக் கூடியவைகளைத் தவிர, தங்கள் அழகையும், (ஆடை, ஆபரணம் போன்ற) அலங்காரத்தையும் வெளிக்காட்டாது மறைத்துக் கொள்ளவும் தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக் கொள்ளவும்.(அல்குர்ஆன்:24:31)

இந்த வசனம் இறங்கியவுடன் அந்தப் பெண்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை அன்னை ஆயிஷா(ரழி) அவர்கள் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்;

“அல்லாஹ் அந்த முஹாஜிர் பெண்கள் மீது அருளைப் பொழிவானாக! தங்கள் முந்தானையால் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும்.(24:31) என்ற அல்லாஹ்வின் கட்டளை இறங்கியவுடன் அவர்கள் தங்கள் போர்வைகளைக் கிழித்து தங்களை முழுமையாக மறைத்துக் கொண்டார்கள்.”

ஸஃப்யா பிந்த் ஷய்பா(ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

“நாங்கள் ஆயிஷா(ரழி) அவர்களுடன் அமர்ந்து கொண்டிருந்தோம். அப்போது நாங்கள் குறைஷி குலத்தைச் சார்ந்த பெண்களின் நற்பண்புகளைச் சிலாகித்துக் கூறிக் கொண்டிருந்தோம். அப்போது ஆயிஷா(ரழி) அவர்கள் எங்களிடம் குறைஷி குலத்தைச் சார்ந்த பெண்கள் நற்பண்புகள் மிக்கவர்கள் தாம். ஆனால், அல்லாஹ்வின் பெயரால் நான் கூறுவேன்; அன்சாரிப் பெண்களைப் போல் அல்லாஹ்வின் கட்டளைகளை அத்துணை கண்டிப்புடன் செயல்படுத்தியவர்களை நான் கண்டதில்லை.”

“தங்கள் முந்தானையால் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும் என்ற அல்லாஹ்வின் கட்டளை இறங்குகிறது.

அன்சாரி ஆண்கள் அன்சாரி பெண்களிடம் வந்து இந்த இறை வசனத்தை (24:31) ஓதிக் காட்டினார்கள். அந்த ஆண்கள் தங்கள் தாய், மனைவி, மகள் சுற்றத்துப் பெண்கள் இவர்களிடமெல்லாம் உடனேயே இந்த வசனத்தை ஓதிக் காட்டினார்கள். இதனைக் கேட்டதும் அந்தப் பெண்கள் எழுந்தார்கள். தங்கள் ஆடைகளை முழுமையாக மறைக்கும் ஆடைகளாக ஆக்கிக் கொண்டார்கள். அவர்கள் தங்களை முழுமையாக போர்த்திக் கொண்ட நிலையில் இறைவனின் தூதர்(ஸல்) அவர்களுக்குப் பின்னால் வந்து நின்றார்கள். அப்போது காக்கைகள் அவர்களின் தலையில் அமர்ந்திருப்பது போல் இருந்தது."

ஆக அன்சாரிப் பெண்களும், முஹாஜிர் பெண்களும் மொத்தத்தில் முஸ்லிம் பெண்கள் அனைவரும் இறைவனின் கட்டளைகளைச் செயல்படுத்துவதில் போர்க்களத்து சிப்பாய்களைப் போல் செயல்பட்டிருக் கின்றார்கள்.

இஸ்லாமிய வரலாற்றின் அந்த முதல் தலைமுறையினர் ஒரு போர்ப் படையின் கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டதால் தான் வெற்றிகளைக் குவித்தார்கள். இன்றளவும் வெல்ல முடியாத வரலாற்றைப் படைத்தார்கள்.

இன்று நாம் பர்தாவால் விளையும் பயன்களைக் கண்கூடாய் கண்டு வருகின்றோம். மேலைநாட்டுப் பெண்களில் பலர் பர்தா, இஸ்லாமியக் குடும்ப அமைப்பு இவைகளால் கவரப்பட்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றனர் என்ற செய்தியை நாம் கேள்விப்படுகின்றோம். மகிழ்கின்றோம். (நான் நிறுவி நடத்தி வந்த விடியல் வெள்ளி மாத இதழில் இதுகுறித்த கட்டுரைகள் பலமுறை இடம் பெற்றுள்ளது)

"பர்தா பெண்களை கற்பழிப்பு போன்ற கொடூரங்களிலிருந்து காப்பாற்றும் கவசம் என்பதை இன்றைய ஆய்வாளர்கள் ஆய்ந்தறிந்து சொல்கின்றார்கள். நாம் ஆச்சரியப்படுகின்றோம்."(பார்க்க விடியல் வெள்ளி அக்டோபர் 2002 தலையங்கம்)

பல்கலைக் கழகங்களில் பயிலும் பெண்கள் தாங்களாகவே முன் வந்து அணிந்து கொள்கின்றார்கள். ஆனால் இந்த ஆடை முறைக்கெதிராகப் போர் தொடுப்பவர்களும் இருக்கின்றார்கள்.

மேலைநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர் டமாஸ்கஸ் பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்தாராம். அங்கே பெண்கள் பர்தா அணிந்து வருவது அவருக்கு மிகுந்த மன உளைச்சலைத் தந்ததாம். அந்தப் பெண்களை எப்படியேனும் பர்தா அணிவதற்கு எதிராகத் திருப்பி விட வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டாராம்.

தனது மன உளைச்சலை இப்படியொரு வினாவின் வழி வெளிப்படுத்தினாராம்.

"இந்த வெயில் காலத்தில் பெண்கள் பர்தா அணிவது உங்களுக்கு அதிக உஷ்ணத்தையும், கஷ்டத்தையும் தரவில்லையா?"

இந்தக் கேள்விக்கு அந்தப் பல்கலைக் கழக மாணவிகள் இப்படிப் பதில் சொன்னார்களாம்;

"நரகத்தின் வெப்பம் இதைவிடக் கொடியதாக இருக்கும்!"

வாய்மூடிப் போனாராம் பத்திரிகையாளர் அந்த பெண்களின் உறுதி கண்டு. இந்த உறுதியை நமது கல்லூரி சகோதரிகளிடமும் கொண்டு வருவோம். (இன்ஷா அல்லாஹ்)


வேர்கள் வெளியீட்டகம்
8148129887
8248208144
52/1, மண்ணடி தெரு,
மண்ணடி,
சென்னை - 600001.




110/-




20/-



# ரஹ்மத் நகர் (எ) மீனாட்சிபுரம்

கள ஆய்வு



## மதமாற்றமா? மனமாற்றமா??

"*1981* இல் நடந்தது போலவே *1954*லிலும் ஒரு சம்பவம் நடந்தது. அப்போதும் காவல்துறை எங்களை அழைத்து சென்று துன்புறுத்தியது. அப்போதே ஊரில் சிலர் நாம் இஸ்லாம் மதத்திற்கு மாறிவிடலாம் என்று ஆலோசனை கூறினர். ஆனால் ஊர் மக்களுக்கு அந்த சமயத்தில் அது புரியவில்லை. அதனால் அந்த முயற்சி கைவிடப்பட்டது. *1981*இல் இரட்டைக் கொலை வழக்கில் காவல் துறை எங்கள் மீது வரம்பு மீறி நடந்து கொண்டதால் ஊர் மக்கள் அனைவரும் ஒருசேர முடிவெடுத்து இஸ்லாத்திற்கு மாறினோம்.

- தீதார் மொய்தீன் (பாத்திமா பீவியின் கணவர்)

**கேசவன் (எ) அஷ்ரஃப் - கணேஷ் (எ) முல்லா**

இந்து மதத்தில் பிறந்து அதன் மூட நம்பிக்கைகள் மற்றும் சாதியக் கட்டமைப்புகளால் வெறுப்பாகி நாத்தீகம், கம்யூனிஸம், புத்திஸம், கிருஸ்தவம் என பல்வேறு மதங்களை ஆய்வு செய்து இறுதியாக இஸ்லாம் தான் அறிவுப்பூர்வமான மனிதனுக்கேற்ற மார்க்கம் என்று அறிந்து 2013 ஆம் ஆண்டு தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் நாங்கள்.

**மீனாட்சிபுரம் (எ) ரஹ்மத் நகர்**

1981 இல் மீனாட்சிபுரம் என்கிற கிராம மக்கள் இந்து மதத்தின் சாதிய தீண்டாமைகளால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து விடுபட இஸ்லாத்தை தன் வாழ்வியலாக ஏற்றுக் கொண்டு இன்று வரை முஸ்லிம்களாக சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதை அறிந்தோம். அவர்களின் இந்த மனமாற்றத்தை பொய்ப்பிக்க பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படுவதையும் கவனித்தோம். ஆதலால் அந்த மக்களை நேரில் சென்று சந்தித்து அது மதமாற்றம் அல்ல பரிபூரண மனமாற்றம் என்பதை நிரூபிக்க நினைத்தோம்.

**மீனாட்சிபுரம் முதல் கள ஆய்வாளர் - மு. குலாம் முஹம்மத்**

கருப்பாயி (எ) நூர்ஜஹான் என்கிற நாவல் அன்வர் பாலசிங்கம் என்பவரால் எழுதி வெளியிடப்பட்டது. 1981இல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மீனாட்சிபுரம் மக்களை மையமாக கொண்டே அந்த நாவல் இருந்தது. ஆனால் மீனாட்சிபுரம் என்ற ஊரை நாவலில் காமாட்சிபுரம் என்று குறிப்பிட்டிருந்தார் கதையாசிரியர் அன்வர் பாலசிங்கம்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட குமரிப் பெண்ணொருத்திக்கு மாப்பிள்ளை கிடைக்காததால் அவள் தற்கொலை செய்துக் கொள்கிறாள். அவளைத் தொடர்ந்து அவளது குடும்பத்தில் உள்ள தந்தை உட்பட ஆறு தற்கொலைகள் நடக்கிறது.

இந்த நாவலின் உண்மைத் தன்மை குறித்து எங்கள் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள் மீனாட்சிபுரத்தில் ஒரு கள ஆய்வு மேற்கொண்டார்கள். அதுதான் மீனாட்சிபுரத்தின் முதல் கள ஆய்வு. அந்த ஆய்வில் அன்வர் பாலசிங்கத்தின் "கருப்பாயி (எ) நூர்ஜஹான்" நாவலின் முகத்திரை கிழிந்தது. அன்வர் பாலசிங்கத்துடன் ஒரு நேர்முக கருத்தரங்கு நடத்தி மேடையிலேயே நாவலில் பொய்களை தோலுரித்துக் காட்டினார் தலித் விடுதலையின் வெற்றி போராளி டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள்.




ஆனாலும் பொய்ப் பிக்கப்பட்ட இந்த புத்தகத்தை மையமாக வைத்து பொதுத் தளத்தில் இயங்கும் சில சமூக ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், பாசிச சிந்தனை கொண்டவர்கள் மீனாட்சிபுரம் மனமாற்றத்தை எப்படியாவது பொய்ப்பித்துவிட வேண்டும் என்று முனைப்போடு இன்றளவும் செயல்பட்டு கொண்டிருக்கின்றார்கள் என்பதை கவனித்தோம்.

ஆதலால் மீனாட்சிபுரம் மனமாற்றத்தைப் பற்றியான மீண்டுமொரு கள ஆய்வை நடத்த திட்டமிட்டோம். எங்கள் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்களின் ஆலோசனைகளோடும், இறைவனின் உதவிகளோடும் மீனாட்சிபுரம் நோக்கி பயணித்தோம்.

தென்காசி பழைய பேருந்து நிலையத்திலிருந்து அரை மணி நேர பயணத்திற்கு பிறகு மீனாட்சிபுரம் ஊர் எல்லையில் இறங்கினோம். அங்கே ஒரு சிறுவன் இருந்தான். "அவனிடம் இங்கே பள்ளிவாசல் எங்கே இருக்கின்றது" என்று கேட்டோம். அம்மாவுடன் வேறு எங்கோ சென்று கொண்டிருந்த அச்சிறுவன் நாங்கள் கேட்டதும், எங்களுக்காக வந்து பள்ளிவாசலுக்கு அழைத்து சென்றான். நாங்கள் பள்ளிவாசலை அடைந்தோம். அந்த சிறுவனுக்கு நன்றி கூறி அவனது பெயரைக் கேட்டோம். "கவுதம்" என்றான்.



பள்ளியின் உள்ளே நுழைந்தோம். அது லுஹர் தொழுகைக்கான நேரம். எல்லோரும் தொழுகைக்கு வந்துக் கொண்டிருந்தனர். தொழுகை ஆரம்பமானது. அவர்களோடு சேர்ந்து நாங்களும் லுஹர் தொழுகையை நிறை வேற்றினோம்.

பின்னர் தொழுகை முடிந்தவுடன் நாங்கள்

வந்ததற்கான நோக்கத்தை அங்கே குழுமியிருந்தவர்களிடம் கூறினோம். அப்போது முஹம்மது ஈசா என்பவர் முன் வந்து, "பத்திரிகையாளர்களுக்கு நாங்கள் பேட்டிக் கொடுப்பதில்லை. நாங்கள் சொல்வதை அவர்கள் ஒழுங்காக எழுதுவதில்லை. எங்களைப் பற்றி தவறாக எழுதி விடுகிறார்கள்" என்று கூறினார்.

நாங்கள் ஏற்கனவே மீனாட்சிபுரம் பற்றி வைகறை வெளிச்சம் இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளை காண்பித்தோம். அப்போது அவர்களுக்கு எங்கள் மேல் ஒரு நம்பிக்கை வந்தது. "தம்பி நாளை ஜும்ஆ. ஊர் மக்கள் நிறைய பேர் பள்ளிக்கு வருவார்கள். அதனால் நாளை வந்தால் நிறைய மக்களை சந்திக்கலாம்" என்றார் முஹம்மது ஈசா.

சரி. என்று கிளம்பினோம்.

அடுத்த நாள். ஜும்ஆ விற்கு சென்றோம். ஜும்ஆ தொழுகை முடிந்ததும் ஒலிப்பெருக்கியில், "சென்னையிலிருந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட இரண்டு சகோதரர்கள் நம்மை சந்திக்க வந்துள்ளார்கள். அவர்களிடம் முஸாபா செய்துக் கொள்ளுங்கள்" என்று அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து அனைவரும் எங்களை ஆரத்தழுவி வரவேற்றார்கள்.



அதன் பின்னர் அவர்களிடம் உரையாடினோம்.

**முஹம்மது ஈசா**

**கேள்வி**: நீங்கள் 1981இல் இந்த ஊரே மதம் மாறிய போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டீர்கள். இப்போது சுமார் 38 ஆண்டுகள் கடந்து விட்டது. இப்போது எப்படி உணர்கிறீர்கள்?

**பதில்**: நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முஸ்லிம்கள் என்பதையே மறந்து விட்டோம். பழைய கதைகளை எங்களிடம் கேட்காதீர்கள். நாங்கள் முஸ்லிம்கள் அவ்வளவுதான். எங்களுக்கு




இப்போது எந்த அச்சமும் இல்லை. நாங்கள் இப்போது யாருக்கும் அடிமையில்லை. எங்கள் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே நாங்கள் பயந்தவர்கள். எங்களுடைய இந்த இஸ்லாமிய மார்க்கத்தில் நாங்கள் ஒழுக்கத்துடன் அல்லாஹ்வை இறையச்சத்தோடு தொழுது இந்த மார்க்கத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம். "நீங்கள் மதம் மாறியவர்களாமே" என்று இனி மீடியாக்கள் எங்களிடம் கேட்க வேண்டாம். நாங்கள் முஸ்லிம்கள் அவ்வளவுதான்.

**கேள்வி**: இப்போதும் இந்த ஊரில் சகோதர சமூகத்தை சார்ந்த மக்கள் உங்கள் உறவினர்களாக, நண்பர்களாக இருக்கலாம். அவர்களின் நிலை குறித்து சொல்லுங்கள்!

**பதில்**: அவர்கள் வழக்கம் போல் அப்படியே தான் இருக்கிறார்கள். அவர்களுடைய கலாச்சாரத்தில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எங்களுடைய அண்ணன் தம்பிகள் சில பேர் இந்துவாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் ஏதாவது விழா என்றால் நாங்கள் கலந்து கொள்வோம். ஆனால் அங்கே நாங்கள் சென்றாலும் இஸ்லாமிய மார்க்கம் சொல்லித் தந்த வழிமுறைகளை அளவுகோலாக கொண்டே அவர்களின் விழாக்களில் கலந்து கொள்வோம். எங்கேயும் எங்களுடைய இந்த இஸ்லாமிய மாக்கத்தை நாங்கள் விட்டுக்கொடுப்பதில்லை.

**கேள்வி**: நீங்கள் உங்கள் பிள்ளைகளை பரம்பரை முஸ்லிம்களுக்கு மத்தியில் திருமணம் செய்து கொடுத்துள்ளீர்களா? அந்த மாதிரியான சம்பவங்கள் இந்த ஊர் மக்கள் மத்தியில் நடந்துள்ளதா?

**பதில்**: என் பிள்ளைகளுக்கு பூர்வீக முஸ்லிம்களிடத்தில் தான் திருமணம் செய்து கொடுத்துள்ளோம். அல்லாஹ்வுடைய கிருபையால் நல்லபடியாக உள்ளார்கள். எங்கள் ஊரில் இருந்து நிறைய பெண்களை பூர்வீக முஸ்லிம்கள் திருமணம் முடித்துள்ளார்கள். பூவரம்குடி, பன்பொழி, தென்காசி, கடையநல்லூர், வடகறை போன்ற அனைத்து ஊர் முஸ்லிம்கள் மத்தியிலும் பெண் கொடுத்து, பெண் எடுத்து திருமணம் முடித்துள்ளோம். இங்கே பரம்பரை முஸ்லிம் - புதிய முஸ்லிம் என்றெல்லாம் கிடையாது. “முஸ்லிம்கள்” அவ்வளவுதான்.

**கேள்வி**: நீங்கள் இப்போது பல ஊர்களை உதாரணம் காட்டி இங்கெல்லாம் பூர்வீக முஸ்லிம்களிடத்தில் பெண் எடுத்து, பெண் கொடுத்து சம்மந்தம் செய்து கொண்டுதான் இருக்கின்றோம் என்று கூறுகின்றீர்கள்! ஆனால் அன்வர் பாலசிங்கம் என்கிற எழுத்தாளர் “கருப்பாயி (எ) நூர்ஜஹான் என்றொரு நூலை எழுதியுள்ளார். அந்த புத்தகத்தை பற்றின உங்கள் கருத்து என்ன?

**பதில்**: அந்த புத்தகத்தை பற்றி தெரியும். அந்த எழுத்தாளரை தேடிப்பார்த்தோம். எங்கள் கண்களில் அகப்படவில்லை. எங்கள் ஊர் பெண்களை பூர்வீக முஸ்லிம்கள் திருமணம் முடிக்க மறுக்கிறார்கள் என்ற தோணியில் ஒரு புத்தகத்தை எழுதிவிட்டான். அது பொய்யான வரலாறு. எங்கோ பணம் வாங்கி விட்டு எழுதியிருப்பான் போல. அது பொய்யான வரலாறு. அவன் இந்த ஊருக்குள் வந்தால் பெண்களை வைத்து சாணியால் அடிக்க உள்ளோம். களவானிப் பைய!

**முஹம்மது முஸ்தஃபா**

**கேள்வி**: நீங்கள் இப்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லிமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். இப்போது எப்படி உணர்கிறீர்கள்?

**பதில்**: இஸ்லாம் ஒரு நல்ல மார்க்கம். மனிதனை சுயமறியாதையோடு வாழ வைக்கும் மார்க்கம். இப்போது நாங்கள் முஸ்லிமாக இருப்பதால் எங்களுக்கு எங்கே சென்றாலும் மறியாதை உண்டு. “வாங்க பாய்! போங்க பாய்!! என்று தான் அழைப்பார்கள். “நான் ஆலிமிற்கு ஓதியிருக்கிறேன்.”

**கேள்வி**: உங்களுடைய உறவினர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். அவர்களுக்கும் உங்களுக்குமான உறவுகள் எப்படியிருக்கின்றது?

**பதில்**: அவர்களுக்கும் எங்களுக்கும் நல்ல முறையிலான ஓர் உறவு முறை உள்ளது.




**கேள்வி**: உங்கள் பிள்ளைகள் பற்றி சொல்லுங்கள்!


**பதில்**: எனக்கு செய்யது அப்துல் கரீம் என்ற மகனும், கதீஜா பீவி என்ற மகளும் இருக்கின்றார்கள். இருவருக்கும் திருமணம் முடிந்து விட்டது. அல்லாஹ்வுடைய கிருபையால் நல்ல முறையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

**முஹம்மது இஸ்மாயில்**

**கேள்வி**: நீங்கள் இப்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லிமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். இப்போது எப்படி உணர்கிறீர்கள்?

**பதில்**: நான் 1983இல் தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். அப்போது எங்களை கீழ் சாதிக்காரன், தீண்டத்தகாதவன் என்றெல்லாம் கொடுமைப்படுத்தியதால் அதற்கு தீர்வாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். இப்போது நாங்கள் முஸ்லிம்களாக வாழ்ந்து வருகின்றோம். இப்போது எங்களுக்கு அந்த சாதி பாகுபாடுகள், கொடுமைகள் எல்லாம் கிடையாது. நல்ல மறியாதையுடன் வாழ்ந்து வருகின்றோம்.

**கேள்வி**: நீங்கள் வெளியூர்களுக்கு செல்லும் போதோ அல்லது வேறு எங்கோ செல்லும் போதோ நீங்கள் முஸ்லிம் என்ற அடையாளத்துடன் இருக்கும் போது மற்றவர்கள் மத்தியில் உங்களின் நிலை என்ன?




**பதில்**: இந்துக்கள் என்றால் "வாங்க பாய்! நல்லா இருக்கீங்களா?" என்று கேட்பார்கள். முஸ்லிம்கள் என்றால் "ஸலாம்" கூறி வரவேற்பார்கள். இப்படியான மறியாதைகள் நாங்கள் கீழ் சாதிக்காரர்களாக இருக்கும் போது இல்லை. இப்போது முஸ்லிமாக வாழும் போது இருக்கிறது.

**கேள்வி**: உங்களுடைய உறவினர்கள் இந்துக்களாக இருப்பார்கள். அவர்களின் நிலை இப்போது எப்படியிருக்கிறது?

**பதில்**: அவர்களுக்கு அந்த தீண்டாமை பிரச்சனைகளெல்லாம் இருந்தாலும் அவர்கள் அப்படியே இருக்கின்றார்கள். நாங்கள் முஸ்லிம்களாக மாறிவிட்டதனால் எங்களுக்கு அது நீங்கிவிட்டது. ஆனாலும் நாங்கள் அவர்களுக்கு இஸ்லாத்தை நோக்கிய அழைப்பை கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

**கேள்வி**: உங்கள் பிள்ளைகளை பற்றி சொல்லுங்கள்!

**பதில்**: எனக்கு முஹம்மது அஸாருதீன் என்ற மகனும் இஷா முஹம்மது என்ற மகளும் இருக்கிறார்கள். என் மகனுக்கு வரும் வாரம் திருமணம் நடக்க இருக்கிறது. என் மகனுக்கு பார்த்திருக்கின்ற பெண்ணும் இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்றுக் கொண்டவள் தான். என் மகள் இஷா முஹம்மது Bsc. முடித்திருக்கிறாள்.

பள்ளிவாசல் வளாகத்தில் சலீம் என்பவர் டீக்கடை வைத்து நடத்தி வருகிறார். அவர் எங்களை அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்றார். நாம் அவருடன் சென்று அவருடைய வீட்டில் உணவருந்தி விட்டு அவரிடம் பேசினோம்.

**சலீம்**

**கேள்வி**: நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு இப்போது வாழ்ந்து வருகின்றீர்கள். இப்போதைய உங்கள் வாழ்க்கை தரத்தைப் பற்றி கூறுங்கள்!

**பதில்**: நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு எல்லாம் வல்ல இறைவன் எங்களுக்கு நல்ல பரக்கத்தையும் அருளையும் பொழிந்துள்ளான். நல்ல அருமையான வாழ்க்கையை அளித்துள்ளான். நாங்களெல்லாம் முஸ்லிம்களாக மாறியதால் தான் இப்போது இந்த ஊரே கண்ணியமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இஸ்லாத்திற்கு முந்தைய இந்த ஊர் எப்படியிருந்தது என்பது உங்களுக்குத்தான் தெரியுமே! நாங்கள் 1981ல் மதம் மாறிய போது எவ்வளவு எதிர்ப்புகள் எங்களை நோக்கி வந்தன! காவல்துறை ஏவல்கள், அத்வானி வருகை என எண்ணிலடங்கா எதிர்ப்புகள் வந்து குவிந்தன. ஆனால் எங்களை அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. நாங்கள் இந்த தீனுல் இஸ்லாத்தில் நிலைத்து நிற்போம். இஸ்லாத்திற்காக எங்கள் உயிரையும் கொடுப்போம்.

**கேள்வி**: இப்போது உங்களுக்கு இந்துக்கள் மத்தியில் மறியாதை இருக்கிறதா?

**பதில்**: நல்ல மறியாதை இருக்கிறது. நாங்கள் எல்லோரும் சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வருகின்றோம். அவர்கள் வீட்டிற்கு நாங்கள்



செல்வோம், எங்கள் வீட்டிற்கு அவர்கள் வருவார்கள். நல்ல அமைதியாக வாழ்ந்து வருகின்றோம். எந்த சண்டை சச்சரவுகளும் எங்களுக்குள் இல்லை.

**கேள்வி**: உங்களுக்கு திருமணமாகி விட்டதா? எங்கிருந்து பெண் எடுத்தீர்கள்?

**பதில்**: நான் செங்கோட்டையில் பெண் எடுத்து திருமணம் முடித்தேன். ஆனால் என்னுடைய மனைவி இறந்து விட்டார். இப்போது இரண்டாவதாக வடகறையில் பெண் எடுத்து திருமணம் முடித்துள்ளேன். இப்போது எனக்கு அப்துல்லாஹ் என்கிற ஒரு மகன் இருக்கின்றான். என்னுடைய முதல் மனைவி மற்றும் இரண்டாவது மனைவி இருவரும் பூர்வீக முஸ்லிம்கள்தான்.

சகோதரர் சலீம் அவர்களின் அன்பான உபசரிப்பில் மனம் நெகிழ்ந்து நன்றி கூறி அங்கிருந்து புறப்பட்டோம்.




தோழர் திருமா.வளவன் அவர்கள் தன்னுடைய கள ஆய்வில் பாத்திமா பீவீ என்ற மூதாட்டியை பற்றி சிலாகித்து குறிப்பிட்டிருப்பார். அவரைக் காண சென்றோம். அந்த மூதாட்டி நாங்கள் சென்றபோது அப்போது தான் வேலை முடித்து வீட்டிற்கு வந்திருந்தார்கள். எங்களை கண்டதும் அன்புடன் வரவேற்று, “இஸ்லாம் சொல்லக்கூடிய பிரார்த்தனையோடு அமர வைத்தார்கள்.” அவர்களிடம் பேசினோம்;

**பாத்திமா பீவி**

**கேள்வி**: நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லிமாக வாழ்ந்து வருகின்றீர்கள். இப்போது உங்கள் வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளதா?

**பதில்**: எனக்கு நான்கு ஆண் மற்றும் நான்கு பெண் பிள்ளைகள். இப்போது மூன்று ஆண் மற்றும் ஒரு பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் திருமணம் முடிந்து விட்டது. நாங்கள் அனைவரும் அப்படியே இஸ்லாத்திற்கு மாறினோம். இப்போது நாங்கள் சிறப்பாக வாழ்ந்து வருகின்றோம். எங்களுக்கு எந்த கஷ்டமோ, அச்சமோ இப்போது இல்லை. அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே பயப்படுகிறோம்.

**கேள்வி**: உங்கள் பிள்ளைகளுக்கு பூர்வீக முஸ்லிம்களிடத்தில் திருமணம் முடித்துள்ளீர்களா? அதைப்பற்றி சொல்லுங்கள்!

**பதில்**: அல்ஹம்துலில்லாஹ். என்னுடைய மகன்களில் ஒருவன் பழசரக்கு கடை வைத்துள்ளார். இன்னொருவர் பள்ளிவாசலில் ஆலிமாக உள்ளார். இதில் ஆலிமாக உள்ளவனுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். அந்த இரண்டு பெண்களையும் கடையநல்லூரில் உள்ள ஒரு பூர்வீக முஸ்லிம் குடும்பத்தில் தான் திருமணம் செய்து கொடுத்துள்ளோம்.

**கேள்வி**: முஹம்மது நபி(ஸல்) அவர்களைப் பற்றி சொல்லுங்கள்.

**பதில்**: எல்லாம் வல்ல இறைவன் அவரைத் தேர்ந்தெடுத்து, அவருடைய வார்த்தைகளில் இறைக்கட்டளைகளை இறக்கி அதற்கு நற்பலன்களை கொடுத்திருந்தான். முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கஷ்டப்பட்டு இந்த இஸ்லாத்தை நிலை நாட்டினார்கள். அதில் பிடிப்போடு நின்றார்கள். அதேப்போல் நாங்களும் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியிலும் இந்த மார்க்கத்தில் பிடிப்போடு நிலைத்து நிற்கிறோம்.

**கேள்வி**: இப்போது இந்துக்கள் உங்களை எப்படி நடத்துகிறார்கள்? நல்ல மறியாதை இருக்கிறதா? இல்லை பழைய நிலைமை இப்போதும் தொடர்கிறதா?

**பதில்**: இப்போது எங்களை அப்படியெல்லாம் நடத்த மாட்டார்கள். “ஏய், வா, போ” என்றெல்லாம் அழைத்த காலமெல்லாம் மறைந்து விட்டது. “பாத்திமாம்மா”, வாங்க, போங்க” என்று மறியாதையுடன் தான் அழைப்பார்கள்.

**கேள்வி**: இப்போதும் நிறைய இந்து மக்கள் சாதிய தீண்டாமையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு நீங்கள் என்ன தீர்வாக சொல்வீர்கள்?

**பதில்**: அவர்களுக்கு இன்னும் அல்லாஹ் நாடவில்லை. நபி(ஸல்) அவர்களுடைய பெரிய தந்தை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்போது முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மிகவும்

வருத்தப்பட்டார்கள். அப்போது அல்லாஹ் கூறினான்; "யா முஹம்மதே நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள். நான் நாடினால் தானே அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வார்." ஆக அவர்களுக்கு நாம் நம் செயல்கள் மூலம் இஸ்லாத்தை புரிய வைக்க வேண்டும்.

இன்று நான் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது என்னுடைய மகன் எனக்கு சில தின்பண்டங்களை வாங்கிக் கொடுத்தான். என்னால் அவைகளை சாப்பிட முடியாது. அதனால் அதை அப்படியே எடுத்துக் கொண்டு வந்து ஒரு இந்து பெண்ணுக்கு அன்பளிப்பாக கொடுத்தேன். இப்படி செயல்பாடுகள் மூலம் நாம் அவர்களோடு ஒன்றியிருந்துக் கொண்டு அவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தால் அல்லாஹ் நேர்வழி காட்டிவிடுவான். முஹம்மது நபி(ஸல்) அவர்கள் எல்லோரையும் அரவணைத்துத்தானே வாழ்ந்தார்கள். யாரையும் அவர்கள் புரக்கணித்து விடவில்லையே. அவரைப் பின்பற்றி வாழக்கூடிய நாம் அவருடைய இந்த நடைமுறையை கடைபித்துத்தானே வாழ வேண்டும். அப்படி வாழ்வதால் சகோதர சமூகத்தார்கள் மத்தியில் ஒரு மனமாற்றம் உருவாகும் தானே.

*(பேசிக் கொண்டிருக்கும் போதே மக்ரிஃப் தொழுகைக்கான பாங்கு ஒலித்தது) பாங்கு சொல்கிறார்கள். நீங்கள் சென்று தொழுங்கள். நானும் தொழ வேண்டும். என்று கூறினார் அந்த மூதாட்டி. பிரிய மனமில்லாமல் எழுந்து சென்றோம்)*

*மீனாட்சிபுரத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்கள் அந்த ஊரில் மட்டும் வாழ வில்லை. அதை சுற்றியுள்ள பன்பொழி, வடகறை, மேக்கறை என பூர்வீக முஸ்லிம்களோடு ஒன்றன கலந்து வாழ்வதாக முஹம்மது ஈசா கூறினார். அந்த ஊர் மக்களையும் சந்திக்க வேண்டும் என்று கேட்டோம். சிரமம் பார்க்காமல் எங்களை அங்கேயும் அழைத்து சென்றார்.*

*அங்கே மேக்கறையில் ஒரு குடும்பத்தை சந்தித்தோம்.*

**ஆயிஷா**

**கேள்வி**: *நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். இப்போது முஸ்லிமாக வாழ்ந்து வருகின்றீர்கள். உங்களுடைய இந்த வாழ்க்கை எப்படியுள்ளது?*

**பதில்**: நன்றாக உள்ளது. சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றோம். வெளியில் இந்துக்கள் மத்தியில் நான் செல்லும் போது "ஆயிஷாம்மா" என்று மறியாதையுடன் அழைக்கிறார்கள். இப்போது நான் முஸ்லிமாக வாழ்ந்து வருவதால் என்னிடம் இருந்த "கீழ் ஜாதி" என்ற அடையாளம் அடியோடு அழிந்து விட்டது.




**கேள்வி**: *உங்கள் பிள்ளைகளை பற்றி சொல்லுங்கள்!*

**பதில்**: எனக்கு மூன்று மகள்கள். பாத்திமா, நிஷா, சுபைதா. இரண்டு மகன்களும் இருக்கின்றனர். என்னுடைய மூன்று மகள்களுக்கும் திருமணம் முடிந்து விட்டது. எல்லோரையும் பூர்வகுடி முஸ்லிம்களிடத்தில் தான் திருமணம் முடித்துக் கொடுத்துள்ளோம். அவர்களெல்லாம் நல்ல முறையில் வாழ்ந்து வருகின்றார்கள். என்னுடைய பேரன்/பேத்திகள்; பர்வீஸ் கான், செய்யது அலி, அஜீஸ், சவ்யா, முஜீப், சஹானா என பெரிய குடும்பம் எங்கள் குடும்பம். இன்ஷா அல்லாஹ் நீங்கள் பெருநாளுக்கு எங்கள் வீட்டிற்கு வாருங்கள்! கண்டிப்பாக வர வேண்டும்.

*அவருடைய அன்பான அழைப்பை ஏற்றுக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தோம்.*

*தோழர் திருமா.வளவன் தன்னுடைய கள ஆய்வின் ஆரம்பத்தில் மீனாட்சிபுரம் மனமாற்றத்திற்கு காரணமான இரட்டைக் கொலை பற்றியும் அதில் சம்மந்தமுடைய யூசுஃப் என்பவரை பற்றியும் குறிப்பிட்டிருப்பார்.*

*அந்த யூசுஃப் என்பவரின் வீட்டையும் அவருடைய இப்போதைய சந்ததிகளையும் சந்திக்க வேண்டும் என்று கேட்டோம். முஹ்ம்மது ஈசா எங்களை அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்றார். அவருடன் சென்றுக் கொண்டிருக்கும் போதே யூசுப் பற்றின வரலாற்றை எங்களுக்கு*

சொல்லிக் கொண்டே வந்தார். அவருடைய அந்த வீரதீர செயல்கள் எங்களை வியப்பில் ஆழ்த்தியது. கரையை நோக்கி வேகமாக வரும் கடல் அலைகளை போல யூசுப் - ஐ பார்க்க வேண்டும் என்ற ஆவலும் எங்களுக்கு அதிகமானது.

அவருடைய வரலாற்றை கேட்டுக் கொண்டே வந்த போது யூசுப் - இன் வீடு வந்தது. வீட்டில் யூசுப் - இன் மருமகள் மட்டுமே இருந்தார். யூசுஃப் இப்போது உயிரோடு இல்லை. அவருடைய புகைப்படத்தை மட்டுமே பார்க்கும் வாய்ப்பு நமக்கு கிடைத்தது. அவரைப் பற்றி நாங்கள் அறிந்த வரலாற்றிற்கு ஏற்ற முக அமைப்புடன் கம்பீரமாக தோற்றமளித்தார் யூசுஃப்.

மீனாட்சிபுரம் மதமாற்றம் சம்பவம் நடந்து சுமர் 38 ஆண்டுகள் கடந்தோடிவிட்டது. அந்த ஊர் மக்களின் முதல் தலைமுறைகள் இன்று முஸ்லிம்களாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் பிள்ளைகளின் நிலை குறித்து அறிய ரஹ்மத் நகர்(மீனாட்சிபுரம்) மத்ரஸாவிற்கு அழைத்து செல்லுமாறு கேட்டுக் கொண்டோம். அழைத்து சென்றார் ஈசா பாய். மத்ரஸாவை அடைந்தோம்.

மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் இஸ்லாமிய பாட விழுமியங்களை கற்றுக் கொண்டிருந்தனர். மீனாட்சிபுரம் பள்ளிவாசலில் இமாம் அவர்கள் அந்த மாணவர்களுக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அவர்களிடம் பேசினோம்.

**கேள்வி**: இங்கே சுமார் எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள்?

**பதில்**: சுமார் 70லிருந்து 80 மாணவர்கள் வரை படிக்கிறார்கள். காலையிலும் மாலையிலும் வந்து கல்வி கற்று செல்வார்கள்.

**கேள்வி**: 1981 மதமாற்றத்திற்கு பிறகு முதல் தலைமுறை முஸ்லிம்களின் பிள்ளைகள் இவர்கள்! இவர்களின் நிலை இப்போது எப்படியிருக்கிறது?

**பதில்**: இங்கே பாடம் பயில வரும் பிள்ளைகளுக்கு தங்களது பெற்றோர்கள் முஸ்லிம்களாக மதம் மாறியர்கள் என்ற சம்பவமே தெரியாது. அந்தளவிற்கு அவர்கள் இந்த இஸ்லாமிய மார்க்கத்தோடு ஒன்றிவிட்டார்கள்.

(இந்த பதிலை இமாம் அவர்கள் கூறிக் கொண்டிருக்கும் போதே, இரண்டு மாணவிகள், "ஏய் யாரைப் பற்றி பேசுகிறார்கள்? நம்மைப் பற்றியா பேசுகிறார்கள்?" என்று கேட்டுக் கொண்டதை கவனித்தோம்) பின்னர் அங்கு பாடம் பயிலும் மாணவ/மாணவிகளிடம் நேரடியாக பேசினோம். அவர்கள் எங்களுடன் ஆர்வமாக பேசினார்கள்.

நீங்கள் எப்படி பிற மக்களுக்கு இஸ்லாத்தை எடுத்து சொல்வீர்கள் என்று கேட்டோம். அதற்கு ஆசிஃபா மற்றும் ரௌபினா என்ற இரு சிறுமிகள் அழகாக நடித்துக் காட்டினார்கள்.(பார்க்க படம் 01)


இஸ்லாமிய கல்வியில் "ஆலிமா" ஆக வேண்டும். அதுதான் எங்கள் வாழ்க்கை லட்சியம் என்று கூறினார்கள் அந்த இரண்டு சிறுமிகள்.

ஷைலா பீவி என்ற மாணவி ஆர்வமுடன் முன்வந்து சில திருக்குர்ஆன் வசனங்களை அரபு மொழியில் ஓதிக் காண்பித்தாள்.(பார்க்க படம் 01)

மேலும் மொய்தீன் என்ற சிறுவன் ஆர்வமுடன் வந்து சூரத்துல் ஃபாத்திஹா திருக்குர்ஆன் வசனங்களை அரபியில் ஓதிக் காண்பித்தான். (பார்க்க படம் 02)

இந்த மாணவச் செல்வங்கள் தினமும் காலையிலும் மாலையிலும் ஆர்வமாக வந்து மார்க்க கல்வியை கற்றுச் செல்கின்றனர்.

மேலும் இந்த ஊர் மக்களின் பிள்ளைகளில் பலர் CBSC பள்ளிகளில் கல்வி கற்று வருகின்றனர். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நபர் வெளி நாட்டில் வேலை பார்ப்பதாக முஹம்மது ஈசா கூறினார்.






எங்களுக்கு ஆரம்ப முதல் மீனாட்சிபுரம் ஏன் ரஹ்மத் நகராக மாறியது என்ற கதையை தெரிவித்த ஈசா அவர்களிடம், இறைவன் நாடினால் இந்த மனமாற்றத்திற்கு மையமாக செயல்பட்ட யூசுப் அவர்களை மையப்படுத்தி "மீனாட்சிபுரம் To ரஹ்மத் நகர்" என்று ஆவணப்படமாக எடுப்போம் என்று உறுதியளித்து வந்தோம்.

அதன் பின் *14.07.2019* அன்று சென்னை மன்னடியில் உள்ள வைகறை வெளிச்சம் மாத இதழ் அலுவலகத்தில் வைத்து குலாம் முஹம்மது மற்றும் பேராசிரியர். இல்யாஸ் ரியாஜி அவர்களை வைத்து கள ஆய்வு காணொளியை வெளியிட்டிருந்தோம். இரண்டே நாளி ஒரு லட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்களை கடந்து வெற்றிகரமாக பார்க்கப்பட்டு கொண்டிருக்கின்றது. (அல்ஹம்துலில்லாஹ்).

**Article by: Ashraf Islam & Mullah Umar**

**குறிப்பு**: இந்த கள ஆய்வை அப்படியே படமாக எடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம். எனவே இறைவன் தந்த செல்வங்களை இறைப்பாதையில் செலவழிக்க உதவ முன்வருபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள் : *+91 9486243503.*

# வாழ்த்துகள் இளவல்களே...!

இன்று *14.07.2019* சென்னை, மண்ணடி 'வைகறை வெளிச்சம்' மாத இதழ் அலுவலகத்தில் "மீனாட்சி புரம் *1981*, மதமாற்றமா மனமாற்றமா?" என்ற குறும்பட வெளியீட்டு நிகழ்ச்சி எளிமையாக நடந்தது.

இளவல்கள் முல்லா உமர் (எ) கணேஷ், அஷ்ரஃப் இஸ்லாம் (எ) கேசவன் தேவா இருவரும் இணைந்து உருவாக்கிய குறும்படம் இது.

*1981* ஆம் ஆண்டு இந்தியாவை உலுக்கியது மீனாட்சி புரம் ரஹ்மத் நகராக மாறிய நிகழ்வு. காசுக்காக மதம் மாறிவிட்டனர் என்று கொச்சைப் படுத்தப்பட்டனர் அன்று.

இன்றோ "பரம்பரை முஸ்லிம்கள் ரஹ்மத் நகர் முஸ்லிம்களிடம் சம்பந்த உறவு வைத்துக்கொள்ள முன்வருவதில்லை அதனால் அவர்கள் தற்கொலை செய்கின்றனர்" என்று பிதற்றுகின்றனர் ஃபாசிஸ்டுகள். இந்தப் பொய்யைப் பரப்ப நூல்களை எழுதுகின்றனர்.

அப்படி வந்த நூல்களில் ஒன்றுதான் அன்வர் பாலசிங்கம் என்பவர் எழுதி, வெளியிட்ட "கருப்பாயி என்ற நூர்ஜஹான்" என்ற நாவல்.

அந்த நூலிலுள்ள கட்டுக்கதைகளை உடைத்தெறிகிறது இந்த குறும்படம். ஃபாத்திமா பீவி என்ற மூதாட்டியின் வார்த்தைகள் அன்றைய ஸஹாபிப் பெண்மணிகளை நினைவூட்டுகிறது. முஹம்மது ஈஸா, சகோதரி ஆயிஷா ஆகியோரின் வார்த்தைகள் பொய்யர்களின் முகத்திரையை கிழிக்கிறது.



ரஹ்மத் நகரின் மக்தப் மத்ரஸாவின் மாணவ மாணவியர் "நாங்கள் ஆலிம் ஆவோம். இன்ஷா அல்லாஹ்" என்று மலர்ந்த முகத்துடன் உரத்து முழங்குவதைக் கேட்கையில் புல்லரிக்கிறது.

இளவல்களின் இந்த முயற்சி பாராட்டுக் குரியது. வாழ்த்துகள் இளவல்களே...! உங்களிருவரின் இம்மை, மறுமை வாழ்வை பேரன்பாளன் அல்லாஹ் வெற்றிகரமாக்கி வைப்பானாக.

# நூல் அரங்கம்

| | | |
|---|---|---|
| நூல் | : | விடுதலைப் பெரும் போரில் வீரமிகு உலமாக்கள் |
| ஆசிரியர் | : | பேராசிரியர். எம். ஜவாஹிருல்லா |
| பக்கம் | : | 64 |
| விலை | : | 60.ருபாய் |
| வெளியீடு | : | புத்தொளி பதிப்பகம் |
| தொடர்புக்கு | : | 9500062791 94433332914 |

விடுதலைக்கு முந்தைய இந்தியாவில் முஸ்லிம்களையும் இஸ்லாமிய அறிஞர்களையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வெள்ளைய அதிகாரிகள் எப்படிப் பார்த்தார்களோ அதே பார்வையோடு தான் இப்போதைய இந்துத்துவ அரசுகள் பார்க்கின்றன.

மோடி தலைமையிலான முதல் அரசில் அங்கம் வகித்தவர்கள் இரண்டாம் அரசில் அங்கம் வகிப்பவர்கம் மாத்திரமல்ல, பல கட்சிகளில் ஆதரவில் அமைந்த வாஜ்பாய் தலைமையிலான அரசில் அங்கம் வகித்தோரும் அப்படித்தான்.

வருணாசிரம தர்மத்தின் படி ஆரிய வர்த் இந்து ராஷ்டிராவை அமைத்திடத் துடிக்கும் பயங்கரவாதிகள் இஸ்லாமிய அறிஞர்களைக் கண்டு மிரள்வது ஏன்? பயங்கரவாதிகள் என அவர்கள் மீது முத்திரை குத்தி பொதுச் சமூகத்திலிருந்து அவர்களை விலக்கி வைக்க முற்படுவது எதனால்?

இஸ்லாமிய அறிஞர்களை உருவாக்கும் மத்ரஸாக்களை “தீவிரவாதத்தின் கோவில்” என்று பீதிவயப்பட்டு பிதற்றுவதற்கு என்ன காரணம்?

இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்க வேண்டுமானால் வரலாற்றை அறிவது அவசியம். இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தான் அதிகாரக் கால்களை வைத்தபோது அதை எதிர்த்து முழு வீச்சாக போராடியவர்கள் இஸ்லாமிய அறிஞர்களே!

சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை தம்முடைய மன உறுதியாலும் வீரதீரமான போராட்டங்களாலும் கூர்மையான திட்டங்களாலும் இந்தியாவிலிருந்து விரட்டியடித்தனர்.

பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான போர்களை முன்னே நின்று வழி நடத்த வேண்டிய தேவை ஏற்பட்ட போது அதைச் செய்தார்கள். பின்னாலிருந்து இயக்க வேண்டிய நேரத்தில் இயக்கினார்கள்.பொருள் தேவைப்பட்ட நேரத்தில் திரட்டி வழங்கினார்கள். இன்னுயிர் தேவையெனும் பட்சத்தில் இன்முகத்துடன் உவந்தளித்தனர்.

ஜின்னாவையும் காந்தியையும் முன்னே நிறுத்திவிட்டு பின்னால் நின்று கொண்டனர். இந்த போர் உத்திகளை உடைக்க இயலாமல் உடைந்து போனது பிரிட்டிஷ் அரசு. விட்டால் போதும் என்று ஓடிப் போனது.

மனிதனை வஞ்சிக்கின்ற மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வு கற்பிக்கின்ற, சம நீதிக்கு எதிரான கொள்கை எதுவாயினும் அது எந்தப் பெயரை சூட்டிக் கொண்டு வந்தாலும் மார்க்க அறிஞர்களின் நிலைப்பாடு இதுதான்.

அந்த அநீதியான கொள்கையின் பிதாமகன்கள் இந்திய எல்லைக்குள் பிறந்தவர்களா? வெளியில் பிறந்தவர்களா? என்று அவர்கள் பேதம் பார்ப்பதில்லை.

அநீதியாளர்களிடமிருந்து அப்பாவிகளை காப்பாற்றிட வேண்டும் என்ற மார்க்கக் கட்டளையே உலமாக்களை வழி நடத்திற்று.

“இந்துக்கள் முஸ்லிம்களால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். ஆங்கிலேயர்களுக்கு எதிராக போராடுவது முஸ்லிம்களின் கடமை” என்று ஷா அப்துல் அஜீஸ் தைஹ்லவீ(ரஹ்) அவர்கள் ஃபத்வா வழங்கியிருப்பது அந்த அடிப்படையில் தான்.

மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் கொள்கையின் அடிப்படையில் இந்தியாவில் “ஆரியவர்த் இந்து ராஷ்டிரா” அமையும் போது அதை முழு வீச்சில் எதிர்ப்பவர்களாக இந்த உலமாக்களே இருப்பார்கள் என்பதை இந்துத்துவம் நன்கறியும்.

எனவே தான் இவர்களை உருவாக்கிய மத்ரஸாக்களையும் இவர்கள் உருவாக்கிய மத்ரஸாக்களையும் பயங்கரவாதத்தின் பிறப்பிடம் என்று கூறி பொதுச் சமூகத்தை அச்சுறுத்தி உலமாக்களை வெறுக்க வைக்க முயல்கின்றனர் இந்துத்துவவாதிகள்.

இந்த சூழலில் பேராசிரியர் ஜவாஹிருல்லாஹ் எழுதி வெளியிட்டுள்ள இந்நூல் முக்கியத்துவம் பெறுகிறது.

விடுதலைப் போரில் முன்னே நின்ற வீரமிகு உலமாக்கள் பத்தொன்பது பேரையும் அவர்களின் தியாகங்களையும் குறிப்பிட்டு விட்டு இறுதியாக “உலமாக்களை விமர்சிக்க சங்கிகளுக்கு அருகதையில்லை” என்ற இருபதாவது பகுதியில் சங்கிகளின் துரோக வரலாற்றைத் தொட்டுக்காட்டுகிறது இந்நூல். அது இந்த நூல் உருவானதற்கான தேவையைச் சொல்கிறது.

“இந்தியா தாருல் ஹஸ்பு”(போரிட்டு மீட்க வேண்டிய நாடு) என்ற ஃபத்வாவை வழங்கியது யார்? எப்போது வழங்கினர்? அதன் பின்னணி என்ன? என்பதையெல்லாம் விளக்கும் பகுதி (பக்கம்:12) சிறப்பு.

“டில்லியின் பழைய பெயர் ஷாஜவரான் பாத்”(பக்கம்:25)




ஒத்துழையாமை இயக்கத்தின் முன்னோடி உலமாக்களே(பக்கம்:30)

“பூரண சுதந்திரம் முதலில் கேட்டது உலமாக்களே”(பக்கம்:30)

“வெள்ளையனே வெளியேறு என்று முதலில் தீர்மானம் போட்டது உலமாக்களே”(பக்கம்: 310

1923 ஆம் ஆண்டு அபுல் கலாம் ஆசாத் அவர்களுக்கு தேசத்துரோக குற்றச்சாட்டின் கீழ் ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்ட போது; “ப்பூஞ் இவ்வளவுதானா உங்கள் தண்டனை? இனும் பெரிய தண்டனையை அல்லவா எதிர்ப்பார்த்தேன்” என்று ஆசாத் ஆதங்கப்பட்டார்.(பக்கம்:39)

இப்படி பல அரிய தகவல்களை தாங்கி நிற்கும் இந்த நூல் இளம் தலைமுறை அவசியம் வாசிக்க வேண்டியது பரப்பவேண்டியதும் கூட.

**பேராசிரியர். இல்யாஸ் ரியாஜி**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002